ஜூன் 17, 2001 ~~ரூபா 14.00~~ அறிமுக விலை ரூபா 12.00

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்



ஜெக்கி—முதல் தோல்வி
ஃபிரேஸியரின் மகளானாலும்
3 பிள்ளைகளின் தாயார்!

சமாதான முயற்சியில்
மேல்மட்ட முன்னெடுப்பு:
மற்றொரு நாள்கடத்தல் திட்டமா?

**நாடாளுமன்றம், நீதிமன்றம்:
மோதலில் வெல்வது எது?**

முஸ்லிம் காங்கிரஸ் — நா.ஆ
கட்சிகளுக்கிடையில் பூசல்

கொழும்பு அந்தோனியார்
திருப்பவனி சிறப்பிதழ்



லைலா—ஸ்டைல் வெற்றி
உலக குத்துச்சண்டை வீரர்
முகம்மது அலியின் மகள்

# கொழும்பில் அரச ரவுடித்தனம்!



# கிழக்கில் பெரிய யுத்தம் வெடிப்பதற்கான அறிகுறிகள்

அரச படையினரும் புலிகளும் கிழக்கு மாகாணத்தில் ஆங்காங்கே தாக்குதல்களில் ஈடுபட்டு வருவது அங்கு பெரும் யுத்தம் ஒன்று ஏற்படப் போவதை எதிர்வு கூறுவது போலத் தெரிகிறது.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை, படுவான்கரைப் பகுதிகளில் புலிகளின் மூத்த தாக்குதல் தளபதி கருணாவின் நடமாட்டம் படையினரின் வயிற்றில் புளியைக் கரைத்திருக்கிறது.

அவரது தலைமையில் புலிகள் அணிகள் பாரிய தாக்குதல் ஒன்றிற்கு தயாராவதாகவே படைத்தரப்பு கருதுகிறது.

ஜூன் 4 அன்று அம்பாறை கஞ்சி குடிச்சாறு காட்டுப்பகுதியில் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட தாக்குதல், புலிகளின் பலத்தை நாடி பிடித்தறியும் ஒரு நடவடிக்கையே. எதிர்பாராத விதமாக மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் சுமார் 14 விடுதலைப் புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர். இவர்களது வெற்றுடல்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் புலிகளிடம் கையளிக்கப்பட்டன.

இதற்குப் பழிவாங்கும் முகமாக புலிகள் வாழைச்சேனை காகித ஆலைக்கு அண்மையில் அமைந்துள்ள இராணுவத்தினரின் நிலைகள் மீது தாக்குதலை மேற்கொண்டனர். சுமார் 150 இற்கும் மேற்பட்ட மோட்டார்க் குண்டுகள் அவற்றின் மீது வீசப்பட்டன.

படையினரும் பதிலுக்குத் திருப்பித் தாக்கினர். இச்சண்டையின் போது ஏழு படையினரும் 2 சிவிலியன்களும் கொல்லப்பட 10 படையினரும் 15 சிவிலியன்களும் காயங்களிற்கு உள்ளாகினர். இத்தாக்குதல் இராணுவத்தினருக்கு கடும் சவாலாக அமைந்திருந்தது. இதனால் கிழக்கு மாகாணத்தில் இது போன்ற தாக்குதல்கள் இன்னும் தொடரலாம்.

இது இவ்வாறிருக்க அக்கினிச் சுவாலை – 1 இராணுவ நடவடிக்கை தோல்வியில் முடிவடைந்து சுமார் ஒன்றரை மாதங்களாகியும் அதன் அதிர்ச்சியில் இருந்து இராணுவ – அரசியல் தலைமைகள் இன்னமும் விடுபட்டதாகத் தெரியவில்லை. தோல்விக்கான காரணங்கள் இன்னும் தேடப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

கடந்தவாரம் இடம்பெற்ற சந்திப்பொன்றின் போது தகவல் தெரிவித்த உயர் இராணுவ அதிகாரி ஒருவர் அக்கினிச் சுவாலை – 1 படைநடவடிக்கை தோல்வியில் முடிவடைய பல காரணங்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.




அவற்றில் படையின ரால் புலிகளது ரேடியோத் தொடர்பாடலைத் தடைசெய்யவும் ஒட்டுக்கேட்கவும் பயன்படுத்தப்படும் ''ஜாமர்'' (Jammer) எனப்படுகின்ற கருவி செயல் இழந்ததும் முக்கியமான காரணங்களில் ஒன்று என்று தெரிவித்துள்ளார்.

புலிகளது தாக்குதலால் தளபதிகள் களத்தில் நிற்கும் குழுத் தலைவர்களுடனும், களமுனைத் தளபதிகளுடனும், புலனாய்வு உறுப்பினர் களுடனும் இடைவிடாது ரேடியோத் தொடர்பு களை வைத்திருப்பதும் அதனூடாக கட்டளை களையும், தகவல்களையும் சந்தேகக் குறியீடு களையும் வழங்குவது வழக்கம்.

இவர்களது வழிநடத்தலில் தான் பெரும்பாலும் ஒரு தாக்குதலின் வெற்றிதோல்வி தங்கியிருக்கிறது. இதனால் தான் இதனைத் தடைசெய்யவும், ஒட்டுக் கேட்கவும் என படையினர் பல மில்லியன் ரூபா செலவு செய்து மிகவும் உயர்வான அதிர்வலைகளை உடைய ''ஜாமர்'' தொலைத் தொடர்பு சாதனத்தை கரையோர விமானங் களில் (Beach Craft) பொருத்தி இயக்கி வந்தனர்.

ஆனால் கடந்த அக்கினிச் சுவாலை—1 நடவடிக்கையின் போது இந்த ''ஜாமர்'' தொலைத் தொடர்பு சாதனம் இடைநடுவில் காலைவாரிவிட்டது. படையினருக்கு இது பெரும் தலையிடியைக் கொடுத்துவிட்டது மட்டுமன்றி தோல்விக்கான முக்கியமான காரணியாகவும் அமைந்துவிட்டது.

இதனாலேயோ என்னவோ ஒவ்வொன்றும் சுமார் 8 கோடி ரூபாய் பெறுமதியான இரண்டு அதி நவீன ''ஜாமர்'' தொலைத் தொடர்புக் கருவிகளை பிரான்ஸிடம் இருந்து கொள்வனவு செய்ய இராணுவம் ஒப்பந்தம் செய்திருந்தது. இந்த இரு கருவிகளும் அடுத்த மாத இறுதிக்குள் இலங்கை வந்து சேரவிருப்பதாக நம்பகரமாகத் தெரியவருகிறது.

மேலும் தகவல் தெரிவித்த அந்த அதிகாரி அக்கினிச் சுவாலை—1 நடவடிக்கையின் போது முதல் நாள் முன்னேற்றத்தின் போது பெரிய அளவில் படையினர் இடங்களைக் கைப்பற்றிய போதும் அவற்றை முற்றாகத் துப்பரவு செய்ய முடியவில்லை.

அதனால் அதற்குள் அகப்பட்டுக்கொண்ட புலிகளின் மோட்டார் அணி உறுப்பினர்கள் முன்னேறிய படையினரை பின்புறமாக இருந்தும் தாக்கத் தொடங்கினர். ஏற்கனவே புலிக ளின் இடைவிடா மோட்டார், ஆட்டிலறித் தாக்குத லுக்கு முகம் கொடுக்க முடியாது திணறிய படை யினருக்கு பின்புறமாக இருந்து வந்த தாக்குதலை சமாளிக்க முடியவில்லை.

இதனால் படைத்தரப்பில் இறந்தோரின் எண்ணிக்கை அதிகமாக அவர்கள் தமது பழைய நிலைக்குத் திரும்ப வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இப்படி அவ்வதிகாரி விளக்கிக் கூறினார்.

புலிகள் மறுநாள் படையினர் மீது பெரும் அழித்தொழிப்புத் தாக்குதலை நடத்தவே படையி னர் தமது மோட்டார் படையணிகளை படை நிலைகளுக்கு அணித்தாக நகர்த்தியிருந்தனர் என்றும் அவர் கருத்து வெளியிட்டார்.

புலிகள் மறுநாள் தாக்கத் தயாராக இருப் பதாக அறிந்துகொண்ட படையினருக்கு புலி களது படையணிகளின் நகர்வு மட்டும் தெரி யாமல் இருந்தது. இராணுவ புலனாய்வுத் துறையின் நம்பகத்தன்மையையும், திற மையையும் கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது.

ஒரு படை நடவடிக்கைக்கு கனரக ஆயு தங்கள் எவ்வளவுக்கு முக்கியமானதோ அவ்வளவுக்கு புலனாய்வுத் தகவல்களும் முக்கியமானவை.

இதேவேளை கடந்த வாரம் நாம் இக்கண் ணோட்டத்தில் கூறியது போல புலிகளின் நட மாட்டம் யாழ் மாவட்டத்தின் கரையோரப் பகு திகளில், விசேடமாக நாகர்கோயில் மற்றும் கிளாலியை அண்டிய பகுதிகளில் மேலும் அதிகரித்திருப்பதாக பிந்திக்கிடைத்த புல னாய்வு அறிக்கைகள் கூறுகின்றன.

சமாதான முயற்சியின் அடுத்த கட்ட நகர் வுக்கு முன் புலிகள் அழித்தொழிப்புத் தாக்கு தல் ஒன்றையோ அல்லது அதனை முறியடிக்க முன்கூட்டிய படைநகர்வு ஒன்றையோ மாவட் டத்தில் மேற்கொண்டால் ஆச்சரியப்பட எதுவு மில்லை.

# வடக்கே வரும் விமானங்களுக்கு வில்பத்துக் காட்டில் பொறியா?

வில்பத்து காட்டுப் பகுதிக்கு மேல் பறந்து கொண்டிருந்த விமானப் படையின் விமானம் ஒன்றை நோக்கித் தரையில் இருந்து தாக்குதல் நடத்தப் பட்டதா?

ஸ்ரீ லங்கா விமானப் படை வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள வினா இது.

கடந்த 7 ஆம் திகதி வியாழக்கிழமை முற் பகல் வானில் தென்பட்ட விமானம் ஒன்றை நோக்கித் தரையில் இருந்து ஏவுகணைத் தாக் குதல் போன்ற தாக்குதல் நடத்தப்பட்டதைத் தாங்கள் நேரில் கண்டதாக வில்பத்து காட்டுப் பகுதியில் வசிக்கும் சிலர் முறையிட்டிருந்தனர்.

பொதுமக்கள் தெரிவித்த இந்தத் தகவல் பொலிஸார் மூலம் விமானப்படைத்தலைமை யகத்துக்கு உடனடியாகவே அறிவிக்கப்பட்டது.

நிலத்தில் இருந்து வானை நோக்கி கிளம்பிச் சென்ற சன்னங்கள் விமானத்தின் அருகே வெடித்துச் சிதறிப் புகை கக்கியதைத் தாங்கள் கண்டதாகக் காட்டுவாசிகள் கூறியிருந்தனர்.

அது நிச்சயமாகத் தரையில் இருந்து செலுத் தப்பட்ட ஏவுகணையே என்று அவர்கள் திடமாக நம்புகின்றனர்.

இந்தத் தகவல் விமானப்படைத் தளங்களுக்கு உடனடியாகத் தெரிவிக்கப்பட்டதும் வடக்குக்கான சகல விமானப் பறப்புக்களையும் முன்னெச்சரிக் கையுடன் மேற்கொள்ளுமாறு விமானிகள் எச்சரிக்கப்பட்டனர்.

அநுராதபுரம் விமானப்படைத் தளத்தில் இருந்து குறிப்பிட்ட எண்ணிக்கையான படையினரையும் அவர்களது பொருள்களையும் ஏற்றிக்கொண்டு வடக்குநோக்கிப் பறந்து கொண்டிருந்த விமானத்தை நோக்கியே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்பட்டது.

அநுராதபுரம் தளத்தில் இருந்து கிளம்பும் விமானங்கள் நேரே வடக்கு நோக்கிச் சென்று வில்பத்து காட்டுப்பகுதிக்கு மேலாக மேற்கு நோக்கித் திரும்பி மன்னார் வளைகுடாவுக்கு அப்பால் கடலுக்கு மேலாக வெகுதூரம் பறந்து அங்கிருந்தே பலாலி விமானத் தளத்தைச் சென்றடைகின்றன.

காட்டுவாசிகள் கண்டதாகக் கூறும் தாக்குதல் நடந்த சமயம் சம்பந்தப்பட்ட விமானம் வானில் 20 ஆயிரம் அடி உயரத்தில் பறந்துகொண்டிருந்ததாக விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

அந்தளவு உயரத்தில் பறந்து கொண்டி ருக்கும் விமானங்களை சாதாரண துப்பாக்கி அல்லது றொக்கட்டுக்களால் தாக்குவது இலகுவானதல்ல.

வியாழனன்று நடந்த சம்பவம் தொடர்பாக உடனடியாக விசாரணைகளை நடத்த விமானப் படையின் அதிகாரிகள் குழுவொன்று வில்பத்து வனப்பகுதிக்கு அனுப்பப்பட்டது. தாக்குதல் நடந்ததாகக் கிராமவாசிகள் தெரிவித்த விடயங் களை நேரில் அறிந்து உறுதிப்படுத்திய பின்னர் இவர்கள் படையினரின் உதவியுடன் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் இடத்தை அடை யாளம் காணும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால் விசாரணை நடத்தச் செல்லும் குழுவினர் முதலில் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டி இருக்கும்.

வவுனியா, மன்னார், அநுராதபுரம், புத்தளம் ஆகிய மாவட்ட எல்லைகளை இணைக்கும் பரந்த வனப்பிரதேசம் வில்பத்து.

இலங்கையில் உள்ள இரண்டு பெரிய இயற்கைச் சரணாலயங்களில் அதுவும் ஒன்று.

வடக்கு – கிழக்கு யுத்தம் தீவிரமாகும் வரை அந்த அடர்ந்த வனம் விலங்குகளினதும், பறவைகளினதும் சரணாலயமாக – அமைதிப் பூங்காவாகத் தான் இருந்தது. ஆனால் அதன் பின்னர் தான் அங்கு நிலைமை மாறிப்போய் விட்டது.

இந்த வனப் பகுதிக்குள் விடுதலைப் புலிகள் புகுந்து விட்டதாகத் தகவல் கிடைத் ததைத் தொடர்ந்து 1980 களின் இறுதியில் இருந்து அங்கும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன.

வனத்தின் முக்கிய மையங்களில் காவல் நிலைகள் அமைக்கப்பட்டன. அங்குள்ள கிராமங்களில் பொலிஸ் நிர்வாகமும் விரிவுபடுத்தப்பட்டது.

வில்பத்து காட்டில் மறைவிடங்களில் புலிகள் தங்களது தளங்களை அமைத்திருப்பதாக ஸ்ரீ லங்கா பாதுகாப்புப் படைகள் நம்புகின்றன. மன்னாருக்கும், புத்தளம் கற்பிட்டி ஊடாக நாட்டின் தென்பகுதிக்கும் இடையே ஊடுருவு வதற்கு இந்த வனப் பகுதியே புலிகளுக்கு வாய்ப்பாக இருப்பதாக நீண்ட காலமாக நம்பப்பட்டு வருகிறது.

ஆயுதம் தாங்கிய பெரும் எண்ணிக்கை யான ஊர்காவல் படையினர் குடும்பங்களோடு இந்தவனத்தின் எல்லைகளில் குடியமர்த்தப் பட்டிருக்கின்றனர்.

வனப்பகுதியில் புலிகளின் நடமாட்டங் களைக் கண்டதாக அங்குள்ள கிராமவாசிகள் அடிக்கடி கூறுவது வழக்கம்.

விடுதலைப் புலிகள் பற்றிய இதுபோன்ற பல கதைகள் கர்ண பரம்பரைக் கதைகள் போல அங்கு வசிக்கும் பெரும்பான்மை மக்களிடையே பேசப்பட்டு வருகின்றன.

வில்பத்து வனப் பிரதேசத்தினுள் அடிக்கடி தேடுதல்கள் நடைபெற்று வந்த போதிலும் அங்கு புலிகளின் பெரிய தளங்கள் எதுவும் படையினர் கண்களில் சிக்கியதே இல்லை.

விமானம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தப் பட்டதாகத் தற்போது வந்துள்ள தகவல்களை அடுத்து வில்பத்துக் காட்டுப் பகுதியில் புலிக ளின் நடமாட்டம் பற்றிய செய்திகள் மீண்டும் அடிபடத் தொடங்கியுள்ளன. இந்தக் காட்டுப் பகுதியில் இருந்து ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுவது இது முதல் முறையல்ல.

கடந்த ஆண்டு மார்ச் 30 ஆம் திகதி பலாலி யில் இருந்து கட்டுநாயக்கா நோக்கிச் சென்று கொண்டிருந்த 'அன்ரனோவ் 26' ரக விமானம் ஒன்று நான்கு அதிகாரிகள் உட்பட 36 படையின ருடன் நடுவானில் வெடித்துச் சிதறியது.

வில்பத்துக் காட்டுப் பகுதிக்குக் கிழக்கே அநுராதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த தலாவ பகுதிக்கு மேலே பறந்த சமயமே அந்த விமானம் வெடித்துச் சிதறித் தீப்பற்றி வீழ்ந்து நொருங் கியது. இந்த அனர்த்தத்தில் ரஷ்ய நாட்டு விமானி கள் நால்வரும் கூடப் பலியாகி இருந்தனர்.

அனர்த்தத்தில் சிக்கிய 'அன்ரனோவ்' விமானத்தின் பின்புற இறக்கைப் பகுதியில் துப்பாக்கிச் சன்னங்கள் துளைத்த அடையாளங்கள் காணப்பட்டது தெரியவந்தது.

இச்சம்பவம் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகளின் முடிவில் விமானத்தைப் புலிகளே தாக்கியதாக அறிவிக்கப் பட்டது. வில்பத்துக் காட்டுப் பகுதியில் ஒளிந்திருந்த புலிகள் 50 கலிபர் துப்பாக்கி மூலம் விமானத்தைச் சுட்டு வீழ்த்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

"ஏவுகணை கொண்டு தாக்குதல் நடத்தப்பட்ட தாகக் கூறப்படுவதை ஏற்க முடியாது. விமான எதிர்ப்பு ஏவுகணைகளை புலிகள் வைத்தி ருப்பது நிரூபிக்கப்பட்டிருப்பினும் கூட வில்பத் துக்காட்டுப் பகுதிக்குள் அவற்றை எடுத்துச்செல் வது புலிகளுக்கு அவ்வளவு இலகுவான விடயம் அல்ல" என்று 7 ஆம் திகதி சம்பவம் குறித்து பாதுகாப்பு வட்டாரம் ஒன்று தெரிவித்தது.

கிராமவாசிகள் தெரிவித்த தகவல் நிஜமோ அன்றிக் கட்டுக்கதையோ எது எவ்வாறு இருப்பினும் ஸ்ரீலங்கா விமானப்படையின் விமானப் பறப்புகளுக்கு வில்பத்துக் காட்டுப்பகுதியில் புலிகள் பொறி வைத்துள்ளனர் என்பது மட்டும் உறுதி.

— ஆதர்ஷா தாஸ்

# போர்க்களமான விகாரமகாதேவி பூங்கா

கொழும்பில் பொழுதுபோக்கிற்கான ஒரு சிறந்த இடம் விகாரமகாதேவி பூங்கா, ஆனால் 8ஆம் திகதி காலை அந்தப் பூங்கா ஒரு போர்க்களமாக்கப்பட்டது. குண்டர் கோஷ்டி ஒன்று தாக்குதலில் ஈடுபட்டது. இதனால் அங்கிருந்தோர் சிதறி ஓடினர்.

இச்சம்பவத்தை அறிந்து அங்கு வந்த பிரதி மேயர் தாக்கப்பட்டார். வேறு சில நகர சபை உறுப் பினர்களும் தாக்கப்பட்டுக் காயமடைந்தனர்.

விகாரமகாதேவி பூங்காவின் நிர்வாகம் குறித்து இப்பொழுது ஓர் இழுபறி இருந்து வருகிறது. இதுவரை காலமும் மாநகரசபை யின் நிர்வாகத்திலேயே அது இருந்தது.

ஓரிரு வாரங்களுக்கு முன்னர் நகர அபிவிருத்தி அதிகாரசபை திடீரென பூங்காவின் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. இதனால் மாநகர சபைக்கும் அதிகார சபைக்கும் இடையே பூங்காவை யார் நிர்வகிப்பது என்பது குறித்து இழுபறி ஏற்பட்டுள்ளது. இழுபறிக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை. இந்த இழுபறி நீடிக்கும் நிலையிலேயே பூங்கா போர்க்களமாக்கப்பட்டது.

விகாரமகாதேவி பூங்காவைப் புனரமைப்பதற்காகவே நகர அபிவிருத்தி அதிகார சபை அதன் நிர்வாகத்தைப் பொறுப்பேற்றிருப்பதாகக் கூறப்படுகிறது. இருந்தாலும் மாநகரசபையின் ஊழியர்களே அங்கு தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்கள்.

சமூகசேவைகள், மீனவர் வீடமைப்பு அபிவிருத்தி பிரதியமைச்சர் மேர்வின் சில்வா பூங்காவைப் பார்வையிட அன்று காலை அங்கு சென்றுள்ளார். பாதுகாப்பு ஊழியர்கள் உட்பட ஒரு சிறு பட்டாளமும் அவருடன் சென்றுள்ளது.

இவ்வேளையில் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மாநகரசபை ஊழியர்களை அங்கிருந்து வெளியேறுமாறு சிலர் மிரட்டி யுள்ளனர். தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளது. பூங்காவுக்குள் நடப்பதை அறிந்த மாநகர சபை உறுப்பினர்கள் பலரும் ஏனைய ஊழியர்களும் அங்கு விரைந்துள்ளனர். இரு தரப்பினருக்கும் இடையே பெரும் வாய்த் தர்க்கமும் மூண்டுள்ளது.

இதைத் தொடர்ந்து அங்கு வந்திருந்தோர் தாக்குதலை நடத்தியுள்ளனர். காயமடைந்த பிரதிமேயர் ஜைட்டஸ் பெரேரா நடந்ததைப் பின்வருமாறு கூறியுள்ளார்.

''பூங்காவின் நிர்வாகம் குறித்து சர்ச்சை உள் ளது. இதனால் பூங்காவுக்குள் நுழைய அதிகார சபைக்கு அனுமதி வழங்கப்படவில்லை. எமது ஊழியர்கள் தாக்கப்படுவதாக அறிந்தே இங்கு ஓடி வந்தோம். பிரதிமேயர் என்று நான் கூறிய போதும் அவர்கள் என்னையும் தாக்கினர். பொலிஸார் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருந் தார்கள்.

பூங்காவுக்குள் இருந்த ஒரு கோஷ்டி பலரை விரட்டிக் கொண்டிருந்தது. இவ்வேளையில் நகரசபை உறுப்பினர் எஸ். எச். தாமிஸ் இரத்தம் சிந்தியவாறு பூங்காவுக்குள் ஓடி வருவதைக் கண்டேன்.

எமது ஊழியர்களைக் காப்பாற்றச் சென்ற எம்மை அரசாங்கத்தின் ஒரு கோஷ்டியினர் குண்டர்களை விட்டுத் தாக்கினர்''.

அவர் இவ்வாறு கூறினார்.

அரசாங்க அரசியல்வாதி ஒருவர் தமது மெய்ப்பாதுகாவலர்களுடன் விகாரமகாதேவி பூங்காவின் வாசலை நோக்கி வந்ததைப் பலரும் கண்டுள்ளனர்.

— அவுதானி

# தமிழக ஆளுநருக்கு எதிராக மத்திய அரசு தலையீடு இல்லை

## நீதிமன்றமே தீர்ப்பளிக்கட்டும் என்ற நிலைப்பாடு

தமிழக முதலமைச்சராக ஜெயலலிதாவை நியமித்து அவருக்கு சத்தியப் பிரமாணம் செய்து வைத்த தமிழக ஆளுநர் பாத்திமா பீபி பெரும்பிரச்சினைகளுக்கு ஆளாகியிருக்கிறார். அவரை எவ்விதத்திலும் ஆளுநர் பதவியிலிருந்து அகற்றி விட வேண்டும் என்று ஒரு கூட்டமே களத்தில் குதித்து விட்டது.

ஆளுநர் நடந்து கொண்ட விதம் தவறானது. தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட ஜெயலலிதாவை முதலமைச்சராக அவர் ஏற்றுக் கொண்டது சட்ட விரோதம். ஜெயலலிதாவைப் பதவியிலிருந்து இடைநிறுத்த நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பிக்க வேண்டும் — இவ்வாறு கோரிக்கைகளை வலியுறுத்தி பல வழக்குகள் சென்னை நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

ஜெயலலிதாவுக்கு ஆளுநர் நியமனம் வழங்கியதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் ஒன்றாவது வெற்றி பெற்றால் தமிழக அரசியலில் பெரும் சிக்கல் ஏற்படும். ஆளுநரும், முதலமைச்சரும் பதவி விலக வேண்டிய நிலை வரும்.

ஆளுநரின் பதவிக்கு ஆபத்து என்றால் அது அவர் ஒருவருக்குத்தான் தீங்காக இருக்கும். ஆனால் முதலமைச்சரின் பதவிக்கு ஆபத்து என்றால் முழுத் தமிழகத்திலேயே கலகம் மூழும்.

ஜெயலலிதா அத்தகைய தொரு நெருக்கடி ஏறபடாமல் இருக்க தமது ''கையாள்'' ஒருவரை முதலமைச்சராக்கிவிட்டு பின்னணியிலிருந்து ஆட்டிப்படைக்கலாம்.

பீஹார் மாநிலத்தில் லல்லு பிரசாத் யாதவ் முதலமைச்சராகப் பதவி வகிக்க முடியவில்லை. அத்துடன் அவர் சிறைவாசம் செய்ய வேண்டியவர். ஆனால் உடல் நலம் பாதிப்பு என்று கூறி நீதிமன்றத்திடம் பிணை அனுமதி பெற்று தமது மாளிகையில் ராஜ வாழ்வு நடத்துகிறார். முதலமைச்சர் பதவியில் தமது மனைவியை இருத்திவிட்டு ''ரிமோட் கொண்ட்ரோல்'' மூலம் பீஹாரை ஆட்சி நடத்துகிறார். அரசாங்க பைல்களை அவரே பார்ப்பார். மனைவி கையெழுத்துப் போட வேண்டியது தான்.

ஜெயலலிதாவுக்கு அத்தகைய வசதி கிடையாது. காரணம் அவர் ஒரு ''செல்வி'' எனவே ''ரிமோட்கொண்ட்ரோல்'' வேலைப் பாடுகளில் அவர் ஈடுபடுவது கஷ்டம். எனவே கட்சிக்குள் குத்து வெட்டுகள் ஏற்படும்.

இதற்கிடையில் தமிழக ஆளுநரை மத்திய அரசாங்கம் திருப்பி அழைத்துக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வருகிறது.

பிரதமர் வாஜ்பாயின் பாரதீய ஜனதா கட்சியின் தமிழ்நாட்டு பிரிவினர் அண்மையில் கூட்டம் நடத்தி ஆளுநரைத் திருப்பி அழைக்கும் படி மத்திய அரசை வலியுறுத்தினர்.

தி.மு.க பொதுச் சபைக் கூட்டத்தில் இதே கோரிக்கை நிறைவேற்றப்பட்டது.

ஆனால் பிரதமர் வாஜ்பாயோ தமிழக ஆளுநரைத் திருப்பி அழைக்கும் எண்ணம் மத்திய அரசுக்கு இல்லை என்று கூறிவிட்டார். உள்துறை அமைச்சர் அத்வானியும் அதே கருத்தைத்தான் வெளியிட்டு இருக்கிறார்.

அத்வானி கடந்தவாரம் சென்னைக்கு வந்திருந்தார். ''தமிழக ஆளுநருக்கு எதிராக நீதிமன்ற வழக்குகள் நடைபெறுகின்றன. எனவே, இது விடயத்தில் சட்டம் தனது தீர்ப்பை வழங்கட்டும் மத்திய அரசு அதற்குள் குறுக்கிட்டு தமிழக ஆளுநரைத் திருப்பி அழைக்காது'' என்று அத்வானி கூறினார்.

சென்னை விஜயத்தின் போது அத்வானி ஆளுநர் மாளிகையில்தான் தங்கினார். அவரை ஆளுநர் சந்தித்து உரையாற்றினார். ஆனால் கருணாநிதி சந்திக்கவில்லை.

ஆளுநர் பாத்திமா பீபியைப் பதவி நீக்கம் செய்யும்படி வாஜ்பாய் அரசின் பங்காளியான கருணாநிதியே கேட்டார். ஆயினும் அதற்கு மத்திய அரசு இணங்கவில்லை. இதனால் தி.மு.க வுக்கும் பாரதீய ஜனதா கட்சிக்கும் இடையில் பிளவு ஏற்படுமா என்ற கேள்வி எழுந்திருக்கிறது.

வாஜ்பாய் அரசாங்கம் முஸ்லிம்களுக்கு எதிராகச் செயற்படுகிறது என்ற குற்றச்சாட்டு பொதுவாக இருக்கிறது. இந்நிலையில் பாத்திமா பீபியைப் பதவி இறக்கினால் ஒரு முஸ்லிம் பெண்மணிக்கு அரசாங்கம் தீங்கு ஏற்படுத்தி விட்டது என்ற குற்றச்சாட்டுகள் எழுப்பப்படலாம் இதன் காரணமாகவே வாஜ்பாயும் அத்வானியும் தமிழக ஆளுநர் விடயத்தில் மிகவும் அவதானமாக நடந்து கொள்கிறார்கள்.

ஜெயலலிதா நன்கு திட்டமிட்டு தேர்தல் பிரசாரத்தை சிறப் பாக மேடை யேறறி அமோக வெற்றி யும் பெற்றார் ஆளுநரை எப்படியோ மடக்கிப்பிடித்து முதலமைச்சரும் ஆகி விட்டார். ஆனால் தமது பதவியை நீடித்து நிலை நிறுத்துவது அவ்வளவு சுலபம் அல்ல என்பது அவருக்கு புரிந்து விட்டது.

ஆளுநரின் ஆறுமாதக் கெடுவை நிறைவேற்றுவது அவரால் முடியாத காரியம் அது வரை அமைதியாக இருந்து விட்டு ஒரு இடைத் தேர்தலில் போட்டியிட்டு ஜெயலலிதா வரா விட்டால் தமது கைவரிசையை ஆளுநர் காட்டத் தொடங்குவார்.

இதற்கிடையில் கடந்த சனிக்கிழமை தமிழக ஆளுநர் மாளிகைக்குச் சென்ற ஜெயலலிதா பாத்திமா பீபியுடன் இரகசியமாக உரையாடினார் என்று தகவல் வெளியானது. தமிழகத்தின் விலை மதிப்பற்ற இரு 'செல்விகள்' அப்படி என்னதான் ரகசியம் பேசினார் களோ தெரியவில்லை.

தமிழகத்தில் மீண்டும் மேல் சபையை உருவாக்கி அதன் உறுப்பினராகித் தனது பதவியைக் காப்பாற்றும் எண்ணம் ஜெயலலிதாவுக்கு இருக்கிறது. ஆனால் அதறகு மத்திய அரசின் ஆதரவு கிடையாது.

தமிழக சட்ட சபையில் மூப்பனார், ராம்தாஸ் கோஷ்டியுடன மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஜெயலலிதாவுக்கு இருக்கிறது. அவர்களின் ஆதரவுடன் நம்பிக்கை வாக்கெடுப்பு ஒன்றை நடத்தி தனது பதவியை நீடிக்க ஜெயலலிதா முயலுகிறார் என்று கூறப்படுகிறது.

ராஜாஜி முதல்அமைச்சராக இருந்த போது இவ்வாறு நம்பிக்கை வாக்கெடுப்பு மூலம் தமது பதவியை நீடித்திருக்கிறார் அதே வழியில் செல்ல ஜெயலலிதா முயலுகிறாரா?

ஆயினும் ராஜாஜியை அவ்விதம் ஏற்றுக் கொண்ட தமிழகம் ஜெயலலிதாவையும் ஏற்றுக் கொள்ளுமா?

ஜெயலலிதா ஒரு ஊழல்குற்றவாளி. சிறையில் வாசம் செய்ய வேண்டியவர் ஆயினும் தனது ராசிபலன் காரணமாக உச்சத்தில் இருக்கிறார் இருப்பினும் சட்டம் அளிக்கும் தீர்ப்பு எப்படி இருக்குமோ சொல்ல முடியாது.

—கதாசி

# முஸ்லிம் காங்கிரஸ், நூஆ கட்சிகளிடையே பூசல்!

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் அதன் சகோதரக் கட்சியான தேசிய ஐக்கிய முன்னணிக்கும் (நூ.ஆ) இடையே பூசல் தொடங்கி விட்டது.

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி அமைச்சர் பேரியல் அஷ்ரப். அக்கட்சியின் அதியுயர் பீடத்தை தனது இல்லத்தில் கூட்டி புதிய அதியுயர் பீட உறுப்பினர்களையும் அவர் நியமித்திருக்கிறார். அந்தக் கூட்டமும், நியமனங்களும் சட்டபூர்வமற்றவை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்திருக்கிறது.

இதனாலேயே இரு கட்சிகளுக்குமிடையே பூசல் ஏற்பட்டிருக்கிறது.

சமாதானமாக இவ்விவகாரம் தீர்த்துக் கொள்ளப்படாவிட்டால் முன்பு போலன்றி இம்முறை இது நீதி மன்றம் வரை செல்லலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

தே.ஐ.மு அதியுயர் பீட கூட்டத்துக்கு தே.ஐ.முன்னணியின் செயலரும் மு.கா. தலைவருமான அமைச்சர் ரவூப் ஹக்கீம் அழைக்கப் படவில்லை என மு.கா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் இதனை தேசிய ஐக்கிய முன்னணி மறுத்துள்ளது.

செயலாளரான அமைச்சர் ரவூப் ஹக்கீம் இருக்க தலைவரான அமைச்சர் பேரியல் அஷ்ரப்பினால் தே.ஐ. முன்னணி அதியுயர் பீடக்கூட்டம் கூட்டப்பட்டதை அடுத்து முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்களில் ஒருவித பரபரப்பு ஏற்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து மு.கா அதியுயர்பீட கூட்டம் அவசரமாகக் கூடி இது பற்றி ஆராய்ந்தது.

தேசிய ஐக்கிய முன்னணியில் அரசியல் உயர் பீட கூட்டத்தை கூட்டும் அதிகாரம் அக்கட்சியின் செயலாளரான அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கே உரியது. தலைவரான பேரியல் அஷ்ரப்புக்கு அவ்வாறு அல்ல என்று கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

அமைச்சர் பேரியல் அஷ்ரப்பினால் கூட்டப்பட்ட கூட்டம் அதிகாரம் வழங்கப்படாத சிலரினால் கூட்டப்பட்டது எனவும், அதியுயர் பீட உறுப்பினர் தெரிவு சட்டபூர்வமான தெரிவு அல்ல என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது என்றும் மு.கா பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஆனால் முஸ்லிம் காங்கிரஸின் அதியுயர் பீட தீர்மானத்தை தேசிய ஐக்கிய முன்னணி அதியுயர்பீட உறுப்பினரான சட்டத்தரணி. எஸ்.எம்.எம். யாசின் நிராகரித்துள்ளார்.

அவர் கூறியதாவது:—

''ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இத்தீர்மானம் அக் கட்சியின் முடிவு மட்டுமே ஐக்கிய முன்னணியை அது கட்டுப்படுத்தவோ, பாதிக்கவோ மாட்டாது. தேசிய ஐக்கிய முன்னணி தேர்தல் ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட கட்சி.

கட்சியினால் வழங்கப்பட்டுள்ள தலைமைத்துவ அதிகாரங்களுக்கு அமைவாகவே அமைச்சர் பேரியல் அஷ்ரப் அதியுயர் பீடத்தைக் கூட்டி புதிய அதியுயர்பீட உறுப்பினர்களை நியமித்துள்ளார்.''

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### ஆணைக்குழுவுக்கு எதிர்ப்பு

தென்கிழக்கு கரையோர மாவட்டம் பற்றி ஆராய தனிநபர் ஆணைக்குழு நியமிப்பது தொடர்பாக அமைச்சரவையில் அதற்கான பத்திரங்கள் சமர்ப்பிப்பதை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்த்துள்ளது.

அமைச்சரவையில் இத்தனிநபர் ஆணைக்குழு நியமிப்பது பற்றிய பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்ட போது இதனைத் தாம் எதிர்ப்பதாக, அமைச்சரும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

எதிர்ப்பதற்கான காரணங்களை அவர் அங்கு விளக்கினார். மேலும் விளக்கமளிப்பதற்குத் தனக்கு 2 வார கால அவகாசம் தரவேண்டும் என்றும் அவர் அமைச்சரவையில் கேட்டுக் கொண்டார் என்று முஸ்லிம் காங்கிர ஸின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தென்கிழக்கு கரையோர மாவட்டம் ஜனாதிபதியால் வாக்களிக்கப்பட்ட ஒரு விடயம். இறுதி நேரத்தில் ஆணைக்குழு நியமிப்பது என்பது விவகாரத்தை இழுத்தடிக்க அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சி. இப்படித்தான் முஸ்லிம் காங்கிரஸ் கருதுவதாகவும் அப்பேச்சாளர் தெரிவித்தார்.

அதேநேரம் தென்கிழக்கு கரையோர மாவட்டக் கோரிக்கைகளைக் கைவிடுமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை தமிழ்க் கட்சிகள் அமைப்பு கோரவுள்ளது.

இப்படியான தீர்மானத்தை 10 தமிழ்க் கட்சிகள் அமைப்பு எடுத்திருப்பதாகவும், இது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாகவும் தெரிய வருகிறது.



GERMAN TECHNOLOGY WITH BUILT-IN-BOOSTER
Euromind Active Antenna
for Clear Reception
Of all Channels in all Locations
Importers and Suppliers
UKAAYE
190 - 1st Floor, Bodhiraja Mawatha, (Gaswork Street) Colombo - 11.
Tel: 075-370019, Fax: 075-370018

தலைநகரில்
Maths / Science & Technology
O/L 2001, O/L 2002

| Subject | O/L 2001 | Grade 10 |
|---|---|---|
| Maths | Fri 5.00-7.00 | Fri 3.00-5.00 |
| Science | Thu 5.00-7.00 | Thu 3.00-5.00 |

விரிவுரை W.L.Rajaratnam
EPI
316, காலி வீதி, கொழும்பு - 04.
தொலைபேசி: 075 516790
(St. Peters பஸ்தரிப்பு முன்னால்)


என்டெனா பொருத்துதல்

Get it Installed by professionals
TELECAVE (PVT) LTD.

காண்டம்
S.MANI
142, 2/4, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு - 06.
Tel: 074-519754

CONTINENTAL CATERERS
96, Galle Road, Dehiwela North.

THE ROYAL BAKERY
WELLAWATTA
பாண் மற்றும் சிற்றுண்டி வகைகள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
தொலைபேசி: 074-205041-44


Eurostar
Sole Distributors in Sri Lanka for
UKAAYE
190 - 1st Floor, Bodhiraja Mawatha, (Gaswork Street) Colombo - 11.
Tel: 075-370019, Fax: 075-370018

மலைநாட்டில்
Maths / Science & Technology
O/L 2001, O/L 2002, Grade 9

| Subject | O/L 2001 | O/L 2002 | Grade 9 |
|---|---|---|---|
| Maths | Sat 1.30-3.30 | Sun 10.30-12:30 | Mon / Tue 4.45-6.30 |
| Science | Sat 11.30-1.30 | Sun 8.30-10.30 | Mon / Tue 4.45-6.30 |

விரிவுரை W.L.Rajaratnam
EPI
87/1A, கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி. தொலைபேசி: 032 500475

அவசர திருத்தங்கள்


Guaranteed repair & service by trained technicians
TELECAVE (PVT) LTD.

# சுடர் ஒளி

17 ஜூன், 2001



36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 501409/ 599834
E-mail: sudar@uthayan.com


## சீரழிந்து வரும் சட்டம், ஒழுங்கு நிலைமை

சட்டத்தையும் ஒழுங்கையும் மதித்து நடக்கும் தன்மை நாட்டிலே குறைந்து வருகிறது. இதற்குப் பொதுமக்கள் மீது மட்டும் குற்றம் சுமத்த முடியாது. அரசாங்க அதிகாரிகளும் கூடத் தமது அதிகாரங்களை மீறித் தான்தோன்றித் தனமாகவும் ரவுடித்தனமாகவும் நடக்கத் தொடங்கி விட்டார்கள்.

இதற்கு ஓர் உதாரணம் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் நடைபெற்ற துர்ப்பாக்கிய சம்பவம்.

விகாரமாதேவி பூங்கா தற்போது ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகத்தில் உள்ள கொழும்பு மாநகர சபைக்குச் சொந்தமானது. அந்தப் பூங்காவை அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்க வர்த்தமானி அறிவித்தலுடன் நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஒப்படைத்திருக்கிறது.

கடந்த வெள்ளிக்கிழமை நகர அபிவிருத்தி அதிகார சபையினர் பூங்காவுக்குள் சென்றபோது அவர்களுக்கும் பூங்காவில் இருந்த மாநகர சபை ஊழியர்களுக்குமிடையே தகராறு எழுந்துவிட்டது. அது அடிதடியாக மாறியது. பொலிஸ் பிரிவுகள் வரவேண்டியதாயிற்று. இரு தரப்பிலும் சிலர் காயமடைந்திருக்கிறார்கள். சம்பவத்தில் ஒரு பிரதி அமைச்சரும் மாநகர சபைப் பிரதி மேயரும் மற்றும் சில மாநகரசபை உறுப்பினர்களும் சில வெளியாரும் கூடச் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்.

இந்த விவகாரத்தில் எந்தத் தரப்பில் நியாயம் இருக்கிறது என்பது வேறு விஷயம்.

நகர அபிவிருத்தி அதிகார சபை ஓர் அரசாங்க நிறுவனம். கொழும்பு மாநகர சபையும் அரசாங்கத்தின் ஓர் உள்ளூராட்சி மன்றம். இரண்டு அரசாங்க அமைப்புகளையும் சேர்ந்தவர்கள் சட்டம், ஒழுங்கை மீறி ரவுடித்தனத்தில் ஈடுபடுகிறார்களே!

தகவல் கிடைத்ததும் பொலிஸார் விரைந்து செல்கிறார்கள். அவர்களும் எப்படி நடந்து கொண்டிருப்பார்கள் என்பதைச் சொல்லத்தேவையில்லை.

பொலிஸாரில் ஒழுங்கானவர்கள் இல்லாமல் இல்லை. ஆனால் பெரும்பாலானவர்கள் மீது பொதுமக்களுக்கு நல்லெண்ணமும் நம்பிக்கையும் இல்லை.

தலைநகரில் உள்ள பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு தமிழ்ப் பெண்களைப் பொலிஸார் படுமோசமாகப் பாலியல் சித்திரவதைக்கு உள்ளாக்கினார்கள் என்று அவர்கள் மீது புகார்.

சம்பந்தப்பட்ட இரு பெண்களும் தமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை நீதிமன்றத்தில் சொல்லக்கூடாது என்று மிரட்டி எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறார்களாம். இந்தத் தகவலும் இப்போது கசிந்து விட்டது.

தலைநகர் கொழும்பிலேயே இப்படி என்றால் பிற இடங்களில் எப்படி எப்படி எல்லாம் நடக்கும்?

சமீபத்தில்தானே மன்னாரில் இரு தமிழ் பெண்கள் பாதுகாப்புப் படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார்கள் !

பெண்மணி ஒருவர் ஜனாதிபதியாக இருந்து ஆட்சி செய்யும் இந்த நாட்டிலேயே பெண்கள் இப்படிக் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள்!

தமிழர்கள் என்றால் ஆண், பெண் வேறுபாடோ, வயது வித்தியாசமோ பார்க்காமல் எவரையும் கைது செய்வதும் நீண்ட காலம் அவர்களைத் தடுத்து வைத்துக் கொடுமைப் படுத்துவதும் சகல பாதுகாப்புப் படையினருக்கும் பழக்கப்பட்ட பொழுது போக்குகளாகிவிட்டன.

அவர்கள் காணும் தமிழர்கள் எல்லோரும் ஒன்றில் புலிகள் அல்லது புலிகளின் ஆதரவாளர்கள்தான்! அவசர காலச் சட்டம் அல்லது பயங்கரவாதத் தடைச்சட்டம்— இரண்டில் ஒன்றைப் பயன்படுத்தித் தமிழர்களைக் கைது செய்து காவலில் வைத்து முடிந்த அளவில் அவர்களுடன் மூர்க்கத்தனமாக நடக்கிறார்கள்.

தமிழ்த் தலைவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள், கண்டிக்கிறார்கள். உண்மைதான் அரசாங்கம் கேட்டால்தானே!

ஒரு சில சந்தர்ப்பங்களில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. காலத்தைக் கடத்தி எல்லோரும் எல்லாவற்றையும் மறந்த நிலையில் அவர்கள் விடுவிக்கப்படுகிறார்கள். விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள் மட்டுமே தவிர்க்க முடியாத காரணங்களால் தண்டிக்கப்படுகிறார்கள்.

அரசாங்கமே இப்படியான போக்கை அனுஷ்டித்தால் அரசாங்க அதிகாரிகளோ பாதுகாப்புப் படையினரோ சட்டம், ஒழுங்கிற்கு மதிப்பளித்து சீராக நடக்க முன்வருவார்களா?

அதிகாரத்தில் இருக்கும் பெரும்பான்மையினரில் பேரினவாதச் சகதியில் கால்பதித்துள்ளவர்களுக்குத் தொடரும் போர் காரணமாகத் தமிழர்கள் என்றால் அவர்கள் மீது ஒரு வெறுப்பு. அவர்களைப் பழிவாங்க வேண்டும் என்ற துடிப்பு!

இந்த நிலை மாறாத வரை நாட்டிலே சமாதானம், இன ஒற்றுமை, சுபிட்சம் — இவை எல்லாம் எப்படி இருக்க முடியும்?

# 'உயர் மட்டப் பங்களிப்பு' அரசின் புளியங் கொப்பு!

## சொல்ஹெய்மை அரசு புறந்தள்ளியதற்குப் புலிகள் கண்டனம்

சமாதானப் பேச்சுவார்த்தை பற்றிய புதிய நிலைமை என்ன?

''பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில்!


சந்திரிகா

பேச்சுவார்த்தை முன்னெடுப்புக்கு நோர்வே அரசு உயர்மட்டப்பங்களிப்பு நல்கத் தீர்மானித்திருக்கிறது என்று இலங்கை அரசு அறிவித்திருக்கிறது.

இலங்கை அரசின் அழைப்புக்கு இணங்க நோர்வே வெளியுறவு அமைச்சர் தோப்ஜோன் ஜக்லாண்ட் கடந்த 7 ஆம் திகதி வியாழக்கிழமை கொழும்புக்கு வந்திருந்தார்.

நோர்வேயின் விசேஷ தூதுவர் எரிக்சொல்ஹெய்ம்மையும் அவர் தம்முடன் அழைத்து வந்தார்.

அன்று மாலையே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் ஜக்லாண்டை விருந்துக்கு அழைத்து அவருடன் நீண்ட நேரம் பேசினார்கள்.

அந்தப் பேச்சுவார்த்தையின் பின்னரே இனி நோர்வே அரசு உயர் மட்டப் பங்களிப்பு நல்கப் போகிறது என்று இலங்கை அரசு அறிவித்தது.

வெள்ளி காலையே ஜக்லாண்ட் நோர்வேக்குப் புறப்பட்டார். எரிக் சொல்ஹெய்மும் அவருடன் கூடச் சென்றார்.

கொழும்பில் சொல்ஹெய்ம் என்ன செய்தார்? அவரைக் கவனிப்பார் இல்லை. விருந்துடன் கூடிய பேச்சுவார்த்தைக்கு அவர் அழைக்கப் படவில்லை,


பாலசிங்கம்

கூட வந்தார், போனார் என்ற அளவில் அவருடைய இந்த விஜயம் முடிந்தது.


கடந்த ஏப்ரல் 29ஆம் திகதி இதழில் ''கதிர்காமரின் காய் நகர்த்தல் நோர்வேயை வெட்டி விடவா'' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தோம்.

''எரிக்சொல்ஹெய்ம் புலிகள் மீது அதிக நல்லெண்ணம் வைத்திருக்கிறார் என்ற கருத்து அரசுக்கு ஏற்பட்டுவிட்டது. அதனால் அவரின் நடு நிலைமை கேள்விக் குறியாகி விட்டது.''

எரிக்சொல்ஹெய்முக்கு அமைச்சர் அவையிலே பலர் எதிர்ப்பு, பிரதமர் ரத்னசிறிவிக்கிரமநாயக்க பலசந்தர்ப்பங்களில் அதை வெளிக்காட்டி யிருக்கிறார்.

சிங்கள பேரினவாத இயக்கங்களுக்கும் எரிக்சொல்ஹெய்ம் வேம்பாகக் கசந்தார்.

சமீபத்தில் எரிக் சொல்ஹெய்ம் இலங்கை வந்து விட்டு நேரே அமெரிக்கா சென்றார். அங்கே அரசியல் தலைவர்களைச் சந்தித்து இலங்கை நிலைமையை எடுத்துக் கூறினார். செய்யவேண்டியதைச் செய்து புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்தும் படி இலங்கை அரசுக்குச் சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.


கதிர்காமர்

இதன் பின்னர் கதிர்காமர் அமெரிக்கா சென்றார். அங்கே அரசுத் தலைவர்கள் தம்முடன் நடந்து கொண்ட விதத்திலிருந்து அவருக்கு விஷயம் விளங்கி விட்டது. எரிக் சொல்ஹெய்ம் மீது ஏற்கனவே இருந்த சந்தேகம் வலுத்துவிட்டது.

சொல்ஹெய்மின் அமெரிக்க விஜயத்தின் பின்னர் தான் அமெரிக்காவும் மற்றும் பல உலக நாடுகளும் இலங்கை அரசுக்கு பெருமளவில் அழுத்தம் கொடுக்கத் தொடங்கின.

அதன் விளைவாகத்தான் எரிக்சொல் ஹெய்மை விசேஷ தூதுவர் அந்தஸ்திலிருந்து விலக்கி வைக்க அரசு தீர்மானித்தது.

நோர்வேயை புண்படுத்தாத விதத்தில் அதைச் செய்தாக வேண்டும்.

சொல்ஹெய்ம் நோர்வே அரசாங்க உறுப்பினர் அல்லர். அவர் இப்போது சாதாரணமானவர். அவருடைய முயற்சியால் சமாதானப் பேச்சு நடைபெறும் வாய்ப்பு இதுவரை ஏற்படவில்லை. நோர்வே அரசின் உயர்மட்டப் பங்களிப்புக் கிடைக்குமானால் பலன் கிடைக்கலாம் என்று இலங்கை அரசு நோர்வேயின் வெளிநாட்டு அமைச்சர் ஜக்லாண்டின் கவனத்துக்குக் கொண்டுவந்தது.

இது பற்றிப் பேசுவதற்கு இலங்கை வருமாறு அவருக்கு அழைப்பும் விடுத்தது.

ஓகோ! இலங்கை அரசு பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினைக்கு விரைவில் சமாதானத் தீர்வு காண்பதில் எவ்வளவு கரிசனையாக இருக்கிறது என்று ஜக்லாண்ட் வியந்து போனார். பல தடவைகள் இலங்கை வந்து பரிச்சியப்பட்ட எரிக் சொல்ஹெய்மையும் அழைத்துக் கொண்டு பறந்து வந்தார்.

இந்த விஷயம் லண்டனில் புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கத்துக்குத் தெரியவந்துவிட்டது. லண்டனிலிருந்து வன்னியில் இயக்கத் தலைவர் பிரபாகரனின் கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டுவிட்டது.

### புலிகளின் அறிக்கை

சமாதானப் பேச்சுக்கான நோர்வே அரசின் அனுசரணை முயற்சியின் தரத்தை உயர்த்தி அதை மேம்படுத்தும் சாட்டில் இலங்கை அரசாங்கம் ஒருதலைப்பட்சமாக நடந்து விசேஷ தூதுவர் எரிக் சொல் ஹெய்மைப் படிஇறக்கியதோடு அவரைப் புறந்தள்ளியும் விட்டது.

மேற்கண்டவாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அதிருப்தியும் கவலையும் தெரிவித்து வன்னித் தலைமைச் செயலகத்திலிருந்து அறிக்கை விடுத்துள்ளது. தம்முடன் கலந்து ஆலோசிக்காமல் அரசு மேற்கொண்ட இந்தச் செயல் ராஜதந்திர நடைமுறைகளுக்கு முரணானது என்றும் புலிகள் இயக்கம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களாக சொல் ஹெய்ம் நடுநிலை தவறாது அயராது உழைத்து வந்தார் என்று அவருக்கு அறிக்கையில் பாராட்டும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

எல்லோரும் கொதிக்கிறார்கள்.

எங்களோடு (புலிகள்) இலங்கை அரசும் சேர்ந்து கேட்டுக்கொண்டதன் பேரில் தானே சொல்ஹெய்ம் விசேஷ தூதுவராக வந்தார். இலங்கை அரசு எங்களைக் கலந்து ஆலோசிக்காமல் எப்படி சொல்ஹெய்மை நீக்கி விட்டு இன்னொருவரைத் தருமாறு நோர்வே அரசைக் கேட்க முடியும்? இதை அனுமதிக்க முடியாது. இலங்கை அரசு தன்னுடைய முறைகேடான செயலுக்குப் பதிலளித்தே தீர வேண்டும் என்கிறார்கள் புலிகள்.

எரிக்சொல்ஹெய்மில் இலங்கை அரசு என்ன குறை கண்டிருக்கிறது?

காண்டீபம்

பேச்சுவார்த்தைகள் இன்னும் தொடங்காமல் இருப்பதற்கு அவரா காரணம்? இழுத்தடிப்பது அரசுதானே!

எரிக்சொல்ஹெய்ம் எங்கள் பக்கச் சார்பாக நடக்கிறார் என்று அரசு சந்தேகப்படுவதில் அர்த்தம் இல்லை.

கொழும்பில் உள்ள நோர்வே தூதர் ஜொன் வெஸ்ட் போர்க் நல்ல மனிதர். அவர் கதிர்காமரின் நெருங்கிய நண்பர். கதிர்காமரை அடிக்கடி சந்தித்துப் பேசுகிறார். நாங்களும் அவர் மீது சந்தேகப்படலாம் அல்லவா?

நோர்வே வெளிநாட்டு அமைச்சர் ஜக்லாண்ட் வந்தாலும் சரி வேறு எந்தப் பெரிய மனிதர் எவ்வளவு உயர் மட்டத்திலிருந்து வந்தாலும் சரி நாம் எமது நிலைப்பாட்டிலிருந்து மாறப் போவதில்லை.

சமாதானப் பேச்சுவார்த்தை நடக்க வேண்டுமானால் அதற்கு உகந்த சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும். அதற்குத்தான் போர் நிறுத்தம், பொருளாதாரத்தடை நீக்கம், புரிந்துணர்வு ஒப்பந்தம், எமது இயக்கத்தடை நீக்கம் ஆகியவை அவசியம் என்கிறோம்.


ஜக்லாண்ட்

இப்படிப் புலிகள் கூறுகிறார்கள்.

அரசுக்கு உண்மையில் இவற்றில் எதையும் செய்ய விருப்பம் இல்லை.


இயன்றவற்றை செய்யவிரும்புவது போல் காட்டிக் கொள்ள வேண் டும். அதையே அரசு விரும்பு கிறது.

அப்படியென் றால் தான் சர்வ தேச சமூகத்திட மிருந்து தப்பிக்கொள்ள முடியும்.

நோர்வேயின் உயர்மட்ட முன்னெடுப்பின் போது சில விஷயங்களில் விட்டுக் கொடுக்க அரசு தயாராக இருக்கிறது.

உதாரணமாக புலிகள் இயக்கத் தடையை நீக்குவது என்றால் புலிகள் தமிழீழக் கொள்கையைக் கைவிட வேண்டும். வன்செயல்களை நிறுத்த வேண்டும். இவற்றிற்கான உறுதியைப் பெற்றுத் தரவேண்டும் என்று அரசு கோருகிறது.

முதலில் பேச்சுவார்த்தை மேசைக்குப் போவோம். அங்கே தடையை இடைநிறுத்திவிட்டுப் பேசுவோம். சமாதானம் ஏற்படுமானால் இடை நிறுத்திய தடையை மீண்டும் கொண்டு வரத் தேவையில்லை என்ற கருத்தையும் அரசு முன்வைக்கிறது.


சொல்ஹெய்ம்

இவற்றை எல்லாம் புலிகள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பது அரசுக்கு நன்றாகத் தெரியும். அதனால்தான் இவற்றை முன் வைக்கிறது என்று புலிகளே கூறுகிறார்கள்.

பிரதமர், அமைச்சர்கள் சிலர், எத்தனையோ நாடாளுமன்ற உறுப்பினர்கள், மகா சங்கத்தினரில் பெரும் பகுதியினர், பேரினவாதிகள் — இவர்கள் எல்லோரும் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதை எதிர்க்கிறார்கள். போரைத் தொடர்ந்து செய்து புலிகளைத் தோற்கடிக்க வேண்டும் என்று உறுமுகிறார்கள்.

இவர்களைப் பகைத்துக் கொள்ள அரசாங்கம் தயாராக இல்லை.

அதேவேளை போரில் அல்ல சமாதானத்திலேயே அரசு அக்கறையாக இருக்கிறது என்று சர்வதேச சமூகத்துக்குக் காட்ட வேண்டியுமிருக்கிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக அரசின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐ.தே.க கொண்டு வருகிறது. இந்த நேரத்தில் சமாதானப் பேச்சுவார்த்தை என்ற மந்திரத்தை உச்சரிக்காவிட்டால் தமிழ் எம்.பிக்களின் வாக்குகளும் அரசாங்கக் கட்சியில் உள்ள சிலரின் வாக்குகளும் பிரேரணைக்கு ஆதரவாக ஐ.தே.கவுக்குக் கிடைத்து விடலாம். அப்படிக் கிடைத்தால் அரசு கவிழ்வது நிச்சயமாகி விடும்.

அரசு சுயபாதுகாப்புக்காகவேனும் சமாதான நாடகமாடி நாட் களைக் கடத்த வேண்டியிருக்கிறது. அதற்கு அரசுக்கு இப்போது ''நோர்வேயின் உயர்மட்டப் பங்களிப்பு '' என்ற புளியங்கொப்பு கிடைத்திருக்கிறது. எவ்வளவு காலத்துக்கு அரசு அதைப் பிடித்துத் தொங்கிக்கொண்டு இருக்கப் போகிறது? புலிகள் விட்டால்தானே!

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் அரசு தப்பித் தவறிப் பிழைத்து விட்டால் அப்புறம் ஏற்கனவே நாம் ஏப்ரல் 29 இதழில் குறிப்பிட்டபடி'' நோர்வேக்கு நோ; பேச்சுக்கு நோ கோ; அடுத்த 'சீன்' அதுதான்!''

சர்வதேச சமூகத்தைப் பேய்க்காட்ட வேறு ஏதாவது வித்தை பின்னர் கிடைக்காமலா போகும்!

# ஆஞ்சநேய வழிபாட்டுக்கு அனுபூதிமான்கள் உடன்பாடு

## 'அன்பே சிவத்தை' 'வம்பே சிவமாக்கும்' சைவர்கள் செய்வதே சிவத்துரோகம்

**ஆஞ்சநேய வழிபாடு சைவத்திலே கிடையாது. வேதங்கள் , சைவாகமங்கள், திருமுறைகள் எதிலும் இல்லாதது. சைவர்கள் ஆஞ்சநேய வழிபாட்டில் ஈடுபடுவது சிவத்துரோகம், சைவத்தைச் சீரழிக்கும் செயல். இப்படிச் சுட்டிக் காட்டி லண்டன் மெய்கண்டார் ஆதீனத்துப் புலவர், சித்தாந்தரத்தினம் க.கணேசலிங்கம் பகிரங்கக் கடிதம் ஒன்றைச் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு எழுதியிருந்தார். அந்தக் கடிதம் கடந்த 3 ஆம் திகதி 'சுடர் ஒளி'யில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதற்கு மறுப்பு எழுதியிருக்கிறார் யாழ் இராமநாதன் வீதியைச் சேர்ந்த தி.சத்தியேந்திரா. ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்சர், அவருடைய பிரதம சீடரும் அமெரிக்கா சென்று இந்து சமயத்தின் பெருமையை உலகம் முழுவதும் அறியச் செய்தவருமான வேதாந்த கேசரி சுவாமி விவேகானந்தர் போன்ற அனுபூதிமான்களே எந்த வழிபாட்டு முறையையும் எதிர்க்கவில்லை. ஆஞ்சநேய வழிபாடும் அவர்களுக்கு உடன்பாடானதே. உண்மையில் சிவத்துரோகம் செய்பவர்கள் ஆஞ்சநேய வழிபாட்டில் ஈடுபடும் சைவர்கள் அல்லர். கிணற்றுத் தவளைகளாக உள்ள சைவர்களே. அவர்கள் சமயச் சண்டையில் ஈடுபட்டு ''அன்பேசிவம்'' என்பதை ''வம்பே சிவம்'' ஆக்குகிறார்கள் என்று கண்டிக்கிறார் சத்தியேந்திரா.**

''பார்த்தா! யாதாயினும் ஒரு பாதையைப் பின்பற்றி என்னை யாவன் நாடுகின்றானோ அவனை நான் அடைகின்றேன். ஈற்றிலே என்னை அடைகின்ற பாதையிலே மக்கள் எல்லோரும் முயன்று செல்கின்றார்கள்'' இது ஸ்ரீ கிருஷ்ணனினால் போர்க்களத்தில் அருச்சுனனுக்குப் போதிக்கப்பட்ட ஸ்ரீமத் பகவத் கீதையிலே வரும் ஒரு சுலோகம்.

(ஆதாரம்:— ஸ்ரீமத் பகவத்கீதை:— சுவாமி சித்பவானந்தர்)

ஒரு குழந்தைக்குப் பச்சை பலூன் பிடிக்கும், இன்னோர் குழந்தைக்கு நீல பலூன் பிடிக்கும். நிறங்கள் வித்தியாசமே தவிர பலூன் ஒன்று தான். அது போல் இறைவன் ஒருவன். நாம் விரும்பிய வடிவில் அவனை வழிபடுகின்றோம். இதற்கு எவரும் கட்டுப்பாடு விதிக்க முடியாது.

சைவம் வேறு வைஷ்ணவம் வேறு என்பவர்களுக்கு ஒரு கதை சொல்கின்றேன்.

ஒரு சமயம் நாராயணனுக்கு, அருச்சுனன் பூஜை செய்து கொண்டிருந்தான். ஒரு கட்டத்தில் தனது பூக்கூடையைப் பார்த்தான். பூக்கள் முடியும் தறுவாயில் இருந்தன. மனம் ஏங்கினான். அடடே அயர்ந்து விட்டேன். சிவனுக்குப் பூஜை செய்ய பூக்காணாதே என்று நாராயணன் பூஜையை இடையில் நிறுத்தி விட்டான். சிவலோகம் சென்றான்.

அங்கே அவன் கண்டது என்ன? நாராயணனுக்குப் போட்ட பூக்கள் எல்லாம் சிவனின் பாதத்தில் இருந்தன. இதில் இருந்து விளங்குவது என்ன? எந்த வழிபாடும் இறுதியில் ஓர் இடத்தையே அடைகின்றது.

பல நதிகள், பல ஆறுகள் ஓடுகின்றன. இறுதியில் அவை யாவும் மகா சமுத்திரத்தில் சங்கமம் ஆகின்றன.

''நீ வேண்டுமானால் ஓர் ஆட்டுக் குட்டியைக் கூடக் கும்பிடு, நீ தெய்வத் தன்மையை அடைய அது உதவும். ஏனெனில் அதனுள்ளும் உறைந்து இருப்பது அந்தப் பரம் பொருளே.''

இதனை நான் சொல்லவில்லை. அவதார புருஷராகப் போற்றப்படும் ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சர் கூறினார்.

அந்த வகையில் ஆஞ்சநேய வழிபாடு வைஷ்ணவ வழிபாடு; சைவர்கள் ஆஞ்சநேயரை வழிபடக்கூடாது; அவரை வழிபடுவது சைவத் துரோகம் என்றெல்லாம் கூறுவது உண்மைக்குப் புறம்பானது; அபத்தமானது; சிறுபிள்ளைத்தனமானது.

பசியால் வாடிய பன்றிக் குட்டிகளுக்கு தாய் உருவில் சிவன் வந்து பால் கொடுத்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. அத்தகைய அன்பே உருவான சிவன் ஆன்மாக்கள் விரும்பிய உருவில் வழிபாடு செய்வதனை மிகுந்த மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வாரே அன்றி அதை சிவத் துரோகமாகக் கருதமாட்டார்.

சைவம் கூறுவது என்ன? ''அன்பே சிவம்'' அதை '' வம்பே சிவம்'' என்று ஆக்கி விடக் கூடாது.

சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாணத்தில் கூறிய ஒரு கருத்தை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

எனக்கு எந்த உணவு நல்லது என்பதை என் அனுபவம்தான் எனக்குச் சொல்ல முடியும். ஒரு பெரிய டாக்டர் பட்டாளத்தால் கூட அதைக் கூறமுடியாது. அதுபோல எனக்கு எது மிகவும் நல்லபாதை என்பதை நான் என் அனுபவத்திலிருந்தே அறிந்து கொள்கிறேன்' என்கின்றான் ஒருவன். அது தான் இலட்சியம்.

கோயிலோ சின்னமோ அல்லது ஒரு திருவுருவமோ எதுவானாலும் உங்களுக்குள் இருக்கும் தெய்வீகத்தை நீங்கள் உணர்ந்து கொள்ள உதவுமானால் நீங்கள் அதனை வைத்துக் கொள்ளுங்கள் என்று நாம் சொல்லுகிறோம்.

நீங்கள் விரும்பினால் இருநூறு விக்கிரகங்களையேனும் வைத்துக் கொள்ளுங்கள். சில குறிப்பிட்ட விக்கிரகங்களும் வழிபாட்டு முறைகளும் நீங்கள் தெய்வீகத்தை உணர உங்களுக்கு உதவி செய்யுமானால் அந்த வழியில் விரைந்து செல்லுங்கள். அதற்குக் கடவுள் உங்களுக்கு வலிமையைத் தரட்டும்.

உங்களைக் கடவுளுக்கு அருகே கொண்டு செல்லுமானால் எந்த வடிவத்தையும் எந்தக் கோயிலையும் வைத்துக் கொள்ளுங்கள். எந்த விதமான சடங்குகளையும் தாராளமாகச் செய்யுங்கள். அது குறித்துச் சண்டையிடாதீர்கள். சண்டையிடத் தொடங்குகின்ற அந்தக் கணமே நீங்கள் கடவுளை நோக்கிச் செல்லவில்லை. மிருக நிலையை நோக்கிப் பின்னால் செல்கிறீர்கள்!

இது சுவாமி விவேகானந்தர் 1897ஆம் ஆண்டு ஜனவரி 23ஆம் திகதி மாலை யாழ். இந்துக் கல்லூரியில் கூறியது.

இதை விட மேலாகச் சுவாமிஜி 1893ஆம் ஆண்டு அமெரிக்காவில் சர்வமத சபையில் நிகழ்த்திய உரையில் ஓர் கதை கூறினார். அதையும் இங்கு நோக்குவது நல்லது.

''இப்போது இங்கே பேசிய ஒரு சிறந்த பேச்சாளர் நாம் ஒருவரை ஒருவர் தூற்றுவதை நிறுத்த வேண்டும் என்று கூறியதைக் கேட்டீர்கள். இவ்வளவு வேறுபாடுகள் இருப்பதாக அவர் வருத்தப்பட்டார். இந்த வேறுபாடுகளுக்குக் காரணம் என்ன என்பதை விளக்க ஒரு கதை சொல்ல வேண்டும் என்று நினைக்கின்றேன்.

ஒரு கிணற்றில் தவளை ஒன்று வாழ்ந்தது. நீண்டகாலமாக அங்கு அது வசித்து வந்தது. அங்கேயே பிறந்து அங்கேயே வளர்ந்த அந்தத் தவளை சின்னஞ் சிறியது.

ஒரு நாள் கடலில் வாழ்ந்து வந்த தவளை ஒன்று அங்கு வந்து அந்தக் கிணற்றில் விழுந்து விட்டது.

''நீ எங்கிருந்து வருகின்றாய்?''

''கடலில் இருந்து''

''கடலா? அது எவ்வளவு பெரியது? எனது கிணற்றிலும் பெரிதாக இருக்குமா?'' இப்படிக் கேட்டு ஒரு பக்கத்தில் இருந்து எதிர்ப்பக்கத்திற்கு தாவிக் குதித்தது கிணற்றுத் தவளை.

''நண்பா இந்தச் சின்னக் கிணற்றோடு எப்படிக் கடலை ஒப்பிட முடியும்?'' என்று கேட்டது கடல் தவளை.

கிணற்றுத் தவளை மறுபடியும் ஒரு குதி குதித்து 'உனது கடல் இவ்வளவு பெரிதாய் இருக்குமா?' என்று கேட்டது.

''சேச்சே என்ன முட்டாள்தனம்?'' கடலை உன் கிணற்றோடு ஒப்பிடுவதா?''

''நீ என்ன சொன்னாலும் சரி என் கிணற்றை விட எதுவும் பெரிதாக இருக்க முடியாது. கண்டிப்பாக இதைவிடப் பெரிதாக எதுவும் இருக்க முடியாது. இவன் பொய்யன். இவனை வெளியே விரட்டுங்கள்!'' என்று கத்தியது கிணற்றுத் தவளை.

காலம் காலமாக இருந்து வரும் கஷ்டம் இது தான். நான் இந்து. நான் என் சிறிய கிணற்றுக்குள் இருந்து கொண்டு என் சிறு கிணறு தான் முழு உலகம் என்று நினைக்கின்றேன். கிறிஸ்தவன் தனது மதமாகிய சிறு கிணற்றுக்குள் அமர்ந்து கொண்டு தன் கிணறு தான் முழு உலகம் என்று நினைக்கின்றான். அவ்வாறே ஒவ்வொரு மதத்தினரும் தத்தமது மதங்களைப் பற்றி நினைக்கிறார்கள்.

நமது இந்தச் சிறிய உலகின் எல்லைகளைத் தகர்த்தெறிய அமெரிக்கர்களாகிய நீங்கள் எடுத்துக் கொண்டிருக்கும் பெரிய முயற்சிக்காக நான் உங்களுக்கு நன்றி செலுத்த வேண்டும். வருங்காலத்தில் உங்கள் விருப்பம் நிறைவேற இறைவன் அருள் புரிவான் என்று நம்புகின்றேன்.

இது சுவாமி விவேகானந்தர் அன்று கூறிய கதை. இன்றைக்கும் அது பொருந்தும்.

கட்டிய மனைவியையே தெய்வமாகப் போற்றிப் பூசை செய்தவர் சுவாமி விவேகானந்தரின் குருவான ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சர். இவரைப் போன்ற மிக உயர்ந்த நிலையில் உள்ள அனுபூதிமான்களின் வாழ்க்கை நெறி பொய்யா? இவர்கள் உலகுக்கு எடுத்துக் காட்டிய அன்பு வழி பொய்யா? அவை பொய் என்றால் தான் ஆஞ்சநேய வழிபாடு பிழை என்று முன்வைக்கப்படும் கருத்து எடுபடும்.

''அரியும் சிவமும் ஒன்று; அறியாதோர் வாயிலே மண்ணு'' என்பது ஆன்றோர் வாக்கு. இந்தியாவிலே தான் சைவம் பெரிது வைஷ்ணவம் பெரிது என்று அடிபடுகின்றார்கள் என்றால் அந்தப் புற்று நோய் இன்று இங்கும் வந்து விட்டதே! மூர்த்தங்கள் பலவானாலும் ஆண்டவன் ஒருவனே. மூர்த்தங்களில் பெரிது, சிறிதுபார்ப்பது மூடத்தனம். மூர்த்தங்களே தெய்வங்களாகக் கொள்ளப்படுகின்றன.

ஒரு தெய்வத்தை வழிபட வேண்டாம் என்று இன்னோர் தெய்வம் சொல்லுமா? அப்படியாயின் அது தெய்வமாக இருக்க முடியுமா?

தெளிந்த சிந்தை அற்றவர்களின் கருத்துக்கள் ஆன்மீக நாட்டமுள்ள ஆன்மாக்களில் முழுப் பக்குவம் அடையாதவர்களின் பாதையைத் திசை திருப்பக்கூடும். ஒருவேளை ஆஞ்சநேயரை வழிபடுவது தவறோ என்றுகூட அவர்கள் எண்ணலாம்.

அதற்குக் காரணம் உண்டு. எம் இனிய யாழ் மக்கள் சிலருக்கு கொழும்பு என்றாலே சொர்க்கம். லண்டன் என்றால் சொல்லவும் வேண்டுமா? சொர்க்கத்திலும் சொர்க்கம். லண்டன் மாப்பிளை தேடி அலையும் இக்கலியுகத்தில் லண்டன் மெய்கண்டார் ஆதீனத்தைச் சேர்ந்த ஒருவர் மனம் வருந்தி ஆஞ்சநேய வழிபாட்டைக் கண்டித்தும் அது சைவத்துரோகம் என்று குற்றஞ்சாட்டியும் பகிரங்கக் கடிதம் எழுதினால் அது பெரும் பாதிப்பை ஏற்படுத்தலாம் அல்லவா? எனவேதான் இந்தக் கட்டுரை.

லண்டனில் என்ன, யாழ்ப்பாணத்திலும் இன்று மதவெறி கொண்ட கூட்டம் ஒன்று உண்டு.

சண்டை இடாதீர்கள். வேதாந்த கேசரி சுவாமி விவேகானந்தர் கூறியது போல் கிணற்றுத் தவளையாக வாழாது வெளி உலகுக்கு வாருங்கள். இதுவே எனது பணிவான வேண்டுகோள்.

# கைதுகள், காணாமற் போதல் கிழக்கு மக்கள் தலைவிதியா?

## படையினர் கெடுபிடி தீவிரம்; மக்கள் மத்தியில் அச்சம்

விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக அறிவித்திருந்த நான்கு மாத கால போர் நிறுத்தம் ஏப்ரல் 24ஆம் திகதி நள்ளிரவுடன் முடிவுக்கு வந்த பின்னர் வடக்கில் இருதரப்பினரி டையேயும் மோதல்கள் தீவிரம் அடைந்தன.

ஆனால் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு சில துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களே இடம்பெற்றன. குறிப்பிடத்தக்க பாரிய சம்பவம் எதுவும் இடம்பெறவில்லை.

இத்தகைய அமைதி ஆபத்தானது. பெரும் மோதலுக்கான அமைதியே இது என பொதுமக்கள் அஞ்சுகின்றனர்.

மட்டக்களப்பில் அண்மைக்காலமாக படையினர் சோதனை நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றனர். சுற்றிவளைப்பு, திடீர் தேடுதல் நடவடிக்கைகள் அதிகரித்து வருகின்றன.

இதே சமயம் கடந்த மாதம் மட்டும் ஒன்பது இளைஞர்கள் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று மட்டக் களப்பு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கை தெரி விக்கின்றது.

வந்தாறுமூலையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மே மாதம் 20ஆம் திகதி கிழக்குப் பல்கலைக்கழகத்துக்குப் பின்புறமாகவுள்ள வீதியில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்டார்.

அத்துடன் அவர் கொண்டுசென்ற உழவு இயந்திரமும் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

இந்த உழவு இயந்திரத்தில் இருந்து கணினி இயந்திரம் மற்றும் தட்டச்சு இயந்திரம் போன்ற பொருட்களும் கண்டெடுக் கப்பட்டதாகப் படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மே மாதம் 27ஆம் திகதி ஏறாவூர் சந்தைக்குச் சென்ற வந்தாறுமூலையைச் சேர்ந்த இரு இளைஞர்கள் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று மட்டக்களப்பு மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. வந்தாறுமூலையைச் சேர்ந்த தம்பிராசா கோணநாயகம் (வயது 22), வேதவாணன் உதய குமார் (வயது 27) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இச்சம்பவங்களின் தொடராக மே 29ஆம் திகதி கொம்மாதுறையைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டார்.

நவரட்ணம் சுபேஸ்தரன் எனும் 21 வயதுடைய இவர், ஒரு பிள்ளையின் தந்தை ஆவார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக் கிராமமான கடவத்தைமடுவில் வைத்தும் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். ஆரையம்பதியைச் சேர்ந்த செபமாலை அமலதாஸன், கோணலிங்கம் குணசீலன் ஆகிய இந்த இருவரும் கடந்த 26ஆம் திகதி வெலிக்கந்தைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக, வெளிநாட்டு முகவர்



சுகாதார அமைச்சு நடத்திய தேசிய சுகாதார வார நிகழ்வுகளின் இறுதி நிகழ்ச்சியாக விழிப்புணர்வு ஊர்வலமும் பொதுக்கருத்தரங்கும் அண்மையில் மட்டக்களப்பில் நடைபெற்றன. விழிப்புணர்வு ஊர்வலத்தில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரைப் படத்தில் காணலாம். மட்டக்களப்பு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணியகம் இதனை ஏற்பாடு செய்திருந்தது. படம் – காத்தான்குடி நிருபர்.

ஒருவரிடம் பணத்தைப் பறிகொடுத்த மேற்படி இருவரும் அந்த முகவரின் தொலைபேசி அழைப்பையடுத்து கடவத்தை மடுவுக்கு சென்ற சமயமே கைது செய்யப்பட்டனர் என்று கூறப படுகிறது.

இவர்கள் எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்பது பற்றிய சரியான தகவல்கள் இல்லை.

இதேசமயம் தேன் எடுக்கச் சென்ற மூவர் வாகரையில் கைது செய்யப்பட்டுப் பின்னர் காணாமல்போய் விட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மதுரங்கேணியைச்சேர்ந்த வேல்முருகு– செல்வராசா (27 வயது), இராமலிங்கம்– சுப்பிரமணியம் (24 வயது) முருகன்– மங்களேஸ்வரன் ஆகிய மூவருமே காணாமற் போனவர்கள் ஆவர்.

கடந்த 22ஆம் திகதி வாகரை கரடிக்குளத்தில் வைத்து சீருடையில் நின்ற ஆயுத பாணிகளால் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும்–

கைது செய்தவர்கள் இவர்களை வெலிக்கந்தைப்பக்கம் அழைத்துச் சென்றதாகவும்–

உறவினர்களால் மட்டக்களப்பு மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறையிடப்பட்டுள்ளது.

ஆனால் வெலிக்கந்தை 23– 1ஆவது படை அலுவலகத்துடன் மனித உரிமைகள் காப்பகம் தொடர்பு கொண்டபோது தாங்கள் எவரையும் கைதுசெய்யவில்லை எனத் தெரிவிக்கப்பட்டதாம்.

இதேவேளை, நாசகாரத் தடுப்பு முகாமில் கைதுசெய்யப் பட்டவர்களின் பெயர் விவரங்கள் மட்டக்களப்பு நீதிமன்றத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

இதில் 21 பேரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

அவர்களின் விவரம் வருமாறு:

சிங்கராசா பிரிதிராஜா– பிரதான வீதி, கிரான், தாமோதிரம் கிருபைராசா– களுவன் கேணி, கந்தையா சசிக்குமார்– ஆரையம்பதி, பஞ்சாட்சரம் கிஷ்ணகுமார்– புதுக்குடியிருப்பு, கணபதிபிள்ளை ராஜேஸ்வரன்– கன்னங்குடா,

விஸ்வலிங்கம் சுப்பிரமணியம்– சித்தாண்டி, நாகராசா காண்டீபன்– சித்தாண்டி, கோணமலை பூபாலப்பிள்ளை– அமிர்தகழி, நேசதுரை இருதயராஜ்– திருப்பெருந்துறை, வீரசிங்கம் சுகிர்தராசா– நாவற்காடு, பொடிசிங்கம சண்முகம்– கல்லாறு.

தர்மசிங்கம் நேசதுரை– திமிலைத்தீவு, ராசநாயகம் சந்திரப்பிரகாஷ்– மட்டக்களப்பு, இன்நாசி பாக்கியநாதன்– புன்னச்சோலை, தர்மதேவா ராஜ்குமார்– புன்னச்சோலை.

முருகுப்பிள்ளை செல்வராசா– கிரான், நல்ல தம்பி குமாரவேல்– வந்தாறுமூலை.

செல்வமாணிக்கம் சுரேசும்– கருவப்பங்கேணி, கந்தன் சண்முகம்– திருப்பெருந்துறை, தம்பிராசா குணராசா– வந்தாறுமூலை, வேதவாசம் உதயகுமார்– வந்தாறுமூலை.

இவ்வாறு பாதுகாப்பு நடவடிக்கைகளும் கைது தொடர்பான கெடுபிடிகளும் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதால் கிழக்கு மாகாண மக்கள் பீதியடைந்துள்ளனர்.

–சத்துருக்கன் –நேரன்

# புதிய மன்னரின் மகன் மீது பெருமளவு சந்தேகம்

## நேபாள படுகொலைகளின் சூத்திரதாரி யார்?



மன்னர் கையனேந்திரா

நேபாள மன்னர் குடும்பமே அழித் தொழிக்கப்பட்ட பின்னர் புதிய மன்னராக முடிசூடிக் கொண்ட கையனேந்திரா பீர் பிக்ரம் ஷா தேவ் ஒரு கோடீஸ்வர வர்த்தகர் ஆவார்.

சிகரெட் உற்பத்தி நிறுவனம், ஐந்து நட்சத்திர ஹோட்டல், புகழ் பெற்ற வர்த்தக நிறுவனம், தேயிலைத் தோட்டம் ஆகியவற் றிற்கு உரிமையாளர். அவர் இன்று நாட்டின் மன்னராகி விட்டதால் வருமானவரி விலக்கு அவருக்கு உண்டு. நாடாளும் மன்னரே சாதாரண மக்களுடன் வர்த்தக போட்டியில் இறங்குவதன் மூலம் பெருமளவு வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்ளப்போகிறார்.

அத்துடன் புதிய மன்னரின் மகன் பராஸ் ஷா மக்களின் வெறுப்புக்குள்ளாகியிருப்பவர். போதை மன்னன், காமுகன் வேகமாக வாகனங்களைச் செலுத்தி இதுவரை ஐந்து பேரை யமலோகத்துக்கு அனுப்பிவிட்ட புண்ணியவான். நீதி மன்றத்தினால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அந்த பராஸ்ஷா இரவோடு இரவாக முடிக்குரிய இளவரசராகி விட்டார். அடுத்த மன்னர் இவர்தான். அதனால் கலக்கமடைந்து போய் இருக்கிறார்கள் மக்கள்.

கையனேந்திரா மன்னராக முடிசூடிக் கொண்டபோது நாட்டு மக்கள் கொதித்தெழுந்தனர். காரணம் அப்பாவும் மகனும் மக்களால் வெறுக்கப்பட்டவர்களாக இருப்பதனால்தான்.

மன்னர் பிரேந்திரா குடும்பம் வேரோடு அறுக்கப்பட்டதற்கு ஒரு கும்பலே முக்கிய பங்காற்றியிருக்கிறது. அப்பா விருந்துக்கு வரவில்லை. மகன் அங்கு வந்திருந்தும் துப்பாக்கிச் சூட்டில் ஒரு துளியும் காயப்படவில்லை. காதல் வெறி பிடித்த இளவரசன் திபேந்திராவைத் தூண்டி விட்டு கொலைகளைச் செய்வித்தவர் மகன்தான் என்று அனைவரும் சந்தேகிக்கிறார்கள்.

மன்னர் பிரேந்திராவும் மகாராணி ஐஸ்வர்யாவும் தமது முடிக்குரிய இளவரசன் திபேந்திராவின் காதலை இறுதிவரை அங்கீகரிக்கவில்லை. அதன் காரணமாக இளவரசனுக்கு சீற்றம் இருந்தது உண்மைதான். ஆனால் அந்த சீற்றம் தனது பெற்றோ ரையும், உடன் பிறப்புகளையும் கொன்றொழிக்கும் அளவுக்கு பயங்கரமான நிலையை அடையும் என்று எவரும் கருதவில்லை.

இளவரசர் திபேந்திரா மது போதையில் தள்ளாடி இருக் கிறார். அவர் கோபத்துடன் வெளியேறித் தமது அறைக்குச் சென்றிருக்கிறார். சுமார் ஒன்றரை மணி நேரத்தின் பின் ராணுவ உடை தரித்து துப்பாக்கிகளுடன் வந்து அனைவரையும் கொன்றொழித்திருக்கிறார். இது எப்படி சாத்தியப்பட்டது?

வேறொருவர் துணையின்றி ஒரு போதை மன்னன் செய்யக் கூடிய காரியங்களா இவை?

அந்தச் சம்பவத்தை அரண்மனை அதிகாரிகள் மறைத்து விட்டார்கள். தற்செயலாக வெடித்த துப்பாக்கியினால் உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டன. உயிருக்குப் போராடும் இளவரசர் திபேந்திரா புதிய மன்னராக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று அறிவிக்கப்பட்டது.

இளவரசர் திபேந்திரா உயிர் பிழைக்கும் வரை மன்னரின் தம்பி கையனேந்திரா பாதுகாவலராக இருப்பார் என்றார்கள். இரு நாட்கள் மன்னனாக இருந்த திபேந்திரா மரணமான பின்னர் கையனேந்திரா மன்னராகி விட்டார். இருப்பினும் 14 கொலைகளைச் செய்த இளவரசர் திபேந்திராவை மன்னராகப் பிரகடனம் செய்தது ஏன்?

முடிக்குரிய இளவரசன் கொலை செய்வது சட்டப்படி குற்றம் இல்லையா?

அரண்மனை நிர்வாகம் மன்னர் குடும்பப் படுகொலை களை மூடி மறைக்கப் பார்க்கிறது. இருப்பினும் புதிய மன்னர் ஒரு விசாரணைக் குழுவை நியமித்திருக்கிறார். அந்த விசாரணைக்குழு அறிக்கை வெளி வருவதற்கு முன்னரே மற்றொரு இளவரசர் ஒரு பரபரப்பை ஏற்படுத்தி விட்டார்.

கொலையுண்டு போன மன்னர் பிரேந்திராவின் இளைய சகோதரர் திபேந்திராவின் மருமகன் ராஜீவ் ஷாணி ஒரு ராணுவ டாக்டர். அன்றைய விருந்தில் கலந்து கொண்டு காயமடைந்தும் உயிர் தப்பியவர்களில் ஒருவர்.

காத்மண்டுவிலுள்ள ராணுவ ஆஸ்பத்திரிக்குப் பத்திரிகை யாளர்களை எல்லாம் அழைத்தார். சம்பந்தப்பட்ட விருந் தின் போது நடந்த சம்பவங்களை அம்பலப்படுத்தி விட்டார்.

''இளவரசர் திபேந்திராவே கொலையாளி. தனது குடும் பத்தினரையே கொன்றொழித்தார்''. இறுதியில் தன்னைத் தானே சுட்டு உயிர்விட்டார் என்று கூறிவிட்டார் ஷாணி.

தகவல் தொடர்பு துறையினர் மதிக்கும் அளவுக்கு தகுதிவாய்ந்த ஒருவர் அதிலும் மன்னர் குடும்பத்தைச் சேர்ந்தவர். கொலைகள் நடை பெற்றதைக் கண்களால் கண்டவர் காப்டன் ராஜீவ் ஷாணி.

நேபாள மன்னர் பரம்பரை தன்னைத் தானே கூண்டோடு அழித்துக் கொண்டு விட்டது என்பதை உலகம் அறியச் செய்து விட்டார். அதனால் நாட்டு மக்களுக்கு சிறிது ஆறுதல். ஆனால் அரண்மனை நிர்வாகிகளுக்கோ தாங்க முடியாத சீற்றம்.

பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராலா காப்டன் ஷாணியை அழைத்து எச்சரித்தார். கடிந்து கொண்டார். மன்னர் குடும்பம் அழிந்து போனதற்கு ஒரு சக்திவாய்ந்த பிரிவு பின்னணியிலிருந்து இயங்குகிறது என்பது தெளிவாகியிருக்கிறது.

கொலைச்சம்பவத்தின் போது நிகழ்ந்த சில உண்மைகளை ராஜீவ் ஷாணி வெளிப்படுத்தியிருக்கிறார்.


''மன்னர் பிரேந்திராவை இளவரசர் திபேந்திரா சுட்டபோது மன்னனின் கழுத்திலிருந்து இரத்தம் பீரிட்டது. நான் எனது மேல் அங்கியினால் கழுத்தை மூடினேன். தனது வயிற்றிலும் குண்டு பாய்ந்திருக்கிறது என்று மன்னர் கூறினார்.

''மகாராணி ஐஸ்வர்யாவைச் சுட திபேந்திரா துப்பாக்கியை நீட்டியபோது இளவரசர் நீரஜன் அம்மாவின் முன் வந்து நின்றார். கண்மண் தெரியாமல் திபேந்திரா சுட்டபோது நீரஜனின் உடல் சின்னாபின்னமானது.

''தேவயானியை மணம் முடிக்கக் கூடாது என்று அம்மா கூறிய போது திபேந்திரா சத்தமிட்டார். அண்ணனை வாயை மூடும்படி கூறினார் இளவரசி ஸ்ருதி.

இவை இளவரசர் ராஜீவ் ஷாணி மூலம் வெளிவந்திருக்கும் தகவல்கள்.

படுகொலை செய்யப்பட்ட நேபாள மன்னர் பிரேந்திரா பழம் பெரும் ஷா அரச குடும்பத்தைச் சேர்ந்தவர் ஆவார். இந்த ஷா ராஜ வம்சம் 1768 ஆம் ஆண்டு தோற்று விக்கப்பட்டது. இந்த வம்சத்தின் முதல் மன்னரான பிரிதிவி நாரா யண் ஷா என்பவர்தான் நேபா ளத்தை முதன் முறையாக ஒரே குடையின் கீழ் கொண்டுவந்தார்.



மகன் பராஸ் ஷா

இவரைப் பற்றி ஒரு புராணக் கதை உள்ளது. மன்னர் பிரிதிவி நாராயண் காத்மண்டு பள்ளத் தாக்கில் ஒரு முறை நுழைய முயன்ற போது கோரக் நாதர் என்ற தெய்வம் துறவி வடிவில் மன்னரை வழி மறித்ததாம். அந்தத் துறவிக்கு மன்னர் பிரிதிவி தன்னிடம் இருந்த தயிரை உண்ணக் கொடுத்தார். அதை வாயில் போட்டு விழுங்கிய துறவி அதை மீண்டும் வெளியில் கக்கி மன்னரிடம் தந்து அதைத் அருந்தச் சொன்னார்.

அதிர்ச்சியடைந்த மன்னர் ஆத்திரத்தில் கீழே வீசி எறிந்தார். தயிர் அவரது இரண்டு கால்களிலும் உள்ள பத்து விரல்களையும் மூடியது. துறவியாக வந்த கோரக் நாதர் தன் உண்மை உருவை அப்போது வெளிப்படுத்தினார்.

மன்னரை நோக்கி ''ஆத்திரத்தில் அறிவு இழந்து விட்டாய். நான் தந்த தயிரை நீ சாப்பிட்டிருந்தால் நீ கேட்ட வரம் அனைத்தை யும் தந்திருப்பேன். வீசி எறிந்த தயிர் உன் காலில் உள்ள பத்து விரல்களையும் மூடியதால் பத்து தலைமுறைக்குப் பிறகு உன் வம்சம் கூண்டோடு அழியும்'' என்று தீர்க்க தரிசனம் கூறினார்.

அதன் படியே தற்போது அரச குடும்பம் கூண்டோடு படுகொலை யாகியிருக்கிறது. ஷா வம்சத்தின் பத்தாவது தலைமுறையைச் சேர்ந்தவர் மன்னர் பிரேந்திரா என்பது குறிப்பிடத்தக்கது.

அந்தச் சாபம் நிறைவேறி விட்டதா?

– சிகுநா

# உழைப்பாளி விக்ரம்!



விக்ரம்–ரிச்சா
படம்–'சாமுராய்'

விக்ரம் 'சேது' படத்தில் தன் பிரமாதமான நடிப்பினை வெளிப்படுத்தியவர். தான் நடிக்கும் கதாபாத்திரங்களில் அதிக கவனம் செலுத்துவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார். இப்போது 'தில்' படத்தில் சப் இன்ஸ் பெக்டராக நடித்துக் கொண் டிருக்கிறார். கரெக்டர் சிறப்பாக வர வேண்டு மென்பதற்காக உடற்பயிற்சிகள் மூலம் உடலை வளப்படுத்தி யிருக்கிறாராம்.

# வருகிறது ரஜினி படம்

சூப்பர் ஸ்டாரின் படத்தை எதிர்பார்த்திருக்கிறார்கள் ரசிகர்கள். தனது ரசிகர்களுக்கு விருந்தாக அல்லாமல் பெரு விருந்தாக மூன்று படங்களின் அறிவிப்பை விரைவில் வெளியிடலாம் என்று திரையுலகினர் ஆரூடம் தெரிவிக்கின்றனர்.

அதில் ஒன்று சூப்பர் ஸ்டாரே கதை எழுதிய தெலுங்குப்படமான 'ராயலசீமா' ராமச்சந்திர சௌத்ரி'– இது மூக்கையாதேவர்' என்ற பெயரில் வெளிவரப்போகிறது.

சூப்பர் ஸ்டார் ஜோடியாக உலக அழகி லாரா தத்தா அல்லது ஆசிய பசுபிக் அழகி தியா மிர்ஷா நடிக்கலாமாம்.

# ஆஹா.. ஊட்டி ஜாலி!

ஊட்டியில் 8 படங்களின் படப்பிடிப்புகள். கார்த்திக் நடிக்கும் 'லவ்லி', விக்ரமின் 'சாமுராய்' பிரபுவின் 'மாம்ஸ்', பாக்கியராஜின் 'ரொம்பப் படிச்சவங்க' போன்ற படங்களும் இதில் அடக்கம்.

படப்பிடிப்புக்கு படப்பிடிப்பும் ஆச்சு. ஊட்டிக் குளிரை அனுபவிச்சதும் ஆச்சு. என்று நடிக நடிகையர் குதூகலிக்கின்றனர். ஊட்டியில் எங்கு திரும்பினாலும் கமெராக்களின் ஆக்கிரமிப்புத்தான்.

இதனால் மிகவும் பாதிப்புக் குள்ளாகியுள்ளவர்கள் ஊட்டி வாசிகள்தானாம். ஊட்டி எங்கும் 'ஆக்ஷன்', 'கட்' என்ற குரல்கள் கேட்பதனால் தங்கள் சொந்த வேலைகளைக் கவனிக்க முடியாது திண்டாடிக் கொண்டிருக் கிறார்களாம் ஊட்டி மக்கள்.



கார்த்திக்–மாளவிகா
படம்–'லவ்லி'

# ரம்பாவின் திருமணம்..!



ரம்பா மீண்டும் ரசிகர்களை ஒரு வழி பண்ணிவிடும் எண்ணத்தில் களமிறங்கி யிருக்கிறார். 'குங்குமப் பொட்டு கவுண டர்', 'மாம்ஸ்' 'ஆனந்தம்' 'அழகான நாட்கள்' என ரசிகர் களுக்கு அல்வா தரப் போகின்றார். 'இப்படியே நடித்துக் கொண்டி ருந்தால் எப்படி? திருமணம் செய்து கொள்ளும் எண்ணமில்லையா சக நடிகை தேவயானி திருமணம் செய்து விட்டாரே! என்று கேட்டால், ''தேவயானி திருமணம் செய்து கொண்டது அவருடைய சொந்த விருப்பம். திருமணம் என்பது நேரம் வரும் போது தானாகவே நடக்கும். மென்மையான எனது இதயத்தை காதல் விரல்களால் யாரும் வருடவில்லை'' என்கிறார்.

# சிம்ரன் தெரியாத சங்கதிகள்



சிம்ரன்

* சிம்ரன் – பி. கொம் பட்டதாரி.

* சொந்தப் பெயர் ரிஷிபாலா. நடிப்பதற்காக சிம்ரனாகியிருக்கிறார். சிம்ரன் என்றால் தியானம் என்று அர்த்தமாம்.

* அப்பா – நாக்பால், டிசைனிங் செய்து வருகிறார். ஆரம்பத்தில் அப்பா டிசைனிங் செய்யும் கம்பனிகளுக்கு மொடலாக இருந்திருக்கிறார் சிம்ரன்.

* நடிக்க வருவதற்கு முன்னர் டி.வி நிகழ்ச்சித் தொகுப் பாளராக வும் இருந் திருக் கிறார்.

# கலக்கல் கவர்ச்சி

முன்னாள் நடிகை ஜெயப்பிரதாவிற்கு உறவு என்ற உரிமையுடன் தமிழிற்கு வந்திருக்கிறார்விஜய லட்சுமி. இவர் சாதாரணமானவர் அல்ல, கன்னடப் படங்களில் கவர்ச்சி நடிப்பில் ஒரு கலக்குக் கலக்கியவராம்.

இவர் நடித்த படங்கள் நிச்சயம் நூறு நாட்கள் ஓடுமாம். அந்தளவுக்கு ராசி நடிகை என்று பெயர் பெற்றவர். கன்னடத்தில் வெற்றி நடைபோட்ட 'நம்பர் 1' என்ற படம் இப்போது 'உன்னைத் தேடி வருவேன்' என்ற பெயரில் தமிழ் பேச வருகிறது.



விஜய லட்சுமி

# திரை மறைவில்

பிஷ் நடிகை குடும்பத்தினரோடு நியூயோர்க் சென்றிருக்கிறார். கோடை வெப்பத்தைத் தணிப்பதற்காக ஜாலியாக டூர் போயிருப்பதாக சொன்னாலும் வதந்திகளிலிருந்து தப்பிப்பதற்காகவே பிஷ் நடிகை நியூயோர்க் போயிருக்கிறார் என்கின்றனர் நெருங்கிய உறவினர்கள்.

**

மந்திர நடிகையும் அவருக்கு நெருக்கமான தயாரிப்பாளரும் மாயமாக மறைந்து விட்டனராம். தயாரிப்பாளருக்கு நடிகை போட்ட மந்திரம்தான் காரணமாம்.

**

ரன் நடிகை நன்றி மறக்காதவர் என்று புகழ்கிறார் அவரை 'பூச்சூடவா' படத்தில் அறிமுகப்படுத்திய உதயசங்கர். 'தவசி' படத்திற்காக நாயகி கரெக்டருக்கு ரன்னை நாடியபோது பிஷ் நடிகையை சிபாரிசு செய்திருக்கிறார்.

**

விநியோகஸ்தர் சங்கத்தின் பெரும்புள்ளி வரிசையாக சின்ன பட்ஜெட் படங்களை எடுத்தார். அதனால் காசும் கையில் சேர்ந்தது.

காசு கையில் சேர்ந்ததும் கலையை மறந்தவராக களையான நடிகை ஒருவரைச் சரணடைந்திருக்கிறார். மறைந்த இங்கிலாந்து இளவரசியின் பெயரைத் தன் பெயராகக் கொண்ட அந்த நடிகையுடன் குடும்பம் நடத்துவதால், தான் எடுத்துக்கொண்டிருக்கும் குடும்பப் படத்தையே மறந்து விட்டாராம்.

**

இப்போது வாய்ப்புகள் செல்வது வானவில் நடிகையிடமும் ஸ்நேகநடிகையிடமும்தான். அதனால் தமது சம்பள ரேட்டை உயர்த்திவிட்டனர். தம்மை ஒப்பந்தம் செய்ய வருபவர்களிடம் சம்பளமாக எட்டு லகரம் கேட்கிறார்களாம் காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளும் நடிகைகள்.

**

கேரளாவின் முன்னணி நடிகர் முகமது குட்டியையே (அதாங்க மம்முட்டி) கலங்க வைத்தவர்கள் 'ஷகீ' சகோதரிகள். இவர்களின் படங்கள் வெளியாகின்றன என்று தெரிந்தால் போதும் மம்முட்டி தனது படவெளியீட்டைப் பின்போடச் சொல்லி விடுவாராம். இந்த சகோதரிகளின் ஒரு சில படங்கள் தமிழில் வெளியாகி தமிழ் ரசிகர்களின் தூக்கத்தைக் கெடுத்திருக்கின்றன. இப்போது தயாரிப்பாளர்கள் ஷகீ சகோதரிகள் வீட்டுவாசலில் கியூ வில் நிற்கிறார்களாம்.

பதினைந்து லட்சத்தில் முதல் பிரதி, நான்கு மொழியில் பிஸினஸ், கதை சொல்லும் பிரச்சினை இல்லை. என்று தயாரிப்பாளர்களுக்கு ஏகப்பட்ட லாபம், இதனால் கால்ஷீட் கொடு தாயே என்று காலடியில் கிடக்கின்றனராம் தயாரிப் பாளர்கள்.

# தங்கை நடிகையின் மறுபக்கம்

ஸ்லிம்மிற்குப் பெயர் பெற்றவர் ரன் நடிகை. அம்மணி நடன மாஸ்டருடன் விரைவில் திருமணம் செய்யப் போவதாக அறிவித்தார். இந்த இடைவெளியில் தான் தனக்குப்பின் தன் பெயரை நிலை நாட்டுவதற்கு வாரிசாக தங்கையை திரையுலகத்திற்கு கொண்டு வந்தார் ரன் நடிகை.

அக்காவிற்கு இருந்த மவுசினால் தங்கையைத் தங்கக்கம்பளம் போட்டு வரவேற்றார்கள் தயாரிப்பாளர்கள். தங்கை ஆரம்பத்திலிருந்தே அக்காவுடன் சுற்றியவர்தான். அக்காவை விட அதிக நிறமும் கொண்டவர், பருமனிலும் ஒரு சுற்று அதிகம் தான். ஆனால் முகத்தில் தெரிந்த ஒருவித கோணலினால் நடிகையை யாரும் திரும்பிப் பார்க்கவில்லை. அக்காவின் அறிவுரையின் படி தங்கை நடிகையை வெவ்வேறு கோணங்களில் படம் பிடித்து தயாரிப்பாளர்களுக்கும் தயாரிப்புக் கம்பனிகளுக்கும் அனுப்பி வைத்தனர்.

எப்படியோ பார்வை ஒன்றே போதுமென்ற படத்தில் அறிமுகமானார் அம்மணி. முதல் படம் என்ற கூச்சமே இல்லாமல் தாராளமாக நடித்தார்.

ஹீரோவிற்கும் ஏகப்பட்ட ஒத்துழைப்பை வழங்கினார். அசைந்தாடும் காற்றுக்கும் அழகான பூவுக்கும் காதலா என்ற பாடல் காட்சியில் அம்மணி காட்டிய நடன அசைவுகளில் ரசிகர்கள் கிறங்கித்தான் போனார்கள். இப்போது நவரசநாயகனோடு 'லவ்லி'யில் ஜோடி சேர்ந்திருக்கிறார்.

அம்மணி காதல் விஷயங்களில் உஷாராகத்தான் இருக்கிறாராம். லவ்வர்ஸ் டே நாயகனுடன் நடித்த போது நடிகையே கதி என்று காதல் கீதம் பாடினார் ஹீரோ. படம் முடிந்ததும் தங்கை நடிகை அவரைக் கழற்றி விட்டார். ஆனால் ஹீரோவுக்குத்தான் அம்மணியைப் புரிந்து கொள்ளும் சக்தி இல்லை. மனதைக்கொடுத்து விட்டுத் தவிக்கிறாராம்.



மோனல்
படம்–'லவ்லி'

இரவு நேரம். அந்தத் தெருவின் ஓர் ஓரத்தில் தேங்கிக் கிடந்த குப்பைகளைக் கிளறிக்கொண்டிருந்தான் ஹூப்பர்.

குப்பைகளைக் கிளறி அதிலிருந்து ஏதாவது உருப்படியான பொருட்கள் கிடைக்கின்றனவா? என்று தேடுவது அவனது அன்றாடத் தொழில். அவ்வாறு கிடைப்பவற்றை பழைய பொருட்களை வாங்கி விற்கும் கடைகளில் கொடுத்து அவர்கள் கொடுக்கும் பணத்தில் வயிற்றுப் பசியைத் தீர்த்துக் கொள்வான்.

குப்பைகளைக் கிளறிக் கொண்டிருந்தவன், பின்புறத்தில் ஏதோ ஓசை கேட்கவே திடுக்கிட்டுத் திரும்பினான்.

ஒரு கையில் துப்பாக்கியும் மறுகையில் பையுமாக நகைக் கடை ஒன்றினுள்ளிருந்து வெளியேறிக்கொண்டிருந்தான் கறுப்புக் கோட் அணிந்த மனிதன் ஒருவன்.

அவனது முகம் தெருவிளக்கொளியில் ஹூப்பருக்கு அரைகுறையாகத்

# மர்ம மனிதன்

தன்னை ஒருவன்
கண்டுகொண்டுவிட்டான்
என்பதை உணர்ந்த அந்த மர்ம
மனிதனின் கையிலிருந்த
துப்பாக்கி உடனடியாகவே
தோட்டாவை உமிழ்ந்தது.
''டுமீல்!''
''சட்...ட...ங்...!''
ஹூப்பரின் மார்பைக்
குறிவைத்து வந்த தோட்டா
அவனது கையிலிருந்த பழைய
தகர டப்பாவில் பட்டுத்
திசைமாறித் தோளில்
பாய்ந்தது.



தெரிந்தது.

தன்னை ஒருவன் கண்டு கொண்டுவிட்டான் என்பதை உணர்ந்த அந்த மர்ம மனிதனின் கையிலிருந்த துப்பாக்கி உடனடியாகவே தோட்டாவை உமிழ்ந்தது.

''டுமீல்!''

''சட்...ட...ங்...!''

ஹூப்பரின் மார்பைக் குறிவைத்து வந்த தோட்டா அவனது கையிலிருந்த பழைய தகர டப்பாவில் பட்டுத் திசைமாறித் தோளில் பாய்ந்தது.

அலறியவாறே கீழே விழுந்து மயங்கிப் போனான். அவன் இறந்துவிட்டானா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளாமலே ஓடி மறைந்தது அந்த உருவம்.

***

மறு நாள்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஹூப்பர் ஓரளவு தேறியிருந்தான்.

அவனிடம் வாக்குமூலம் பெற்றுக் கொண்டிருந்தார் இன்ஸ்பெக்டர் டொனால்ட்.

கொலை, கொள்ளைச் சம்பவங்களினால் கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக லண்டன் மாநகரைக் கலக்கிக் கொண்டிருக்கிறான். கறுப்புக் கோட் அணிந்த மர்ம மனிதன். அவனை நேரில் கண்ட ஒரே சாட்சி ஹூப்பர், அவன் ஒரு பொன் முட்டையிடும் வாத்தாக இன்ஸ்பெக்டர் கண்களுக்குத் தென்பட்டான்.

மங்கலான விளக்கொளியில் தான் கண்ட உருவத்தைப் பற்றி இயன்றவரை நினைவுபடுத்திக் கொண்டு ஹூப்பர் விவரித்தான்.

ஸ்டேசனுக்குத் திரும்பியதும் ஹூப்பர் கூறிய அடையாளங்களை பைல்களிலிருந்த குற்றவாளிகளின் புகைப்படங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தார் இன்ஸ்பெக்டர். அவருக்கு ஏமாற்றமே மிஞ்சியது. ஹூப்பர் குறிப்பிட்ட அடையாளங்களையுடைய நபர் எவரும் அந்தப் புகைப்படங்களிடையே இருக்கவில்லை.

கிடைத்த சாட்சியமும் பயனற்றுப் போய்விட்டது. இனி விசாரணைகளை வேறு திசையிலிருந்துதான் ஆரம்பிக்க வேண்டும். இன்ஸ்பெக்டர் அலுத்துச் சலித்துக் கொண்டார்.

***

அன்று இரவு.

ஹூப்பருக்கு மனம் சரியாக இல்லை. நேரே ரொபேட்டின் வீட்டுக்கு விரைந்தான்.

''மிஸ்டர் ரொபேட், நீங்கள் இப்படியான செயல்களில் ஈடுபடுவீர்கள் என்று நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை...''

''..........''

''நீங்கள் என்னைச் சுட்டதைக் கூட நான் பெரிதாக நினைக்கவில்லை. ஆனால், நான் உங்களைக் காட்டிக் கொடுத்திருந்தால்....''

''..........''

''எனது உறவினர் என்பதற்காகவோ அல்லது என் உயிருக்கு ஆபத்துவரும் என்று நினைத்தோ உங்களை நான் காட்டிக் கொடுக்காமல் இருந்துவிட்டேன் என்று நினைக்காதீர்கள். என் உயிரைப் பற்றி நான் என்றைக்குமே கவலைப்பட்டதில்லை. ஆனால் உங்களது மூன்று குழந்தைகளைப் பற்றியும் சிறிது சிந்தித்துப் பாருங்கள்''

''..........''

''மிஸ்டர் ரொபேட், இனியும் இப்படியான காரியங்களில் ஈடுபடாதீர்கள். பொலிஸாரின் கவனம் உங்கள் மேல் திரும்பும் முன் பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு வெளியூருக்குச் சென்று புது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள்...''

''ஹூப்பர், உன்னைச் சுட்டதற்காக என்னை மன்னித்து விடு. நீ சொல்வதில் நியாயம் இருக்கிறது. சந்தர்ப்பவசத்தால் இப்படியான செயல்களில் ஈடுபட நேர்ந்தது. அதுவே எனது தொழிலாகிப் போய் விட்டது. என்னுடைய பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு இந்த நகரைவிட்டு வெளியேறிவிடுகிறேன். என் வாழ்க்கைப் பாதையை மாற்றிக் கொள்கிறேன்.

''நல்லது நீங்கள் பயன்படுத்திய கறுப்புக் கோட்டைக் கொண்டு செல்லாதீர்கள். அதைத் தந்துவிட்டுப் போங்கள்.

மறைத்துவைத்திருந்த தனது கறுப்புக் கோட்டை எடுத்து அவனிடம் கொடுத்தான் ரொபேட். அவனுடைய மனம் இலேசாகியது.

''கடவுள் உங்களையும் குழந்தைகளையும் காப்பாற்றுவார், நான் வருகிறேன்....''

பிறப்பிலேயே சற்று ஊனமாகிப்போன தனது வலது காலால் விந்தி விந்தி நடந்து சென்றான் ஹூப்பர்.

***

நள்ளிரவில் கறுப்புக் கோட் அணிந்த மர்ம மனிதனின் நடமாட்டம் பற்றிக் கிடைத்த தொலைபேசித் தகவலைத் தொடர்ந்து குறிப்பிட்ட பகுதியைப் பொலிஸார் சுற்றிவளைத்துக் கொண்டனர்.

வங்கி ஒன்றைக் கொள்ளையடிக்கும் முயற்சியில் இறங்கியிருந்த மர்மமனிதன் நாலாபுறத்தாலும் பொலிஸாரால் சூழப்பட்டான்.

தப்பி ஓட முயன்றபோது சுட்டு வீழ்த்தப்பட்டான்.

அருகில் சென்று அவனது முகத்தைப் பார்த்த இன்ஸ்பெக்டருக்குப் பலத்த அதிர்ச்சி.

இறந்து கிடந்தவன் ஹூப்பர்.

'மர்மக் கொலை, கொள்ளைச் சம்பவங்களுக்குக் காரணகர்த்தா இவன் தானா? அந்தக் கொள்ளையனிடம் சூடு வாங்கியவனல்லவா இவன்? இந்த ஒரு கால் ஊனமான நோஞ்சான் பேர்வழியால் இப்படியான செயல்களை எப்படிச் செய்ய இயலும்?'

இன்ஸ்பெக்டரின் மனதைப் பல கேள்விகள் குடைந்தெடுத்தன.

'இல்லை, இவன் உண்மையான குற்றவாளி இல்லை, இவனை யாரோ மாட்டி வைத்திருக்கிறார்கள். உண்மையான குற்றவாளி எங்கோ பதுங்கிக் கிடக்கிறான்' என்று அவரது துப்பறியும் மூளையில் குறுகுறுத்துக் கொண்டே இருந்தது.

ஏதாவது தடயம் சிக்குகிறதா என்று தேடியவருக்கு ஹூப்பர் அணிந்திருந்த கோட்டிலிருந்த இரண்டு வெண்ணிற சலவைக் குறிகள் கண்ணில் பட்டன.

சலவைக்கு வரும் ஆடைகளை அடையாளம் காண்பதற்காக சலவைத் தொழிலாளர்களால் இடப்படும் குறியீடுகள் அவை. அவற்றில் ஒன்று எந்தச் சலவைக் கடை என்பதையும் மற்றையது வாடிக்கையாளர் யார் என்பதையும் குறிக்கும்.

இந்தக் கோட், குற்றவாளி பாவித்ததாக இருக்கும் பட்சத்தில் அவனை நெருங்கிவிட்டதாக உணர்ந்தார் இன்ஸ்பெக்டர் டொனால்ட்.

***

தன் குழந்தைகளோடு வேறு ஊருக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த ரொபேட் கைதுசெய்யப்பட்டான். அந்தக் கோட் அவனுடையதுதான் என்பதைத் தவிர கொலை, கொள்ளைகளில் சம்பந்தப்பட்ட மர்ம மனிதன் ரொபேட் தான் என்பதை நிரூபிக்கும் ஆதாரங்கள் ஏதும் அவனது வீட்டைச் சோதனையிட்டபோது கிடைக்கவில்லை.

கோர்ட்டில் ரொபேட்டின் வாக்குமூலம் இவ்வாறாக இருந்தது —

''...ஹூப்பர் என்னுடைய உறவினன், அடிக்கடி எனது கறுப்புக் கோட்டை இரவல் வாங்கிப் போவான். அதைத் தவிர எனக்கு வேறு எதுவும் தெரியாது. கொலை,கொள்ளைச் சம்பவங்களில் எனக்கு எவ்விதத் தொடர்பும் இல்லை. நான் எனது பிள்ளைகளுடன் அமைதியாக வாழ்ந்துவருகிறேன்.''

பொலிஸார் சமர்ப்பித்த ஆதாரங்கள் எதுவும் ரொபேட்டை குற்றங்களுடன் தொடர்புடையவனாகக் காட்டவில்லை. நடைபெற்ற எந்தவொரு குற்றச்செயல்களின்போதும் கைரேகைப் பதிவுகள் கிடைக்கப்பெறாதது பொலிஸார் தரப்புச் சாட்சியங்களைப் பலவீனப்படுத்திவிட்டது.

''நாளை தீர்ப்பு அறிவிக்கப்படும்'' நீதிபதியின் அறிவிப்போடு கோர்ட் கலைந்தது.

குழம்பிப்போயிருந்தார் இன்ஸ்பெக்டர் டொனால்ட். உடலளவில் வலுவில்லாத ஹூப்பரால் இந்த அட்டூழியங்களைச் செய்திருக்க இயலாது என்பதில் அவர் திடமாக இருந்தார். அவன் உயிரோடு பிடிபட்டிருந்தால் வழக்கைச் சுலபமாக முடித்திருக்கலாம்.

''சிக்கிய ரொபேட்டும் குற்றவாளி இல்லை என்று நாளை தீர்ப்பாகிவிடும், நாளை என்ன செய்யப் போகிறேன்'' என்று கலங்கிப் போயிருந்த அவருக்கு மறுநாள் காலையில் ஓர் ஆதாரம் கிடைத்தது.

அன்றுகாலை ரொபேட்டின் முகவரிக்கு வந்த கடிதம் ஒன்று இன்ஸ்பெக்டரின் கைக்குக் கிடைத்தது.

ரொபேட்டிற்கு ஹூப்பர் எழுதிய கடிதம் அது.

''மிஸ்டர் ரொபேட். நீங்கள் இங்கிருந்து போய்விட்டாலும் குற்றவாளி பிடிபடும்வரை பொலிஸார் வலை வீசித் தேடிக்கொண்டே இருப்பார்கள். எங்காவது சிறிய ஆதாரம் ஏதும் கிடைத்தாலும் உங்களைத் தேடிவந்து கைதுசெய்துவிடுவார்கள்.

எனவே நான் என்னைப் பலிகொடுக்கத் தீர்மானித்து விட்டேன். உங்களுக்காக அல்ல, உங்கள் குழந்தைகளுக்காக. ஏனெனில், அவர்களின் உடலில் ஓடுவது என் தங்கையின் இரத்தம். அவர்களுக்காக நான் எதையும் செய்வேன். அவர்களை நல்ல படியாகப் பார்த்துக்கொள்ளுங்கள்...''

இந்த வாசகங்களை உள்ளடக்கிய அந்தக் கடிதத்தைக் கோர்ட்டில் இன்ஸ்பெக்டர் வாசித்தபோது தன்னை மறந்து கதறினான் ரொபேட்.

கொலை, கொள்ளைகளில் ஈடுபட்டுக் கன்றிப்போயிருந்த ரொபேட்டின் உள்ளத்தை ஹூப்பரின் தியாகம் உலுக்கிவிட்டது. குற்றங்களை அவன் ஒப்புக்கொண்டான்.

அவனது மூன்று குழந்தைகளின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு அவனுக்கு வழங்கப்பட வேண்டிய தூக்குத்தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது.

'மூன்று குழந்தைகளும் அரசுக் காப்பகத்தில் ஒப்படைக்கப்பட்டுப் பராமரிக்கப்பட வேண்டும்' என்றும் தனது தீர்ப்பில் குறிப்பிட்டார் நீதிபதி.




## வாசகர் இதயம் பேசுகிறது

பெண்கள் பக்கம் பெண்கள் மட்டுமல்லாது ஆண்களும் படித்துப்பயன்பெறத்தக்கதாக உள்ளது. சிறந்த தகவல் களைத் தொகுத்துத் தருவதற்கு பாராட்டுக்களும் நன்றிகளும்!

பி. பிறேம், வவுனியா.

'சுடர் ஒளி' சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் அருமையிலும் அருமை. பல இளம் எழுத்தாளர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் அவர்களின் ஆக்கங்களைப் பிரசுரித்து அவர்களின் வளர்ச்சியை மென்மேலும் வளரச் செய்வது ஆரோக்கியமான விடயம். தங்கள் பணி தொடர வாழ்த்துக்கள்.

சு.லோகேஸ்வரன், வவுனியா.

வார இதழாக சுடர்விட்டுக் கொண்டிருக்கும் நீ எப்போ நாளிதழாக ஒளிவிட்டு எமது தேசமெங்கும் ஒளிபரப்பப் போகிறாய்? ஆவலுடன் உன் வருகைக்காகக் காத்திருக்கிறோம்!

மொஹமட் ஸகீர், கற்பிட்டி.

சர்ச்சைக்குரிய அரசியல் விடயங்களைத் துணிச்சலுடன் வெளிக்கொணரும் உன் சாமர்த்தியத்தை மெச்சாமல் இருக்க முடிவில்லை! வாழ்க 'சுடர் ஒளி'யின் சாணக்கியம்!

நல்லை வசந்த், வல்வெட்டி.

சுவையான அம்சங்களைத் தந்து வாசகர் இதயங்களில் இடம்பிடித்துவிட்ட 'சுடர் ஒளி'யே உனது முகப்புச் செய்திகள் பிரமாதமாய் இருக்கின்றன. அரசியல் அந்தரங்கங்களை அம்பலப்படுத்தும் உன் பாணியே தனித்துவமானதுதான். வளர்க உன் பணி!

கவிக்குயிலன், சேனையூர்—6.

அரசு—புலிகள்—மத்தியஸ்த நாடு இவைகளின் உண்மையான அரசியல் நிலைப்பாடுகளை அக்குவேறு ஆணிவேறாக உனது நான்காம் பக்கத்தில் அலசி ஆராய்ந்து தருகிறாய் — நன்றி! போகும் போக்கைப் பார்த்தால், போர் நிற்குமாப் போலவும் இல்லை! பேச்சுவார்த்தை நடக்குமாப் போலவும் இல்லை! மக்கள் கதி என்னவாகப் போகிறதோ?

ப. நந்தினி, பருத்தித்துறை.

நீ சுமந்து வரும் வடபுலத்தில், களநிலைமை எப்படி? மலையகக் கண்ணோட்டம், தேரடி அரட்டை, பக்கத்து வீடு அனைத்தும் சுப்பர்! நீ மென்மேலும் வளர என் வாழ்த்துக்கள்!

ரொஸானா நூர் முஹம்மட், அக்குறணை.

சூடான, சுவாரஸ்யமான செய்திகளை உடனுக்குடன் அள்ளி வழங்கும் விளையாட்டுப் பகுதி எம் அனைவரதும் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்டது. திறமையானவற்றிற்குக் களம் கொடுக்கும் 'சுடர் ஒளி'யே நீ பல்லாண்டு காலம் வாழ்க! வளர்க!!

ப.த.மு. நியாஸ், சிராஜ் நகர்.


'சுடர் ஒளி'யின் தொடர்கதையான மு.சிவனேசனின் 'முத்தமிடும் ரோஜா இதழ்கள்' தரம்மிக்க ஆங்கில நாவல் ஒன்றைப் படிக்கும் உணர்வினை ஏற்படுத்துகிறது. தெளிவான அழகு தமிழில் 21ஆம் நூற்றாண்டின் வாழ்வோட்டத்தைப் பிரதிபலிக்கும் ஆசிரியரின் கைவண்ணத்தைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

அ. முருகதாஸ், கிழக்குப் பல்கலைக்கழகம்.

தலைநகரில் இடம்பெறும் இலக்கிய நிகழ்வுகளை சுவை குன்றாது தரும் கலையமுதம் பக்கம் பிரமாதமாய் உள்ளது. 'குமாரத்தி' சிறுகதை இன்றைய தாய்மாரின் உணர்வு நிலையை அழகாகப் படம் பிடித்துக் காட்டியது.

கிஷ்ஜனா – நந்தகுமார், ஆரையம்பதி—02.

# அதிகார பலப்பரீட்சைக் களத்தில் நாடாளுமன்றமும் நீதிமன்றமும்


அனுரா

ஜனநாயக நாடொன்றில் நாடாளுமன்ற விவகாரங்களில் நீதிமன்றம் தலையிட முடியுமா? நீதிமன்ற அதிகாரத்தில் நாடாளுமன்றம் தலையிட முடியுமா?

அரசியல்,நீதித்துறை அவதானிகள், ஆய்வாளர்கள் விடைதேடிக் கொண்டிருக்கும் மிக முக்கிய கேள்வி இதுவாகும். இக் கேள்வி எழக் காரணம் என்ன?

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவுக்கு எதிராக ஐ.தே.க குற்ற விசாரணைப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்துள்ளது.

அப்பிரேரணையில் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 77 எம்.பிக்கள் கையெழுத்திட்டுள்ளனர். கடந்த வாரம் இப்பிரேரணை சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டது.

இப்பிரேரணை கையளிக்கப்படவிருந்த வேளையில் உயர் நீதி மன்றத்தில் பிரேரணை தொடர்பாக ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டது.

பிரேரணைக்கு எதிராக மூன்று சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தனர். இம் மனு மீதான விசாரணையிலேயே உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பை வழங்கியது.

அந்தத் தீர்ப்பை அடுத்தே எதிர்பாராத அரசியல் சட்ட நெருக்கடி ஒன்று உருவாகியுள்ளது. நாடாளுமன்ற விவகாரங்களில் நீதிமன்றம் தலையிட முடியுமா? என்ற நெருக்கடிக்கு அடிப்படையான கேள்வி இதனாலேயே எழுந்துள்ளது.

''நீதிபதி ஒருவருக்கு எதிரான குற்றச் சாட்டு நாடாளுமன்றத்துக்கு வெளியிலேயே விசாரணை செய்யப்பட வேண்டும். நாடாளுமன்றத் தெரிவுக் குழு மூலம் நீதிபதி ஒருவருக்கு எதிரான குற்றச்சாட்டு விசாரிக்கப்படுவது நீதிமன்றத்தின் சுயாதிபத்தியத்தை அச்சுறுத்துவதாகும். அவ்வாறு செய்வது நீதிமன்ற அதிகாரத்தை வேறு ஓர் அமைப்பு சட்டவிரோதமாகப் பயன்படுத்துவதாகும்.''

மனுதாரர்களின் சட்டத்தரணிகள் இந்த அடிப்படையிலேயே தமது வாதங்களை உயர் நீதிமன்றத்தில் முன்வைத்துள்ளனர். அரசியல் சட்ட விதிகளையும் தமது வாதங்களுக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டியுள்ளனர்.

பிரதம நீதியரசருக்கு எதிரானக் குற்ற விசாரணைப் பிரேரணையை சபாநாயகர் ஏற்றுக்கொள்வதற்கு எதிராக தடை விதிக்கும் படியும் மனுதாரர்கள் கோரியிருந்தனர். அதற்கேற்ப தடையை விதித்து நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு நாடாளுமன்றத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

சபாநாயகருக்கு எதிராக தடைவிதிக்க நீதிமன்றத்துக்கு அதிகாரம் உள்ளதா என்று ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் கேள்விக் கணைகளைத் தொடுத்துள்ளனர்.

''நாடாளுமன்றம் உயர்நீதிமன்றத்துக்குக் கட்டுப்பட்டதல்ல என்பதை அரசியல் சட்டம் தெளிவாகக் கூறுகிறது. நாடாளுமன்றத்தின் எந்தவொரு நடவடிக்கையையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் உயர்நீதிமன்றத்துக்குக் கிடையாது''. இந்த அடிப்படையில் அவர்கள் சபையில் வாதிட்டுள்ளனர்.

நாடாளுமன்றத்தைப் பொறுத்தவரையில் சபாநாயகரும் ஒரு நீதிவானே. தன் முன் கொண்டுவரப்படும் பிரச்சினையை ஆராய்ந்து அவர் தீர்ப்புக் கூற கடமைப்பட்டவர்.

பிரதம நீதிரசருக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணையும் அது தொடர்பான உயர்நீதிமன்றத் தீர்ப்பும் இந்த நாடாளுமன்ற வரலாற்றில் முன்னர் நிகழாத சம்பவங்களாகும் என்றே சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கா இது குறித்து குறிப்பிட்டுள்ளார்.


எனவே தான் ஒரு தீர்மானத்திற்கு வருவதற்கு முன்னர் அந்த விடயத்தை நன்கு ஆழமாக ஆராய வேண்டியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசருக்கு எதிரான ஐ.தே.க வின் பிரேரணையை அரசாங்கக் கட்சி தீவிரமாக எதிர்க்கிறது. பிரேரணையை சபாநாயகர் ஏற்றுக்கொள்ளக் கூடாது எனவும் அக்கட்சி கோருகிறது. இதில் கட்சிக்குள் கருத்துவேறுபாடு இல்லை. இந்த வகையில் உயர் நீதிமன்றத் தீர்ப்பு அரசுக்குச் சார்பானதே.

ஆனால் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை இந்த விடயத்தில் ஆதரிப்பதா இல்லையா என்பதில் அரசுக் கட்சிக்கு தர்மசங்கடமான நிலை. அக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சில தினங்களுக்கு முன்னர் நடத்திய கூட்டம் அதை வெளிப்படுத்தியுள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிரான பிரேரணையை சபாநாயகர் ஏற்றுக்கொள்ளக் கூடாது எனக் கோரும் தீர்மானத்தை சபாநாயகரிடம் கையளிக்க கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அத் தீர்மானத்தில் உயர் நீதிமன்றத் தீர்ப்புக் குறித்து குறிப்பிடுவதா இல்லையா என்பதில் கருத்துவேறுபாடு நிலவியது.

நான்கு அமைச்சர்களான மஹிந்த ராஜபக்ஸ, டி.எம். ஜயரத்ன, மஹிந்த விஜேசேகர, தினேஷ் குணவர்தன ஆகியோர் அக்கோரிக்கையில் நீதிமன்றத் தீர்ப்புக் குறித்து குறிப்பிடுவதை எதிர்த்துள்ளனர். இவர்களின் நிலையை பிரதமரும் ஆதரித்துள்ளார். அரசியல் சட்ட விதிகளுக்கு ஏற்ப குற்ற விசாரணை பிரேரணையை சபாநாயகர் ஏற்கக் கூடாது. அவ்வாறில்லாமல் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அமைய சபாநாயகர் நடந்தகொள்ளக்கூடாது என்பதையே அந்த அமைச்சர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.


சரத் என் சில்வா

நாடாளுமன்றமே தலையாயது. உயர்நீதிமன்றம் அதற்கு உத்தரவிட முடியாது என்ற நிலைப்பாட்டையே அரசாங்கக் கட்சியும் கொண்டுள்ளது. எதிர்க்கட்சிகளின் நிலைப்பாடும் இதுவே. இதனால் அரசாங்க, எதிர்க் கட்சிகளின் நிலைப்பாடுகளுக்கு இடையே மோதல் இல்லை.

மோதல் இருப்பது பிரதம நீதியரசருக்கு எதிரான பிரேரணையைச் சபாநாயகர் ஏற்பதா, இல்லையா என்பதிலேயே ஆகும். அரசாங்கக் கட்சி பிரேரணையை ஏற்க வேண்டாம் என்கிறது. ஏற்குமாறு கூறுகிறது எதிர்க்கட்சி, ஏற்கக்கூடாது என்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நாடாளுமன்றத்துக்கு நிலையியற் கட்டளைகள் உள்ளன. அவற்றின்படி நாடாளுமன்றம் செயற்படும். 78 (அ) என்னும் நிலையியற் கட்டளை தெரிவுக்குழு நியமிப்பது தொடர்பானதாகும். இதன்படி சபாநாயகர் செயற்படலாம்.

சபாநாயகர் நாடாளுமன்ற நிலையியற் கட்டளை 78 (அ) கீழ் செயற்பட்டு தெரிவுக்குழுவை நியமிப்பது அரசியல் சட்டத்துக்கு முரணானது. தெரிவுக்குழு நியமித்து நீதியரசர் ஒருவருக்கு எதிரான குற்றச்சாட்டை விசாரிப்பது நீதிமன்றத்தின் அதிகாரத்தை சட்ட விரோதமாக வேறு ஓர் அமைப்பு பிரயோகிப் பதாகும். இந்த விடயங்கள் எல்லாம் உயர்நீதிமன்ற விசாரணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

ஒரு புறத்தில் நாடாளுமன்றம், மறு புறத்தில் உயர்நீதி மன்றம், இடையில் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவிசாரணை பிரேரணை. இந்த சிக்கலுக்குத் தீர்வுதான் என்ன?

—எட்வேட்

# ராசி பலன்

**17.06.2001 முதல் 23.06.2001 வரை**

**பொ.சந்திரன்.**

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**
இராசியில் சுக்கிரன், இராசிநாதனை குருபார்ப்பது விசேஷம். கல்வியில் ஆர்வம் குறையலாம். பணத்தட்டுப்பாடு இருக்கும். திருமணப் பேச்சு தாமதிக்கலாம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். உறவினர் அயலாரோடு மனக்கசப்புக்கு இடமுண்டு. தேக ஆரோக்கியம் உண்டு. தலயாத்திரை, கோயில் வழிபாடு அமையும். தொழில்துறை முன்னேற்றம் உண்டு. நண்பர்களால் உதவியுண்டு.

**இடபம்: கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசிரிடம் 1,2.**
இராசிநாதன் செலவுத்தானத்தில், இராசியில் புதன், சனி இராசிக்கு இருபுறமும் சுபக்கிரகங்கள் இருப்பது யோகம். கல்வியில் ஆர்வம் இருக்கும். கையில் பணம் இருக்கும். வீடு, வாகனங்களால் இலாபம் உண்டு. பிரயாண பலன், திருமணபலன் உண்டு. உறவினர் விசுவாசமாக இருப்பர். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் விருத்தி உண்டு. பதவி உயர்வு உண்டு. நண்பர்களால் உதவி இருக்கும்.

**மிதுனம்: மிருகசிரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**
இராசிநாதனோடும், இராசியோடும் சுக்கிரனைத் தவிர எல்லாக் கிரகங்களும் தொடர்புபடுகின்றன. வீண் அலைச்சல் இருக்கும். பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் குறையலாம். வீடு, வாகனங்களால் செலவு ஏற்படலாம். சொந்தக்காரர் விசுவாசமாக இருப்பர். பிரயாண அனுகூலம் உண்டு. திருமணப் பேச்சு தாமதிக்கலாம். உடல் ஆரோக்கியம் சிறிது பாதிக்கலாம். தொழில் துறையில் சில பின்னடைவுகள் ஏற்படலாம்.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**
இராசிநாதன் பத்து முதல் பன்னிரண்டாம் வீடு வரை சஞ்சரிப்பது நல்லது. செவ்வாயின் பார்வை இராசிக்கு கிடைப்பது யோகம். சனியின் பார்வை இராசிக்கு கிடைப்பது சரியில்லை. பணத் தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் குன்றலாம். வீடு, வாகனம் இலாபம் தரும். உறவினர் விசுவாசமாக இருப்பர். தேக ஆரோக்கியம் நன்று. தொழில்துறை முன்னேற்றம் காணும். நண்பர்களால் தொல்லை வரலாம்.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம் 1.**
இராசிநாதன் இலாபத்தானத்தில் குரு, இராகுவோடு இருப்பது விசேஷம். பணப்புழக்கம் இருக்கும். கல்வியில் ஆர்வம் குறையலாம். பிரயாண வாய்ப்பு இருக்கும். திருமணப் பேச்சு சாதகமாக அமையும். வீடு, வாகனங்களால் செலவு உண்டாகும். உறவினர் அன்பாய் இருப்பர். முன்பு இருந்த நோய் விலகும். உடல் உறுதியாய் இருக்கும். தொழில் துறை முன்னேறும். புதிய தொழில் வாய்ப்புண்டு.

**கன்னி: உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2.**
இராசிநாதன் பாக்கியஸ்தானத்தில் சனியோடு இருப்பது யோகம். சுக்கிரன் இராசியை நோக்குவது விசேஷம். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். உறவினர் விசுவாசமாக இருப்பர். திருமண வாய்ப்பு பிரகாசமாக இருக்கும். பிரயாண வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியம் நன்று. தொழில் துறை முன்னேற்றம் காணும்.

**துலாம்: சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3.**
இராசிநாதன் இன்பத்தானத்தில் இருந்து இராசியை நோக்குவது விசேஷம். குரு இராசியை நோக்குவது யோகம். பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் குறையலாம். எடுத்த செயல் வெற்றியில் முடியும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். உறவினரோடு மனஸ்தாபத்திற்கு இடமுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. திருமண யோகம் உண்டு. தொழில்துறையில் சில தடங்கல் ஏற்படலாம்.

**விருச்சிகம்: விசாகம் 4, அனுஷம், கேட்டை.**
இராசிக்கும், இராசிநாதனுக்கும் சுக்கிரனைத் தவிர மற்றைய கிரகங்களோடு தொடர்பு உண்டு. பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். எடுத்த கருமங்கள் தாமதமாகலாம். வீடு, வாகனம் இலாபம் தரும். உறவினர் விசுவாசமாக இருப்பர். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் துறையில் சில பிரச்சினைகள் உருவாகலாம். திருமணப் பேச்சுக்கள் தாமதமாகலாம். நண்பர்களால் உதவி உண்டு.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**
இராசிநாதன் இன்பத்தானத்தில் இருந்து இராசியை நோக்குவது நல்ல பலனைத் தரும். எடுத்த கருமங்கள் இலகுவில் வெற்றியாக முடியும். பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் குறையலாம். வீடு, வாகனம் இலாபம் தரும். உறவினர் விசுவாசமாக இருப்பர். உடல் ஆரோக்கியம் நன்று. திருமண வாய்ப்பு உண்டு. தொழில்துறையில் சில பின்னடைவுக்குப்பின் பலன் உண்டு.

**மகரம்: உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2.**
இராசிநாதன் பூர்வ புண்ணியஸ்தானத்தில் புதனோடு இருப்பது நல்ல பலனைத் தரும். பணத்தட்டுப்பாடு இருக்காது. கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். சொந்தக்காரர் விசுவாசமாக இருப்பர். திருமணப் பேச்சு தடைப்படலாம், உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் துறை விருத்தியடையும். பிரயாணம் தாமதமாகலாம். நண்பர்களால் செலவு ஏற்படலாம்.

**கும்பம்: அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3.**
இராசிநாதன் சுபஸ்தானத்தில் புதனோடு இருந்து இராசியை நோக்குவது நல்ல பலனைத் தரும். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். உறவினர் விசுவாசமாக நடக்க மாட்டார்கள். எடுத்த கருமங்கள் வெற்றியாக அமையும். திருமணபலன் உண்டு. தேக ஆரோக்கியம் நன்று. தொழில் துறை முன்னேறும். நண்பர்கள் உதவுவர்.

**மீனம்: பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**
இராசிநாதன் சுப ஸ்தானத்தில் சூரியன், ராகுவோடு இருப்பது நல்ல பலனைத்தரும். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். எடுத்த செயல் தாமதமானாலும் நிறைவேறும். திருமணப் பேச்சு முன்னேற்றகரமாக அமையும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். உறவினர் விலகி இருப்பர். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் துறை விருத்தியடையும்.

# பேரியலின் விஜயத்தோடு புத்தளத்துக்கு பொற்காலமா?

## முஸ்லிம் அகதிகள் நலனுக்கு ஆணையாளர்; ஆஸ்பத்திரி அபிவிருத்தி

வடமாகாணத்தில் இருந்து புலம்பெயர்ந்து புத்தளம் மற்றும் பிரதேசங்களில் வாழும் முஸ்லிம்களின் நலன்களையும் மற்றும் அவர்கள் தொடர்பான அரச நிர்வாக விடயங்களையும் கண்காணித்து உரிய நடவடிக்கை எடுக்க அதிகாரம் உடைய விசேஷ ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது வனாத்தவில்லு பிரதேசசெயலாளராகக் கடமையாற்றும் எம்.எச்.எம். முகியினுதீனே வடக்கு—கிழக்கு ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக்க ஜயவர்த்தனவினால் இந்தப் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.

கிழக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் கிராமிய வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சரும் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவியுமான திருமதி பேரியல் அஷ்ரப் ஜனாதிபதியைச் சந்தித்து விடுத்த வேண்டுகோளை அடுத்தே இந்த நியமனம் செய்யப்பட்டுள்ளது.

தேசிய ஐக்கிய முன்னணியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இன நல்லிணக்க விவகார பிரதியமைச்சருமான ஜனாப் நூர்தீன் மசூரும் இது தொடர்பாக அரசுக்கு கோரிக்கைகளை விடுத்து வந்தது குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து கடந்த வாரம் புத்தளத்துக்கு விஜயம் செய்த அமைச்சர் திருமதி பேரியல் அஷ்ரப், பிரதியமைச்சர் நூர்தீன் மசூர், ஆளுநர் மற்றும் உயர் அதிகாரிகள் இடம்பெயர்ந்தவர்களைச் சந்தித்துப் பேசினர்.

புத்தளம் மாவட்ட கச்சேரியில் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் திருமதி பேரியல் அஷ்ரப் உரை நிகழ்த்தினார்.

அவர் தனது உரையில் ''இடம்பெயர்ந்த மக்கள் வடமாகாணத்துக்குச் சொந்தமானவர்கள். இதனை உறுதிப்படுத்தவும் அவர்களது கல்வி, தொழில் வாய்ப்பு மற்றும் அனைத்து விடயங்களையும் கவனிக்கவுமே இந்த விசேஷ ஆணையாளர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த விசேஷ ஆணையாளர் அலுவலகம் வடக்கு—கிழக்கு மாகாண சபையின் ஓர் பிராந்திய அலுவலகமாக புத்தளத்தில் செயற்படும்.

''இதனை உருவாக்குவதற்கு எமக்கு பூரண ஆதரவை வழங்கிய ஜனாதிபதிக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார்.

இந்த வைபத்தில் கலந்து கொண்ட பிரதியமைச்சர் நூர்தீன் மசூர் உரையாற்றுகையில், இடம்பெயர்ந்த மக்களின் நலன் தொடர்பாக திருமதி பேரியல் அஷ்ரப் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு நன்றி தெரிவித்தார்.


பேரியல் அஷ்ரப்

இந்த வைபவத்தில் வடமேல் மாகாண அமைச்சர் ஏ.எச்.எம். நவவி, புத்தளம் நகரபிதா கே.பாயிஸ் உட்பட உயர் அதிகாரி களும் இடம்பெயர்ந்த மக்களின் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

திருமதி பேரியல் அஷ்ரப் தனது புத்தளம் விஜயத்தின் போது புத்தளம் மாவட்ட தள வைத்தியசாலைக்கும் விஜயம் செய்தார்.


புத்தளம் மாவட்ட தள வைத்தியசாலையின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங் கியின் உதவியைப் பெற்றுத் தருவதற்கு தன்னாலான முழு முயற்சிகளையும் மேற்கொள்வதாக அவர் அங்கு கூறினார்.

அமைச்சர் பேரியல் அஷ்ரப்புடன் பிரதி அமைச்சர் நூர்தீன் மசூர், வடக்கு—கிழக்கு மாகாண ஆளுநர், புத்தளம் நகரபிதா கே. பாயிஸ் மற்றும் உயர் மட்டக் குழுவினர் புத்தளம் வைத்தியசாலைக்கு விஜயம் செய்தனர்.

இந்த விஜயத்தின் போது வைத்தியசாலையின் உடனடித் தேவையான பிரசவ விடுதியை விரிவுபடுத்துவதற்கும் பரிசோதனைக் கூடத்தை அபிவிருத்தி செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வடக்கு—கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளருக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

வைத்தியசாலையில் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் திருமதி பேரியல் அஷ்ரப், வடபகுதியில் இருந்து புலம் பெயர்ந்து புத்தளத்தில் வாழும் சுமார் 15 ஆயிரம் மக்களுக்கு வசதிகள் குறைந்த நிலையிலும் புத்தளம் மாவட்ட வைத்தியசாலை சேவை செய்வதாகக் கூறினார். அதற்காக வைத்திய அதிகாரி களுக்கு அவர் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். இடம்பெயர்ந்து வாழும் இம்மக்கள் தமது மக்கள் என்றும் அவர்களை மிகவும் கரிசனையுடன் கவனிக்குமாறும் அவர்களுக்குத் தேவையான சகல உதவிகளையும் செய்வதற்குத் தாம் தயாராக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஏ.எஸ். புல்கி



## யுத்தம் ஒழியுமா? அமைதி பிறக்குமா?

பல்லாயிரக்கணக்கான மக்களைப் பலியாக்கி விட்டு இன்னும் பல்லாயிரக்கணக்கானோரை அங்கவீனர்களாக்கிய கொடிய யுத்தம் ஒழிந்து சமாதானம் பிறக்குமா? இதுவே இன்று எல்லோரது மனதிலும் எழும் ஆதங்கம். புத்தளம் இந்து—தமிழ் மகாவித்தியாலயத்தில் அண்மையில் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டிகள் நடைபெற்றன. அப்போட்டிகளில் இடம்பெற்ற விநோத உடைப்போட்டி சகலரையும் கவர்ந்தது.

வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த குடும்பம் ஒன்றும் விநோத உடைப்போட்டியில் இடம்பெற்று சகலரையும் மனதுருக வைத்தது. ஒரு காலையும் கண்ணையும் இழந்த தந்தை, ஒரு கையையும் கண்ணையும் இழந்த மகன், அனைத்தையும் இழந்துவிட்ட துயரத்தில் ஒரு தாயார் காணப்படுகின்றனர்.

# பூக்குளத்திலிருந்து இடம்பெயர்ந்த 200குடும்பங்களுக்கு நட்டஈடு

புத்தளம் தொகுதிக்கு வடக்கே மன்னார் மாவட்டத்துக்குச் சமீபமாக வில்பத்துச் சரணாலயத்தின் மத்தியில் அமைந்துள்ளது பூக்குளம் கிராமம்.

இது சுமார் 200 குடும்பங்களைக் கொண்ட தமிழ், முஸ்லிம் மக்கள் வாழ்ந்த கிராமம்.

கடந்த காலத்தில் இடம்பெற்ற அசம்பாதவிதச் சம்பவங்களினால் கிராம மக்கள் முற்றுமுழுவதுமாகப் பாதிக்கப்பட்டனர்.

இங்கிருந்து இடம்பெயர்ந்து புத்தளம் பகுதியிலுள்ள கரைத்தீவு, இலவங்குளம், கற்பிட்டி போன்ற இடங்களில் குடியேறி மிகுந்த சிரமங்களின் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

ஒரு தசாப்த காலத்துக்கு மேலாக இவர்கள் பலவித இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்ற போதிலும் இவர்களுக்கு போதுமான நட்டஈடுகள் வழங்கப்படாதது குறித்து கவலை தெரிவிக்கப்பட்டு வந்தது.

இது சம்பந்தமாக மேற்படி கிராமத்தை உள்ளடக்கிய வண்ணாத்திவில்லு பிரதேசசபைத்தலைவர் ஆர்.என். அசனா மரைக்கார், புத்தளம் தொகுதி சுதந்திரக் கட்சி அமைப்பாளரும், வடமேல் மாகாண போக்குவரத்து, பெருந்தெருக்கள் அமைச்சருமானஎம்.எச்.எம். நவவி ஆகியோர் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக இக்கிராம மக்களுக்கான நட்டஈட்டுப் பணம் அண்மையில் பெற்றுக்கொடுக்கப்பட்டது.

வண்ணாத்திவில்லு பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்ற எளிமையான வைபவம் ஒன்றில் வைத்து பாதிக்கப்பட்ட கிராம மக்களுக்கு 17 இலட்சம் ரூபாய் நிதி நட்டஈடாக பங்கிட்டு வழங்கப்பட்டது.

அத்துடன் இலவங்குளம், கரைத்தீவு போன்ற பகுதிகளில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட பிரதேச வாசிகளுக்கு சுமார் பத்து இலட்சம் ரூபாய் நிதி நிவாரணமாக வழங்கப்பட்டது.

வண்ணாத்திவில்லு பிரதேசசபைத்தலைவர் ஆர்.என்.அசனா மரைக்கார் தலைமையில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் மாகாண அமைச்சர் எம்.எச்.எம். நவவி பிரதம அதிதியாக கலந்துகொண்டு நட்டஈட்டுத் தொகையையும், நிவாரணத் தொகையையும் கையளித்தார்.

அமைச்சர் நவவி அங்கு உரையாற்றும் போது:—

''இந்த நட்டஈட்டைப் பெற்றுக்கொடுப்பதற்கு வண்ணாத்திவில்லு பிரதேச சபைத் தலைவர் ஆர்.என். அசனா மரைக்கார் பெரிதும் உழைத்துள்ளார்.

''அதற்காக எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

''அதே நேரம் நட்டஈட்டுப் பணத்தை வழங்க உதவிய அமைச்சர் திருமதி பேரியல் அஷ்ரப்புக்கும், வெள்ள நிவாரண உதவியை வழங்க உதவிய அமைச்சர் மில்ரோய் பெர்னாந்துவுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவிக்கின்றேன்'' என்றார்.

## புத்தளத்தில் இன ஐக்கியத்தை வளர்க்க நல்லிணக்கக் குழு

புத்தளம் பகுதியில் வசிக்கும் மூவின மக்களிடையேயும் இன ஐக்கியத்தையும், புரிந்துணர்வையும் வளர்க்க நல்லிணக்கக் குழு ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

புத்தளம் காசிமிய்யா அரபிக் கல்லூரி அதிபரும், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் புத்தளம் மாவட்டத் தலைவருமான அப்துல்லாஹ் மஹ்மூது ஆலிம் (மதனி) தலைமையில் இது தொடர்பான வைபவம் புத்தளம் இஸ்லாமிய கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

பள்ளிவாசல்களின் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் சமூக சேவை ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா சபையின் பொதுச் செயலாளர் மௌலவி எம்.ஜே.எம்.றியாழ், வடக்கு முஸ்லிம்களின் ஒற்றுமைக்கான அமைப்பின் தலைவரும் யாழ் கிளிநொச்சி மாவட்ட ஜம் இய்யத்துல் உலமா சபைத் தலைவருமான மௌலவி சுபியான் ஆகியோர் விசேட அதிதிகளாகக் கலந்து கொண்டனர். இன ஐக்கியம், சமூக புரிந்துணர்வு ஆகிய விடயங்கள் குறித்து அவர்கள் விரிவாக எடுத்துக் கூறினர்.

வைபவத்தில் தற்காலிக நல்லிணக்கக் குழுவொன்று அமைக்கப்பட்டது.

விரைவில் நிரந்தரமான குழு ஒன்று அமைக்கப்பட்டு நல்லிணக்க முயற்சிகள் தொடரும் எனத் தெரிவிக்கப்பட்டது.


நாட்டில் அமைதி, சமாதானம் நிலவ புனித அந்தோனியாரே எமக்காக இறைவனை மன்றாடுவீராக


Victoria COURT
சுவா புரொப்பர்ட்டி ஸ்தாபனத்தாரின்
நவீனமயமான தொடர் மாடி மனைகள் இப்போது வெள்ளவத்தையில்.... பாடசாலைகள், வங்கிகள், கல்வி நிலையங்கள் சந்தைகள், சமய ஸ்தலங்கள் ஆகியவற்றுக்கு அருகாமையில்
SUVA PROPERTY DEVELOPERS
No.54, Rudra Mawatha, Colombo-06.
Tel:552752, 552753, 077-314239, 077-766081
Web : www.suvauk.com
For U.K. Bookings Contact Numbers: 020-85218151, 077-69942339

HOTEL ANNAPOORANNA
உங்கள் திருமண வைபவங்களுக்கான சகல விதமான உணவு வகைகளுக்கும் ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்

விசேட நேரடி பரிமாற்ற சேவையும் செய்து கொடுக்கப்படும்
HOTEL ANNAPOORANNA
159A, Sea street, Colombo-11. Tel : 330621

Y.P.M. MANICKAVASAGA NADAR & CO.
வை.பி.எம். மாணிக்கவாசக நாடார் அன் கம்பனி
Paper merchants, Dealers in quality Wedding Cards and Stationaries
திருமண அழைப்பிதழ்கள் மட்டுமன்றி சகலவிதமான மங்கள காரியங்களுக்கும் உரிய அனைத்து வகையான அழைப்பிதழ்களையும் இங்கே பெற்றுக்கொள்ளலாம்.
Y.P.M. MANICKAVASAGA NADAR & CO.
No.37, Maliban Street, Colombo - 11.
Tel : 324114,328795, 451405, 074-712738
Fax : 94-1-445559.

# கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருப்பவனி

## புதுமைகள் புரிந்து அருள் மழை பொழியும் புனிதர்

கோடிப் புதுமைகள் புரியும் புனித அந்தோனியாருக்குத் திருவிழா எடுக்கும் காலம் இது. ஒவ்வொரு ஆண்டிலும் ஜூன் 13ஆம் திகதி அந்தோனியார் ஆலயங்களில் இத் திருவிழா நடைபெற்று வருகிறது.

இலங்கையில் கொழும்பு கொச்சிக்கடையில் உள்ள புனித அந்தோனியார் ஆலயத்தில் அவரது திருவிழா மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது.

1195ஆம் ஆண்டு இவர் ஒரு சாதாரண புத்திரனாகவே பிறந்தார். ஆனால் சிறு வயது முதலே இறை தொண்டில் ஈடுபாடு கொண்டிருந்தார்.

36 ஆண்டுகள் மட்டுமே அவர் உயிர் வாழ்ந்தார். பேர்டினன்ட் என்னும் இயற் பெயரைக் கொண்டிருந்த இவர் 1231ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13ஆம் திகதி அமரரானார்.

இயேசு கிறிஸ்துவில் மிகுந்த அன்பும் பக்தியும் கொண்டு இவர் வாழ்ந்தார். அதனால் குழந்தை இயேசுவைக் கரத்தில் ஏந்தும் பாக்கியத்தையும் அவர் பெற்றார்.

புனித அந்தோனியாரின் புதுமைகள் உலகம் அறிந்தவை. அவற்றில் 13 புதுமைகள் குறிப்பிட்டு சொல்லப்படுகின்றன. இதனால் இப்புனிதரை மன்றாடும் மக்கள் புதுமைகளை வேண்டியே விசேடமாக மன்றாடுகின்றனர்.

ஆர்ப்பரித்த கடலை இப்புனிதர் அமைதியடையச் செய்து புதுமை நிகழ்த்தினார். மீனவ சமூக மக்கள் புனித அந்தோனியாரையே தமது புனிதராகக் கொண்டு வழிபடுகின்றனர்.


கரையோரக் கிராமங்களில் பெரும்பாலும் அந்தோனியார் ஆலயங்களே இதனால் காணப்படுகின்றன.

செவ்வாய்க்கிழமையை அவருக்குரிய நாளாகக் கணித்து ஆலயங்களில் விசேட வழிபாடுகள் நடத்தப்படுகின்றன.

மரித்து அடக்கம் செய்யப்பட்ட இப்புனிதரின் நாக்கு அழியாமல் இருப்பது 31 ஆண்டுகளின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது.

இப்புனிதரின் திருவிழாவுக்காக கொச்சிக்கடை ஆலயத்தில் கடந்த 3ஆம் திகதி கொடியேற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து தினமும் மாலையில் ஆராதனைகள் நடத்தப்பட்டன. 13ஆம் திகதி திருவிழா கொண்டாடப்படுகிறது.

முன்னர் எல்லாம் நாட்டு நிலைமைகள் வழமையாக இருந்த போது வடபகுதியில் இருந்தும் மக்கள் யாத்திரையாக கொச்சிக்கடை அந்தோனியார் ஆலய திருவிழாவுக்கு வருவார்கள். இன்றோ அந்த நிலைமை இல்லை.



ஆலயங்களில் அந்நாட்களில் ஒரு தேவைக்காகவே கொடி ஏற்றப்பட்டது. பின்தங்கிய கிராமப்புறங்களில் அன்று ஆலயங்கள் இருந்தன. குருவானவர் இருக்கமாட்டார். வசதியான ஒரு நாளிலேயே அயல் நகரத்தில் இருந்து ஒரு குருவானவர் அங்கு வருவார்.

அவரது வருகையை அப்பகுதி மக்களுக்கு அறிவிக்க ஆலய மணியோ வேறு வசதிகளோ இருக்கவில்லை. அதனால் குருவானவரின் வருகையை அறிவிக்க ஒரு நீண்ட தடியில் ஒரு துணியைக் கட்டி உயரே தெரியுமாறு வைத்து விடுவார்களாம்.

இந்த முறையே படிப்படியாக மாற்றமடைந்து திருவிழாவுக்கு கொடி ஏற்றும் நிகழ்ச்சியாகியுள்ளது. அந்தோனியார் ஆலய சுற்றாடலில் இன்று கொடி மரங்களோ இல்லாத இடம் இல்லை எனலாம்.

இத்திருவிழாவின் இறுதி நிகழ்ச்சியாக நடைபெறும் புனித அந்தோனியாரின் திருச் சொரூபபவனி விசேடமானதாகும். கொச்சிக்கடை என்றால் புனித அந்தோனியார் ஆலயமே முதலில் ஞாபகத்துக்கு வரும். அந்த அளவுக்கு புனித அந்தோனியாரின் நாமம், புகழ் கொச்சிக்கடையுடன் ஒன்றித்து விட்டது.

எம்மதத்தவர்களாக இருந்தாலும் அவர்கள் தமது தேவைகளுக்காக கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயம் சென்று மன்றாட பின்நிற்பதில்லை.

அதனால் தான் சாதாரண ஓர் ஆலயமாக இருந்து வந்த இந்த ஆலயம் இப்பொழுது ஒரு திருத்தலமாக அருளைப் பொழிந்து கொண்டிருக்கின்றது.

### இரண்டு காசு காணிக்கை

ஆலயங்களில் நாம் காணிக்கை செலுத்துகிறோம். காணிக்கை செலுத்துவது எவ்வாறு இருக்க வேண்டும்?

பிரதி செவ்வாய்க்கிழமைகளில் புனித அந்தோனியார் ஆலயத்தில் திரளும் கூட்டத்துக்கு அளவில்லை. பெரும்பாலானவர்கள் தமது நேர்த்தியைச் செலுத்துவதை அப்பொழுது காண முடியும்.

காணிக்கை செலுத்துவது இவ்வாறுதான் இருக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்ட இதோ ஓர் உதாரணம்.

தேவாலயத்தில் காணிக்கைப் பெட்டியருகே உட்கார்ந்து யோசித்துக் கொண்டிருந்தார் இயேசு. பல பிரபுக்கள் போடும் காணிக்கையைப் பார்த்தார். அவ்வேளையில் வளைந்த முதுகு, கந்தல் உடை, கையில் கோலுடன் ஒரு கைம்பெண் வந்தாள். தன் பையில் இருந்த இரண்டு காசை காணிக்கை போட்டாள்.

அப்பொழுது, ''அவளே எல்லோரினும் அதிகமாய்ப் போட்டவள்'' என்றார் இயேசு.


With Best Compliments From

**A.V.M. Metals**

Dealers in Aluminium, Brass, Copper, Lead, Zinc
Cast iron, Iron ect.,
Ferrous & Non Ferrous Scrap Metals.

234, Grandpass Road,
Colombo-14. Tel:329141, 470855
Mobile : 077-323084

நீங்கள் விரும்பும் எல்லாவிதமான
அச்சு வேலைகளுக்கும்
தன்னிகரற்ற
ஒரே அச்சகம்

**அரசன் அச்சகம்**

**ARASAN PRINTERS**

Offset, Letterpress and Silk Screen Printers
30, Hyde Park Corner,
Colombo - 02.
Tel : 326482,422393
Fax : (94-01) 422393

கலைகள் வளர நல்ல கலைஞர்கள் உருவாக புத்தாயிரமாம் ஆண்டில் புதிய ஆரம்பம், ஒரே கூரையின் கீழ் எல்லா கலைகளையும் கற்க ஒரு அரிய வாய்ப்பு. சங்கீதம், பரத நாட்டியம், ஓகன் கிற்றார், வயலின், வீணை, தபேலா, மிருதங்கம், ரம்ஸ், புல்லாங்குழல், ஓவியம் என தனித்தனி வகுப்புக்கள்.

தொடர்பு கொள்ள:

**கலாசுரபி கவின் கலைகள் பயிலகம்**

201, ஜம்பட்டா வீதி, கொழும்பு – 13.
தொலைபேசி: 330772, 078–663062
அனுசரணை நண்பர்கள்.

**அருள் ஜுவலர்ஸ்**

No.3, Sea Street, Colombo - 11 Tel: 436331
No.105, Galle Road, Wellawatha, Colombo - 06. Tel: 580230

**அம்மன் ஜுவலர்ஸ்**

No.29, Sea Street, Colombo - 11. Tel: 332033

**ஸ்ரீ கல்யாணி ஜுவலர்ஸ்**

No.5, Sea Street, Colombo - 11. Tel: 323657
உங்கள் விருப்பம் போல் நகைகளைத்
தெரிவுசெய்ய நீங்கள் நாடவேண்டிய நகை மாளிகைகள்



**SALON DE JEEVA**

All Beauty care for Gents, Ladies & Children. Hair style and Hair Dressing
(Wella Agent and Oriflame Agent)

No. 257/B, Galle Road,
Wellawatta, Colombo - 06.
Tel: 593268

**UNI LANKAS**

திருமண வைபவங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள் என
சகலவிதமான சமய வைபவங்களுக்குமான வாழ்த்து
அட்டைகளையும், அழைப்பிதழ்களையும் இங்கே
பெற்றுக்கொள்ளலாம்.

அத்துடன்

* computer Typesetting (Sinhala, Tamil & English)

நினைவு மலர்கள் உட்பட சகலவிதமான
அச்சுவேலைகளுக்கும்

No. 37, St.Anthony's Mawatha, Colombo -13. T.P.074-614438

**SUSILA GOLD HOUSE**

கலைநயத்துடன் கூடிய அனைத்து நகை வகைகளையும்
நேர்த்தியான டிசைன்களில் பெற்றுக்கொள்ள

**சுசீலா கோல்ட் ஹவுஸ்**

No. 177/9, Inside Sea Street,
Colombo - 11.
Tel: 439090

# கொழும்பு கொச்சிக்கடை புனித


MJ MARIA JEWELLERS
சகலவிதமான தங்க நகைகளையும்
உங்கள் விருப்பம் போல்
பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய
ஒரே இடம்
மரியா ஜூவலர்ஸ்
No. 126 - 128, Sea Street, Colombo - 11.
Tel: 434435

ALC
ASIAN LINK COMMUNICATION
IDD, Local calls, Fax, Laminating, Binding
Photo Copy, Net 2 Phone & Stationery
VAN for Hire (A/C or non A/C)
4C, Fussels Lane, Colombo - 06.
Tel: 592244, 592561, 503473, 555896-7
Fax: 94-01-555897





புனித அந்தோனியாரே நாட்
நிலைத்திட இறைவன


JAYALALITHANGHI
JEWELLERS
இவள் தேவதையோ என
வியக்க வைக்கும்
தங்க நகைகளை
நவீன டிசைன்களில்
நேர்த்தியாக
செய்து
பெற்றுக்கொள்ள
இன்றே
விஜயம்
செய்யுங்கள்



ஜெயலலிதாங்கி ஜூவலர்ஸ்
இல. 225, காலி வீதி,
கொழும்பு – 04.
தொலைபேசி: 595144

தேவி ஜூவலர்ஸ்
தலைநகரில் தனக்கென
முத்திரை பதித்து
தங்க நகைகளில் மங்கா புகழ் பெற்ற
Devi
Jewellers



Buyers & Sellers of Bullion
(Gold, Silver, Platinum & Palladium)
Diamonds, Gems & Cubic Zicorium
AUTHORISED MONEY CHANGER
CUSTOM MADE JEWELLERY
No. 131, Sea Street, Colombo - 11, Sri Lanka.
Tel: 432502, Fax: 327101
E-mail: devi 131@visual.lk

CD WORLD
Music Centre (Pvt) Ltd.
Dealers in Tamil, English,
Hindi and Sinhala
DVD/Video CD/Audio CD,
Audio Cassettes
No. 618, Galle Road, Colombo - 03.
Tel: 581412 Fax: 074-718152

சகல விதமான அரிசி வகைகளை
மொத்தமாக நியாய விலையில்
பெற்றுக்கொள்ள
AMIEKO ENTERPRISE
No. 31, 4th Cross Street,
Colombo - 11
Phone: 430772 / 347306

ASF ALSAN STEEL FURNITURE
Manufacturers of High Quality
Equipments & House hold furniture
Office/Workshop:
No.55, Uswatha Road, Kandana, Sri Lanka
Tel: 238650, 239964 Fax: 075-347136
Show Room:
No.48, Negombo Road, Kandana.
Tel: 238907
Show Room:
No.108, St.Antony's, Mawatha, Colombo - 13.
Tel: 458231

GRACE COURT
By CDI Engineers (Pvt) Ltd
எம்மால்
நிர்மாணிக்கப்பட்ட சகல
தொடர் மாடிகளுக்கும்
உறுதிகளும் ஏனைய
சட்ட ஆவணங்களும்
வழங்கப்பட்டுள்ளன
என்பதை
மனமகிழ்ச்சியுடன்
தெரிவித்துக்
கொள்கின்றோம்.
குடியுரக தயார் நிலையில்
கொட்டாஞ்சேனையில்
GRACE COURT
பாடசாலைகள், சமய வழிபாட்டுத் தலங்கள்,
சந்தைகள், தபாலகம், வங்கிகள்
ஆகியவற்றிற்கு அருகாமையில்
50% ஆரம்பக் கொடுப்பனவு. மீதியை நீண்ட காலக்கடன் அடிப்படையில் செலுத்தலாம்



79/1, Jampettah Street, Kotahena, Colombo-13, Tel : 345816, Hot Line : 072-242813, Fax : 588292, E-mail : cdieng@sltlk




வீடியோ ஸ்தாபனத்தாரின் நவீனமயமான வசதிகளுடன்கூடிய ஓர்ச்சாட் திருமண மண்டபம் - வெள்ளவத்தை
இந்து திருமண வைபவங்களுக்கும் மற்றும் ஏனைய சமய வைபவங்களுக்கும்
மண்டபத்துடன் கூடிய சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும்
(மணப்பெண் அலங்காரம், மண்டப அலங்காரம், உணவு, வீடியோ படப்பிடிப்பு மற்றும் புகைப்படப்பிடிப்பு)
ORCHAAD WEDDING PALACE (PVT) LTD
arrangement UTHAYAN Video
No.7-7/4., Galle Road, Ground Floor, Orchaad building, Colombo-06.
Tel : 074-514298, Hotline: 077-355297, 077-316453.

# ... அந்தோனியார் திருப்பவனி




...நாட்டில் அமைதி, சமாதானம்
...பனை மன்றாடுவீராக!

## SATHA VIDEO

Photo Graphers & Video Graphers

**Orchard Building,**

*7-2/8, (Second Floor), Galle Road, Colombo - 06.*

**Phone: 584191, 591812 Fax: 94-1-91812**
**Mobile: 077-304027**

## MARUTHI SERVICES

**Reception Hall**
**Hall Arrangements**
**Meals (Indoor & Outdoor)**
**For all Occations**

**Orchard Building (Opp. Savoy),**

*7-2/9, Galle Road, Colombo - 06, Sri Lanka.*
*Tel: 584191, 591812 Fax: 94-1-591812*

## ATLAS INTERNATIONAL (PVT) LTD.

**Atlas Express Travel & Tours**

**EMS Speed Post International Service**

227, Central Road, Colombo 12, Sri Lanka.
Tel: 335216-7, 431498, 330325 Direct: 348572-3
Fax: 436254, 348573 Tlx: 23450 ATLAS CE
e-mail: atlas_int@hotmail.com

சகல நாடுகளுக்குமான
விமான பிரயாணச் சீட்டுக்களை
பெற்றுக்கொள்ள

## SAGI TRAVELS & FILMS

**No.21, 3rd Floor,**
**Central Super Market Complex,**
**Colombo - 11.**
**Tel: 430375, 430369**

## RETINA INSTITUTE OF BUSINESS STUDIES



Kids Computing
MS Office
Diploma in Computer Studies
Graphic Designing
Web Designing
Tofel
Spoken English Classes

**2 1/2, Edward Lane, Colomo - 03.**
**Tel: 507781, 507782**

## RETINA RECRUTING

வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஸ்தாபனம்
ஆண், பெண் இருபாலாருக்குமான வேலைகள்
Cyprus, Dubai, Qatar, Saudi-Arabia
மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்குத் தொழில்
பெற்றுத் தருவோர்

## RETINA RECRUTING

2 1/2, Edward Lane, Colombo - 03.
Tel: 507781, 507782

முருங்கனில் சகல விதமான விவசாயப்
பொருட்கள், உரவகைகள், கிருமிநாசனி,
பெயின்ற் வகைகள், நீர் இறைக்கும் இயந்திரங்கள்,
துவிச்சக்கரவண்டிகள், சீமெந்து, கட்டடப் பொருட்கள்,
மின்சார உபகரணங்கள் மற்றும் எஸ்-லோன் பைப்புகள்
அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே இடம்

**க. டொனேசன் அன் பிரதர்ஸ்**

மெயின் வீதி, முருங்கன்.
T.P : 023-32604

சுடர் ஒளி பத்திரிகை முகவர்

JRS

## J.REMITTA STORES

P.255, Keyzer Street, Colombo-11,
Sri Lanka.
T.P. Shop: 344287, 345361. Stores : 348184
Fax : 345258

## சங்கீதா ஜூவெல்ஸ்

வெள்ளவத்தையில் பல வருடங்களுக்கு
மேலாக மக்களின் நன்மதிப்பைப் பெற்ற
ஒரே ஸ்தாபனம்

Sangeetha JEWELS

Dealers in 22 kt. Gold Jewellery.
Credit Card Accepted.
**335C, Galle Road, Wellawatte, Colombo - 06.**
**Tel: 500682, 585321**



J/மஹாலக்ஷ்மி

SR **THANGAMALIKAI**

யாழ்ப்பாணம், மஹாலக்ஷ்மி ஜுவலரி மார்ட் ஸ்தாபனத்தார் தலைநகர் கொழும்பு செட்டியார் தெரு இலக்கம் 78 இல்
J / மஹாலக்ஷ்மி SR தங்கமாளிகை 18/05/2001 அன்று கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது
என்பதனை எமது அன்பர்கள் நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத் தருகின்றோம்.
நீங்கள் விரும்பும் நகைகளை நீங்கள் விரும்பும் வடிவத்தில் அசல் 22 காரட் தங்கத்தில் உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம்.

J/மஹாலக்ஷ்மி

SR தங்கமாளிகை (Genuine 22Ct.Gold)

**No.78, Sea Street, Colombo-11. T.P: 330937 Fax: 458581.**



D I G I N E T

## COLLEGE OF COMPUTER COMMERCIAL MANAGEMENT

*NEW COURSES*

* Visual Basic 6.0
* Corel Draw 10
* Java
* Photoshop 5.0
* Visual C++
* Adobe Pagemaker 6.5
* Macromedia Flash 5.0
* Adobe Premiere 5.0/6.0
* 3D Max
* Digital Publishing
* Capture/ Editing Card Configuration
* Video Editing & Titling
* CD Recording (ACD, VHS to VCD, DVD to VCD,.. etc.)

No.49A, Kotahena Street, Colombo-13. TP/Fax:- 074-616908.

## THANUSHA COMMUNICATION

* Local Calls
* IDD Calls
* Tamil, English & Sinhala Typing
* Fax
* Photo Copy
* Van for Hire
* Internet
* E-mail
* Air Ticketing
* Laminating
* Net Phone

**24 Hours Sevice**

No. 24, St. Anthony's Mawatha,
Colombo -13. T.P:- 074-610330-1

இதுவரை.....

பஸ்ஸினுள் நடந்த கொள்ளைச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்கிறான் பொலிஸ் அதிகாரியான வில்லியம். கொள்ளையர்களைக் கண்டுபிடித்தேயாக வேண்டும் என்று வெறியுடன் செயற்படும் அவனுக்கு சில தடயங்கள் கிடைக்கின்றன.

இனி...

அந்த விமான நிலையக் கொள்ளை தொடர்பான விவரங்களை மீண்டும் ஆராயப் புகுந்தான் வில்லியம். போட் விமான நிலையத்தில் மிகவும் பாதுகாப்பான கருமபீடமான 'யு'வில் அந்தக் கொள்ளை இடம்பெற்றிருந்தது.

கணினி சகிதம் ஆசனப்பதிவு வேலைகளில் மும்முரமாக இருந்த அனற் என்ற காசாளரிடம் கொள்ளை அடிக்கப்பட்டது. கொள்ளையன் கைத்துப்பாக்கியுடன் விமான நிலையப் பணியாளர் பகுதிக்குள் எவ்வாறோ நுழைந்து கருமபீடக் கூண்டினுள் பின்புறமாக வந்து முரண்டுபிடித்த அனற்றின் கையைச் சுட்டுவிட்டுப் பலலட்சம் டொலர்களுடன் தலைமறைவாகி இருந்தான்.

துப்பாக்கி வெடித்த சமயம் விமான நிலையத்துக்கு வெளியே இடம்பெற்ற கைக்குண்டு வெடிப்புச் சம்பவம் துப்பாக்கிச் சத்தத்தை மழுங்கடித்துவிட்டது.

அதேகணம் ''விமான நிலையத்தின் பல்வேறு பகுதிகளிலும் குண்டு வெடிப்புக்கள் இடம்பெறும்'' என்ற அநாமதேயத் தொலைபேசி அழைப்பும் வந்திருந்தது.

கொள்ளையன் அந்த அமளிக்குள் வெளியேறிய பின்புதான் அனற் கையை ஏந்தியவாறு போட்ட சத்தம் பாதுகாவலர்களின் கவனத்தை ஈர்த்தது. அவள் உடனடியாக விமான நிலையத்தின் அவசர சிகிச்சைப் பிரிவிற்கு அனுப்பப்பட்டாள். கொள்ளை போன பணத்தில் சல்லிக்காசுகூட மீட்கப்படவில்லை.

சம்பவத்தின்போது எடுக்கப்பட்ட இரத்த மாதிரி அனற்றினுடையதுதான் எனக் கண்டதும் வில்லியம் சோர்ந்து போனான். அந்தச் சம்பவத்தில் கொள்ளையன் இரத்தம் சிந்தியிருக்கவில்லை.

''அனற்றினுடைய இரத்தம் ஏன் இந்தக் கொள்ளையனின் இரத்தத்தை ஒத்திருக்க வேண்டும்? எனவே பழைய விசாரணையில் தவறு இருக்கலாம். அன்று கொள்ளையனும் காயம்பட்டிருக்கவேண்டும்'' என்ற முடிவுக்கு வந்தான் வில்லியம்.

'அதை மீண்டும் துழாவினால் அந்தக் கிடப்பில் போடப்பட்ட கேஸையும் துப்புத் துலக்கிவிடலாம்' என நினைத்தான் அவன். அனற்றின் கையைத் துளைத்திருந்த துப்பாக்கிச் சன்னத்தின் மாதிரி விவரங்களும் ஜெபனின் கையைத் துளைத்திருந்த சன்னத்தின் தன்மைகளும் ஒத்திருந்ததை அடுத்ததாக வில்லியம் கண்டுகொண்டான்.

இரண்டு சம்பவங்களின்போதும் கிடைத்த வேறு பல தடயங்களும் கூட பொலிஸ் பாதுகாப்பில் இருக்கின்றன.

''குறிப்பிட்ட இரண்டு சம்பவங்களின் போதும் பெறப்பட்டவை ஒரே துப்பாக்கியால் சுடப்பட்ட சன்னங்களா எனக் கண்டுபிடித்தாக வேண்டும்'' என வில்லியம் நினைத்துக் கொண்டான்.

''நாளை விடிந்ததும் முதல்வேலை அதுதான்.''

அவற்றின் வெற்றுத் தோட்டாக்கள் கூட அவர்களிடம் இருந்தன.

***

# முத்தமிடும் ரோஜா இதழ்கள்

இதழ் – 5



மு.சிவநேசன்

அன்று அலுவலகத்திலிருந்து வீடு திரும்ப நேரமாகி விட்டது. சுமரா மிகவும் களைத்துப் போயிருந்தாள். நேரம் ஆறு மணியைக் கடந்துவிட்டது. காலையில் கோர்ட்டுக்குச் சென்றிருந்த அவள் மதியம்போல அலுவலகத்துக்கு வந்திருந்தாள். அங்கேயும் பலர் அவளுக்காகக் காத்திருந்தனர்.

ஒவ்வொருவரின் பிரச்சினைகளையும் ஆராய்ந்து குறிப்பெடுத்து தீர்வு கண்டு கொண்டிருந்தாள் சுமரா. முடிவே இல்லாமல் சங்கிலித் தொடராக ஆட்கள் வந்து கொண்டிருந்ததில் அவள் மிகவும் களைத்துப் போயிருந்தாள். சில்லறைப் பிரச்சினைகளைத் தனது உதவியாளர்களே கையாளும்படி வழிகாட்டி யிருந்தாள் அவள்.

மதியம் சாப்பிடக்கூட நேரம் இருக்கவில்லை. சாப்பாடு கைப்பையில் கனத்திருக்க அவள் வீடு வந்து சேர்ந்தாள். இரவு நிறைய முடிவுகள் எடுக்க வேண்டியிருந்தது. எனவே பல கோப்புக்களையும் வீட்டிற்கு வழமைபோல எடுத்து வந்திருந்தாள். இந்த இள வயதுக்கு இயந்திர வாழ்க்கை சற்று அதிகமாகவே பட்டது. என்றாலும் வேறு வழி தென்படவில்லை.

ஒவ்வொரு நாளும் காலையில் புறப்படும்போதெல்லாம் 'இன்று வேளைக்கே வந்துவிடல் வேண்டும்' என நினைப்பாள். ருஷனோடு அதிகநேரம் அவனது திருப்திக்காகக் காலங் கழிக்க வேண்டும் என்ற துடிப்பு தினமும் காலையில் பிரியும்போதும் ஏற்படும். ஆனால் பகலின் அழுத்தங்களுள் அந்த எண்ணம் மறைந்துவிடும்.

வில்லியம் வரும்நேரம் பற்றி எதுவும் சரிவரக் கூற இயலாது. அவனுக்கு இரவும் பகலும் எல்லாம் ஒன்றுதான். பொலிஸ்காரன் பிழைப்புக்கு நேரம் காலம் ஏது? அதுவும் மறுநாள் பஸ் கொள்ளை தொடர்பான சாட்சியங்களை நீதிமன்றத்தில் நெறிப்படுத்தியாக வேண்டும். அதில் சுமராவினது பங்களிப்பும் கணிசமாகத் தேவைப்படுகிறது.

வந்ததும் ஆவலுடன் தொலைபேசியைத் தூக்கினாள். களை, பசி எல்லாம் மறந்தாள். 'ருஷன் வந்துவிடுவான்' என்கிற எண்ணம் அவளது அன்றைய களை முழுவதையும் தெளிவிக்கப் போதுமானதாக இருந்தது. பிரிஜ்ஜைத் திறந்து தண்ணீர் குடிக்க நினைத்தவள் அதையும் மறந்து ஆவலுடன் 'கோல்' கொடுத்தாள்.

ருஷனை அழைத்துவர கோல் கொடுத்த சுமராவுக்கு அதிர்ச்சி.

''நான்கு மணிக்கே கோல் கிடைத்து அவனை வீட்டில் இறக்கிவிட்டோமே!'' காப்பகத்திலிருந்து பதில் வந்தது.

அவ்வேளை வீட்டில் எவரும் இருக்கவில்லை. ருஷன் எங்கே போனான்? என்னவானான்?

சுமராவுக்கு மயக்கம் வரும்போல இருந்தது.

''வில்லியம் எங்காவது கூட்டிப் போயிருப்பானா? தன்னைத் தொடர்புகொண்டு தெரிவிக்காமல் அவன் அப்படிச் செய்வதில்லையே. அக்கம் பக்கத்து வீடுகளிற்கு செல்லும் வழக்கம் ருஷனிடம் கிடையாது.''

பலவாறு சிந்தித்தவள் மீண்டும் காப்பகத்தை அழைத்தாள். ருஷனை வரும்படி விடுக்கப்பட்ட அழைப்பைப் பற்றிய தகவல்களை அவர்களால் துல்லியமாகக் கூற இயலவில்லை.

தனது பசி, களை எல்லாம் பலமடங்கு வேகம் கொண்டு தாக்குவது போல உணர்ந்தாள் சுமரா. உடல் சோரத் தொடங்கியது. தொலைபேசி றிசீவர் பல கிலோ எடையாகப் பட்டது. ஏதோ அசம்பாவிதம் நடந்திருப்பதாக உணர்ந்தாள் அவள்.

ருஷனுக்குத் தடிமன் என்றாலே தாங்கமாட்டாதவள் அவள். ஒவ்வொரு கணமும் ஏதும் இல்லாமலே அவனுக்காக ஏங்கிப் பதறி வாழ்க்கையை ஓட்டும் அவளது சுபாவம் இப்போது என்னவாகும்?

அவ்வேளை வந்த தொலைபேசி அழைப்பு வயிற்றில் புளியைக் கரைத்தது.

''ருஷனை உயிருடன் காணவேண்டுமானால் நடவடிக்கை எதுவும் எடுக்காது நிபந்தனைகள் பற்றிப் பேச ஆயத்தமாயிரு'' என்றது தொலைபேசியின் மறு முனையில் ஒலித்த குரல். மேலதிக விவரங்கள் எதையும் தராமல் தொலைபேசி துண்டித்துக் கொண்டது.

சுமராவின் நிலைமையைச் சொல்லியா தெரிய வேண்டும்? அவளது சக்திக்கு மிகவும் எல்லை மீறிய சோதனை தான் இது. புழுப்போலத் துடித்தாள் அவள்.

***

''அதிசயமாக இன்று வேளைக்கே அழைப்பு வந்துவிட்டதே!'' என்று துள்ளிக் குதித்தான் ருஷன். காப்பகத்தில் என்னதான் அன்பாக அவர்கள் கவனித்தாலும் வீடு என்பது ஒரு சொர்க்கமாகவே பட்டது. தாயுடனும் தகப்பனுடனும் உறக்கம் வரும் வேளையில் வீட்டுக்குப் போய் என்ன லாபம் என்று நினைப்பவன் அவன்.

'பகலில்தான் அவர்களோடு கொஞ்சிக் குலவி இருக்கவேண்டும். இரவில் வேண்டுமானால் காப்பகத்தில் வந்து உறங்கிவிடலாம்' என்று நினைப்பான். அடுத்த கணம் 'அதுவும் சரிப்பட்டு வராது – கண் விழிக்கும்போது அருகினில் அம்மா வேண்டும்' என நினைப்பான்.

அங்கு வகுப்புக்கள் தொடங்கும் நேரம் பெற்றோருடன் வந்து இறங்கும் குழந்தைகளைப் பார்த்து இவன் பெருமூச்சு விடுவதுண்டு. தனக்குத்தான் அந்தப் பாக்கியம் கிடைப்பதில்லையே என்று கலங்குவான். அவர்கள் இரண்டுபேருமே எப்பொழுதும் 'பிஸி' என்பதுதான் அவனது கவலை.

வீட்டிலிருந்து தொலைபேசி அழைப்பு வந்ததும் காப்பக வாகனத்தில் துள்ளிக் குதித்து ஏறிக்கொண்டான் ருஷன். அவனது உற்சாகம் கரைபுரண்டோடியது. வீதியில் வாகன நெரிசல் சற்று அதிகமாக இருந்ததில் அவனுக்கு எரிச்சலும் வந்தது. ஒருவாறாக வீடும் வந்து சேர்ந்தது.

அவர்களது வீடோ அந்த பிளாற்றின் நில மாடியில்தான் இருந்தது. அவனை இறக்கிவிட்டுக் காப்பக வாகனம் பறந்துவிட்டது. அவன் பிளாற்றை நோக்கி நடக்கலானான். பத்து அடிகள் வைத்துவிட்டால் வீடுதான். வழமைபோல கதவு பூட்டப்பட்டுக் கிடந்தது.

தோளில் புத்தகப்பை சுமையாகத் தெரிந்தது. வெற்றுத் தண்ணீர்க்கான் காலில் தடக்கி அங்குமிங்கும் ஆடிக்கொண்டிருந்தது. வீட்டுக்கு வேளைக்கே வந்துவிட்ட தெம்பு முகத்தில் ஜொலித்தது.

அதன் அழைப்பு மணியை அவன் அழுத்த முன்னர் அருகே வேகமாக அவனை இடிக்குமாப் போல் வந்த கார் ஒன்றின் பின்பக்கக் கதவு திறந்துகொண்டது. அதிர்ச்சியில் இருந்து அவன் மீள முன்பு இரும்புக் கரங்கள் அவன் வாயைப் பொத்தின. லபக்கென்று அவனைத் தூக்கிப் போட்டுக்கொண்டார்கள். கார் புறப்பட்டு விட்டது.

–தொடரும்

சுடர் ஒளி தொடர் கதை


LINK-Salt to taste LINK-Salt to taste LINK-Salt to taste

சிறந்த தரத்திற்கான சர்வதேச விருதுபெற்ற லிங்க் அயடீன் கலந்த உப்பு

Link Imports & Exports (Pvt)Ltd.

86/1, Chatham Street, Colombo - 01.

Tel : 321085 TeleFax : 435959E-Mail :link@scienceland.lk

161


## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 11.00-11.30 | | | | | | குட்டிச் சுட்டி | காலைக்கதிர் குட்டிச் சுட்டி |
| 11.30-12.00 | | | | | | | |
| 12.00-12.30 | | | | | | சின்னச் சின்ன ஆசைகள் | |
| 12.30-13.00 | | | | | | | |
| 13.00-13.30 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கென்ட் மெட்னி | சக்தி வீக்கென்ட் மெட்னி |
| 13.30-14.00 | குலவிளக்கு | குலவிளக்கு | குலவிளக்கு | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00-14.30 | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | | |
| 14.30-15.00 | | | | | | | |
| 15.30-16.00 | | | | | | நலந்தானா | திரைத்தென்றல் |
| 16.00-16.30 | | | | | | டொப் 10 மூவிஸ் | கோபி |
| 16.30-17.00 | சுப்பர் 10 | கலைச்சோலை | நம்மநேரம் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | திரை விமர்சனம் | அரட்டை அரங்கம் | நீங்கள் கேட்ட பாடல் |
| 17.00-17.30 | தமிழ் கார்ட்டூன் | தில்லானா தில்லானா | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | தமிழ் கார்ட்டூன் | பூஞ்சோலை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 17.30-18.00 | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | இளமை புதுமை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 18.00-18.30 | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா... | கங்கா ஜமுனா... | பெப்ஸி உங்கள் சாய்ஸ் | காற்றாய் வருவேன் | ஆலோசனை நேரம் | இப்படிக்கு நீங்கள் |
| 18.30-19.00 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | புதுப்பாடல் | ஆனந்தபவன் |
| 19.00-19.30 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | சாவித்திரி | சப்தஸ்வரம் |
| 19.30-20.00 | சின்னத்திரை | தித்திக்கும் ஓசை | புஷ்பாஞ்சலி | சீமான்களே சீமாட்டிகளே | பணம், பெண் பாசம் | இளையகானம் | பஞ்சவர்ணம் |
| 20.00-20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30-21.00 | வாழ்க்கை | , வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | இயந்திரப்பறவை | ஜன்னல் |

# உணர்வுகளின் சங்கமம் காதல்



ஒருவரைப் பாதித்த செயல் மற்றவரையும் பாதித்திருக்கும். அதேவேளை இருவரும் மற்றவரின் தனிப்பட்ட ரசனைகளை மதிக்கும் பண்புள்ளவர்களாக இருப்பார்கள். இதுதான் இனிய இல்லறத்தின் அடித்தளம்.

ஏனைய ஜீவராசிகளிடமிருந்து எம்மைப் பிரித்துக்காட்டுவது மனம். மனதில் எத்தனையோ உணர்வுகள் பொங்கிப் பிரவாகிக்கின்றன.

எம்மைச் சுற்றி பலர் இருந்தாலும் எல்லோருடனும் எம்மால் முழுமையாகப் பழக முடிவதில்லை. அதற்குக் காரணம் எம்முடைய உணர்வுகள் அவர்களுடைய உணர்வுகளுடன் ஒத்துப் போகாததுதான்.

இருவரது எண்ணங்களும், செயல்களும் பெரும்பாலும்ஒரேமாதிரியாக இருக்கும்போதுதான் எம்மால் ஒருவருடன் ஒருவர் நட்புப் பாராட்ட முடி கின்றது.

இதே போன்று ஓர் ஆணினதும், பெண்ணினதும் உணர்வுகள் சங்கமிக்கும்போது 'காதல்' என்ற புனித உறவு துளிர் விடுகின்றது. இந்த உணர்வுகளின் சங்கமம் தான் குடும்ப வாழ்க்கையிலும் இறுதிவரை தொடர்கின்றது.

ஒருவருக்குப் பிடித்த உணவு மற்றவருக்கும் பிடித்திருக்கும்,

ஒருவரின் உணர்வுகளை மற்றவர் மதிக்காத எந்த நட்பும், எந்தக் காதலும் வெற்றியளித்ததாகச் சரித்திரமே இல்லை. குடும்பத்தில் கணவன்—மனைவி இருவரும் மற்றவரது உணர்வுகளை மதித்து அவரது தேவைகளையும், விருப்பங்களையும் பூர்த்தி செய்ய வேண்டும். மாறாக உணர்வுகளை ஒருவர் மீது மற்றவர் திணிக்க முற்பட்டால் குடும்ப வாழ்வு இனிக்காது.

திருமணமான ஒரு பெண் தன் கணவனை நம்பி தன்னை அவனுக்கு அர்ப்பணிக்கின்றாள். எனவே மனைவியின் விருப்பங்களையும், அவள் சந்தோஷபபடுகின்ற விடயங்களையும் கணவன் அறிந்து அவற்றை நிறைவேற்ற வேண்டும்.

இதனால் மனைவியின் சந்தோஷத்தில் கணவன் பங்கு கொள்ள முடிகின்றது. தன் உணர்வுகளை மதித்த கணவனை மனைவி சந்தோஷப்படுத்துவாள். குடும்ப வாழ்க்கையில் இதைவிட சந்தோஷம் வேறென்ன வேண்டும்.

கணவனுக்குப் பிடித்த உணவுகளை மனைவி செய்து கொடுப்பதும், மனைவியின் ரசனையை அறிந்து கணவன் செயற்படுவதும், ஒருவரது கருத்தை மற்றவர் மதித்து நடப்பதும் அவசியமானது ஆகும்.

இப்படி எல்லா விஷயங்களிலும் ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து வாழும் வாழ்க்கை கணவன் மனைவிக்கு மத்தியில் இடைவெளியை இல்லாமல் செய்து விடுகிறது.

சின்னச் சின்ன விஷயங்களாக இருந்தாலும் கணவன் மனைவியைக் கேட்டும், மனைவி கணவனைக் கேட்டும் செயற்பட்டு படுக்கையைப் பகிர்ந்து கொள்ளும் போது வாழ்க்கை அர்த்த முள்ளதாகி விடுகின்றது.

எதைப் பற்றியும் கவனிக்காமல், பிழைகளைச் சுட்டிக் காட்டாமல் இருந்தால் பிரச்சினைகளைத் தவிர்த்து சந்தோஷமாக இருக்க முடியும் எனப் பலர் நம்புகின்றனர். ஆனால் அந்த சந்தோஷத்தை விட கணவனின் முன்னேற்றத்தில் மனைவியும், மனைவியின் முன்னேற்றத்தில் கணவனும், கணவனின் சந்தோஷத்தில் மனைவியும் மனைவியின் சந்தோஷத்தில் கணவனும் பங்கெடுக்கும் போது கிடைக்கும் சந்தோஷம் அலாதியானது.

கணவன்—மனைவி இருவரும் அன்பினால் பிணைக்கப்பட்டு விட்டுக் கொடுத்தல் மூலம் பலப்படுத்தும் தாம்பத்தியம் என்றும் மகிழ்ச்சியைத் தரும்.

## உங்களுக்குத் தெரியுமா?

* பெண்கள் பொதுவாக 45 வயதுக்கு மேல் பிள்ளை பெறும் தன்மையை இழந்து விடுகின்றனர். இதனை மாத விலக்கு நின்றுவிடும் காலம் அதாவது ''மெனோபாஸ்'' என்று கூறுவார்கள்.
இன்றைய உலகில் 30 வயதிலேயே பல பெண்கள் பிள்ளை பெறும் தன்மையை இழந்து விடுகிறார்களாம். இதற்குக் காரணம் நகரத்தின் கெடுபிடி, எதிலும் அவசரம், கவலைகள், மன உளைச்சல் என்பவை ஆகும்.
பிள்ளை பெறும் தன்மையை இழந்த பெண்கள் 30 வயதிலேயே முதுமை அடைந்தவர்கள் போல் காணப்படுவார்களாம்.



* அமெரிக்காவைச் சேர்ந்த பெண்மணி ஹோவார்டு மோரீஸ். இவருக்கு இதுவரை நான்கு பிரசவங்கள் நடந்தன. நான்கு தடவைகளிலும் இரட்டைக் குழந்தைகள். 6 கோடி 50 லட்சம்பெண்களில் ஒரு பெண்ணுக்குத்தான் இப்படி எல்லாப் பிரசவங்களிலும் இரட்டைக் குழந்தைகளாகப் பிறக்குமாம்.
* ரோமானிய மாவீரன் 'ஜூலியஸ் சீசர்' பிறந்த போது அவனது தாயின் வயிற்றில் அறுவைச் சிகிச்சைசெய்துதான் அவனை வெளியே எடுத்தார்கள்.
அதனால் குழந்தையை எடுக்கும்அறுவைச் சிகிச்சைக்கு அவனது பெயரே 'சிசேரியன்' என்று நிலைத்துவிட்டது.

## படித்ததில் பிடித்தது

பிரதீபா — பவீனா

* நேர்மையாக இருப்பதில் ஓர் சந்தோஷம் பிறக்கிறது. ஒவ்வொரு நேர்மையான செயலும் அதற்குரிய வெகுமதியை அடக்கியுள்ளது.
* ருசியுள்ள உணவளிக்க அன்புத் தாயும், ஒழுக்கமான நடத்தைக்கு நல்ல நண்பர்களும், உலக விஷயங்களைத் தெரிந்து கொள்ளத் திறமையான ஆசானும், இல்லறம் இனிக்க நல்ல மனைவியும், சிந்தனை தூய்மையாக—தெய்வபக்தியும் அவசியம் வேண்டுமென உபநிஷதம் கூறுகின்றது.
* பிறருடைய கருத்துக்களைக் கேளுங்கள். பரிசீலனை செய்யுங்கள். பிறரது அபிப்பிராயங்களை அறிந்து கொள்ளுங்கள். அவை பற்றி ஆலோசனை செய்யுங்கள். ஆனால் அவைதான் இறுதியானவை என்ற முடிவுக்கு அவசரப்பட்டு வந்து விடாதீர்கள். ஓர் அளவுக்கு மேல் பிறரது அபிப்பிராயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தால் உங்கள் தனித்துவத்தை இழந்து விடுவீர்கள்.
* வாழ்க்கையில் உங்களுக்கு ஏற்படும் சுமைகள், உங்கள் வாழ்வை உயர்த்த இறைவனால் அளிக்கப்பட்டது என்று நம்புங்கள்.
இப்படிப்பட்ட மனோபாவமே மகிழ்ச்சியையும், இதன்மூலம் முன்னேறிச் செல்லும் தூண்டுதலையும் அளிக்கிறது.
* திருமணம் என்பது கணவனின் விழிகளை மனைவியும், மனைவியின் விழிகளைக் கணவனும் ரசித்துப் பார்த்துக் கொண்டிருப்பதல்ல. இரண்டு பேரும் ஒன்றாக இருந்து ஒரே திசையில் ஒரு குறிப்பிட்ட இலக்கை நோக்குவதாகும்.

## நலம் தரும் உணவுகள்

நம்மில் பெரும்பாலானோர் அடிக்கடி தலைவலி, வயிற்றுக் கோளாறு, இரத்தக் கொதிப்பு, பசியின்மை ஆகியவற்றால் பாதிக்கப்படுகிறார்கள்.

இப்படியானவர்கள் தாம் உண்ணும உணவில் மாற்றத்தை ஏற்படுத்தினால் மனமும், உடலும் புத்துணர்வு பெற்று இந் நோய்களுக்குத் தீர்வு ஏற்பட்டுவிடும்.

மனக்கவலைகளால் பாதிக்கப்படுபவர்கள்.

காலையில் பழச்சாறு அருந்துவது நல்லது. அல்லது பால் சேர்க்காத தேநீர் பருகலாம். மதிய உணவையும், இரவு உணவையும் உண்ண முன்பு பழச்சாறோ அல்லது தயிரோ சாப்பிடுங்கள்.

நார்ச்சத்து அதிகமுள்ள உணவுகளை அதிகம் உண்ணுங்கள்.

இனிப்பு வகைகளை அதிகம் பாவிக்காதீர்கள். இனிப்பு அதிகம் உடலில் சேரும் போது, குளுக்கோஸை ஒவ்வொரு செல்லுக்கும் அனுப்பும் குரோமியம் உப்பு குருதியில் குறைந்து போய் விடுகின்றது.

அத்துடன் குருதியில் குளுக்கோஸின் அளவு உயராமல் கட்டுப்படுத்துவது குரோமியம். எனவே தினமும் கொண்டல்கடலை, பாதாம்பருப்பு ஆகியவற்றை உண்ணுங்கள்.

உடல் நலப் பிரச்சினைகளுக்கும், மனம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கும் இந்த இரண்டு உணவுகளும் மிகச் சிறந்த மருந்து.

பிடிவாதமுள்ள பிள்ளைகளுக்குத் தினமும் பாதாம்பால் கொடுப்பது சிறந்த மருந்தாகும்.

சோயா, வேர்க்கடலை, பட்டாணி ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைத் தினமும் உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

இதனால் உடலில் சேரும் விஷப் பொருட்கள் அகன்று, மனம் தெளிவடையும். இதனால் உடலில் இருக்கும் நோய்களும் குணமடைந்து விடும்.

உடலுக்குத் தேவையான உயிர்ச்சத்து C கிடைக்க தினமும் உணவில் முருங்கைக் கீரை, சோயா ஆகியவற்றைச் சேருங்கள். இதனால் உடலும், உள்ளமும் அமைதியடைந்து நோய்கள் குணமடையும்.

மாரடைப்பு, பக்கவாதம் ஆகியவை ஏற்படுவதைத் தவிர்க்க தினமும் உணவில் வெள்ளைப்பூண்டு, இஞ்சி சேர்க்கவும்.


இதனால் இரத்தம் கெட்டியாகாமல் ஓடிக் கொண்டு இருக்கும். வெள்ளை இரத்த அணுக்கள் சுறுசுறுப்பாக இருந்து நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும்.

கரட் ஜூஸ் குடித்தால் சோம்பல் பறந்து சுறுசுறுப்பு ஏற்படும். தேநீர், கோப்பி முதலியவற்றைக் குறையுங்கள். மதுவைத் தவிருங்கள்.

மேற்கூறப்பட்ட உணவு முறைகளைக் கடைப்பிடித்தால் உடலும், மனமும் புதுப்பிக்கப்பட்டுவிடும். இதனால் உடல், உள சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் இன்றி ஆரோக்கியமாகவும், சந்தோஷமாகவும் வாழலாம்!



## மேற்படிப்புக்கு ஆயத்தமாகிவிட்டீர்களா?



பாடசாலைக் கல்வியை முடித்த பின், பல்கலைக் கழக அனுமதி பெறாதவர்கள், எந்தத் துறையில் மேற்படிப்பைத் தொடருவது என்பதில் பல சிக்கல்களை எதிர் நோக்குகின்றனர்.

சில வீடுகளில் பெற்றோர் தமக்கு விரும்பிய துறையில் பிள்ளைகளை ஈடுபடுத்துவார்கள். இருப்பினும் அந்தத் துறையில் பிள்ளைக்கு ஈடுபாடு இருக்காது.

பெற்றோரின் வற்புறுத்தலினால் பிள்ளை அந்தத் துறையில் நுழைந்து, தோல்விகளைச் சந்தித்து விடுகின்றது. இதனால் அப்பிள்ளையின் எதிர்காலமே கேள்விக்குறியாகி விடுகின்றது.

பிள்ளைகள் தமக்கு ஈடுபாடுள்ள, தாம் விரும்பிய துறையைத் தெரிவு செய்யும் சுதந்திரத்தை பெற்றோர் அளிக்க வேண்டும். அதே சமயம் அவர்களுக்குத் தேவையான அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் வழங்க வேண்டும்.

பிடிக்காத ஒரு துறையைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் காலம், பணம் செலவாகின்றன. அந்தத் துறையில் ஈடுபாடுள்ள ஒருவருக்கு கிடைக்க வேண்டிய வாய்ப்பும் பறிபோய்விடுகிறது. எனவே விரும்பிய துறையைப் பிள்ளைகள் தேர்ந்தெடுப்பது மிகவும் நல்லது.

தனக்கு விரும்பிய துறையில் கல்வியைத் தொடரும் பிள்ளை எதிர்காலத்தில் மிகச் சிறந்த கல்விமானாக உருவாவதற்குரிய சந்தர்ப்பங்கள் உண்டு.

எமக்குத் தேவையான பொருட்களை வாங்கச் செல்லும் போது அதிகமாக எல்லோரும் வாங்குகின்ற — அதிகம் விற்பனையாகின்ற — பொருட்களை நாம் வாங்குவதில்லை. எமக்கு எது பிடித்திருக்கிறதோ அதைத்தான் நாம் வாங்குகின்றோம்.

பொருட்களை வாங்கும் போது எமது விருப்பத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நாம், எமது எதிர்காலத்தை நிர்ணயிக்கின்ற மேற்படிப்பையும் அதே முறையில் தெரிவு செய்ய வேண்டும்.

நீங்கள் ஒரு தாய் என்ற முறையிலோ, நல்ல வேலையில் இருப்பவர் என்ற முறையிலோ அல்லது நல்ல கல்வியாளர் என்ற முறையிலோ உங்களிடம் எவராவது இந்த விடயத்தில் ஆலோசனை கேட்டால், அவர்களுடன் மனம் விட்டுக் கதைத்து அவர்களுக்கு எதில் அதிகம் ஈடுபாடுள்ளது என்பதை அறிந்து உரிய பதிலை அளியுங்கள்.

# ஊழியர் சேமலாப நிதி மோசடி தொழிலாளர்களுக்குப் பேரிடி

## இறுதிக் காலத்துக்கு உழைத்த பணம் ஏப்பம்

தோட்டத் தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதியில் மோசடிகள் இடம் பெறுகின்றன.

இப்பணம் அவர்களுக்குத் தெரியாமலேயே சுரண்டி ஏப்பம் விடப்படுகிறது. இப்படியான சம்பவம் ஒன்று அண்மையில் அம்பலமாகி உள்ளது.

அரச ஊழியர்களைப் போல் தோட்டத் தொழிலாளர்கள் ஓய்வூதியம் பெறுவதில்லை. சேவைக்கால ஊதியம் என்ற பெயரில் ஐந்து வருடங்களுக்கு மேல் வேலை செய்திருந்தால் மட்டும் ஒரு வருட சேவைக்கு அரை மாதச் சம்பளம் எனக் கணக்கிட்டு ஒரு சிறு தொகை வழங்கப்படுகிறது.

அதன் பின் எந்த வருமானமும் இல்லை.

தோட்டத் தொழிலாளர்கள் ஓய்வுபெற்ற பின்பும் வாழ வேண்டும். அதற்கு அவர்களுக்கு பணம் வேண்டும். இதற்குப் பரிகாரமாகவே முன்னாள் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்கா ஊழியர் சேமலாப நிதியை அறிமுகப்படுத்தினார்.

ஆண்கள் 55 வயதை அடைந்த பின்பும் பெண்கள் 50 வயதை அடைந்த பின்பும் இதில் சேர்ந்த பணத்தை மீளப் பெற முடியும்.

இதனைப் பெறுவதற்குத் தேவையான விண்ணப்பப் படிவங்கள் தோட்டத்துரைமாரின் மூலமே அனுப்பப்பட வேண்டும். தனிப்பட்ட முறையில் நேரடியாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ஆனால் அண்மையில் அதிர்ச்சி தரும் விடயம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

ஹப்புகஸ்தன்னை பிளான்டேசன் கம்பெனித் தோட்டத் தொழிலாளி ஒருவரின் சேமலாப நிதிப்பணம் மோசடி செய்யப்பட்டுவிட்டது.

சம்பந்தப்பட்ட தொழிலாளிக்கும் தோட்டத் துரைக்கும் தெரியாமலேயே அப்பணம் ஏப்பமிடப் பட்டுள்ளது.

இந்தத் தொழிலாளி 1972 ஆம் ஆண்டு சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். இப்பொழுது அவருக்கு வயது 90.

சேவையில் இருந்து ஓய்வுபெற்றவுடன் இப்பணத்தை எடுத்துவிட்டால் கடைசிக் காலத்தில் கஷ்டப்பட நேரிடும் என்று கருதி அவர் தனது சேமலாப நிதிப் பணத்தை மீளப் பெறுவதற்கு விண்ணப்பிக்கவில்லை. பணம் இருக்கும்தானே தேவைப்படும்போது எடுப்போம் என்று இருந்து விட்டார்.

இப்பொழுது மிகவும் தள்ளாத வயது. பணம் தேவைப்படவே மீளப் பெறுவதற்கு விண்ணப்பித்தார். தோட்டத் துரையும் தேவையான சகல விவரங்களையும் திரட்டி அத்தாட்சிப்படுத்தி தொழில் ஆணையாளருக்கு விண்ணப்பத்தை அனுப்பி வைத்தார்.

ஓய்வுபெறும்வரை, இவர் ஒரே தோட்டத்தில் வேலை செய்ததால் இரண்டு மாதங்களில் இவரது பணம் கிடைத்துவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் இரண்டு மாதங்கள் கழிந்தும் எதுவுமே கிடைக்கவில்லை.

அவரது பணத்துக்குப் பதிலாக பேரிடி ஒன்றே தலையில் விழுந்தது. ஆம்! ''உங்களுடைய கணக்கில் பணம் இல்லை. ஏற்கனவே மீளப் பெறப்பட்டுவிட்டது. இதனால் விண்ணப்பத்தைத் திருப்பி அனுப்புகிறேன்'' என்ற குறிப்புடன் அவரது விண்ணப்பம் திரும்பி வந்து விட்டது.

ஏற்கனவே நோயாளியான இத்தொழிலாளி இப்பொழுது மேலும் அதிர்ச்சியினால் பாதிக்கப்பட்டு மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளார்.

இந்த மோசடி குறித்து தொழிற்சங்கத்தின் ஊடாக தொழில் ஆணையாளருக்கு முறைப்பாடு செய்யப்பட்டும் இதுவரை பயன் எதுவும் இல்லை.

இந்த மோசடி தோட்ட அதிகாரிக்குத் தெரியாமல் தோட்ட அலுவலக ஊழியர்கள் மூலமே மேற்கொள்ளப் பட்டிருக்க வேண்டும் என்றும் எனவே இரகசிய பொலிஸாரின் விசாரணைக்கு இது ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் தொழில் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

முற்று முழுதாகத் தோட்டத்துரையையும் ஊழியர்களையும் நம்பி இருக்கும் அப்பாவித் தொழிலாளர்களின் பணம் இப்படி மோசடி செய்யப்படலாமா?

இதேபோன்று எத்தனை தொழிலாளர்களின் பணம் மோசடி செய்யயப்பட்டிருக்கும்?

இரகசியப் பொலிஸாரின் விசாரணைகளுக்கு தோட்டத்துரையும் சகல ஒத்துழைப்பையும் வழங்கி உண்மையான மோசடிப் பேர்வழிகளைக் கண்டு பிடிக்க வேண்டும். மோசடிக்காரர்களுக்கு தகுந்த தண்டனை பெற்றுக் கொடுக்க தோட்ட நிர்வாகம் முன்வர வேண்டும்.

முன் வருமா?

## மலையகக் கண்ணோட்டம்

இரா. புத்திரசிகாமணி

# தமிழ்த் தெரியாத அதிகாரிகள்: தொழிலாளர் பாடு பெரும்பாடு

இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள தொழில் திணைக்களங்களில் தமிழ் அதிகாரிகள் இல்லாத காரணத்தால் தமிழ் பேசும் தோட்டத் தொழிலாளர்கள் பெரும் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் பெல்மதுளை, நிவித்திகலை, எம்பிலிப்பிட்டிய, இரத்தினபுரி என நான்கு உதவித் தொழில் ஆணையாளர் அலுவலகங்கள் இருக்கின்றன.

காவத்தை பிளான்டேசன், பலாங்கொடை பிளான்டேசன், ஹப்புகஸ்தன்ன பிளான்டேசன், மத்துரட்ட பிளான்டேசன் ஆகிய நான்கு தோட்டக் கம்பெனிகளின் கீழ் 64 தோட்டங்கள் இயங்குகின்றன. இவற்றில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலன்களை கவனிக்க வேண்டிய பொறுப்பு இந்த நான்கு அலுவலகங்களிடமே விடப்பட்டுள்ளன.

இந்த 64 கம்பெனித் தோட்டங்களுக்குப் புறம்பாக சிறு தனியார் தோட்டங்களும் இருக்கின்றன. அத்துடன் கடைகள், தொழிற்சாலைகள், சிறு வேலைத்தளங்கள் ஆகியவையும் உண்டு.

இவற்றில் சுமார் 6 ஆயிரம் ஊழியர்கள் கடமையாற்றுகின்றனர்.

ஆகவே சுமார் 70 ஆயிரம் தொழிலாளர்களின் பொறுப்புகள் இந்த நான்கு தொழில் அலுவலகங்களிடமே ஒப்படைக்கப் பட்டுள்ளன. இவர்களில் அறுபது ஆயிரம் பேருக்கு மேல் தமிழ் தோட்டத் தொழிலாளர்கள்.

இந்த தொழிலாளர்களுடைய தொழில் பிணக்குகள், வேலை நீக்கங்கள், ஊழியர் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம், ஓய்வூதியம், விடுமுறை, போனஸ், தொழிலாளர் நஷ்டஈடு, ஊக்குவிப்பு போனஸ் போன்றவற்றுடன் பிரசவ சகாயப் பணக் கொடுப்பனவுகள் உட்பட நிதியுடன் தொடர்புடைய சகல விடயங்களும் உதவித் தொழில் ஆணையாளர் களினாலேயே பரிசீலனை செய்யப்பட்டு தீர்வு காணப்படுகின்றது.

நான்கு தொழில் அலுவலகங்களிலும் நான்கு உதவித் தொழில் ஆணையாளர்களும், தலா ஆறு தொழில் அதிகாரிகளும் கடமையாற்றுகின்றனர்.

ஆனால் இங்கு மருந்துக்குக் கூட ஒரு தமிழ் அதிகாரியும் இல்லை. அதிகாரிகள் தரத்தில் இல்லாத சாதாரண எழுதுவினைஞர்களாகக் கூட தமிழர்கள் இல்லை.

இதனால் தமது சொந்தத்தேவைகளுக்காக இங்கு வரும் தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் தமிழ்த் தெரியாத அதிகாரிகளிடம் தமது அலுவல்களைச் செய்து கொள்ள முடிவதில்லை.

இதனால் தமிழ்த் தொழிலாளர்கள் அங்கு நடமாடும் தரகர்களின் உதவியை நாடுவதோடு தமது கைப் பணத்தையும் இழக்க நேரிடுகின்றது. ஊழியர் சேமலாபநிதி, நம்பிக்கை நிதி, நஷ்டஈட்டு வழக்குகள் தொடர்பான கொடுப்பனவுகள் ஆகியவற்றை பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் இலவசமாகவே விநியோகிக்கப்படுகின்றன. ஆனால் அவற்றை தரகர்கள் ஊடாக அதுவும் பணம் கொடுத்தே வாங்க வேண்டிய நிலையில் தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் இருந்து வருகின்றனர்.

தொழிற்சங்கங்களில் அங்கத்தவர்களாக இருப்பவர்கள் தமது பிரதிநிதிகளின் உதவியை நாடுகின்றனர். அங்கும் இந்த சுரண்டல்கள் இருக்கத்தான் செய்கின்றன.

இதேவேளை சிங்களவர்களும், சிங்கள மொழி தெரிந்தவர்களும் தமது வேலைகளை இலகுவாகச் செய்து கொள்கின்றனர்.

எனவே இப்பிரதேசத்தில் தொழில்புரியும் தமிழ் தொழிலாளர்களின் நன்மை கருதி தொழில் அலுவலகங்களில் தமிழ் பேசும் அதிகாரிகள் சிலரையாவது நியமிக்க வேண்டும்.

தமிழ் மொழி பேசுபவர் தொழில் அமைச்சராக இருக்கின்றார். அவராவது இதனைக் கவனத்தில் கொண்டு ஆவண செய்ய வேண்டும்.

# துரோகம் செய்தால் தூக்கி எறியப்படுவோம்

## மக்கள் சக்தியாக உருவெடுக்கவே ஐக்கியம் என்கிறார் சந்திரசேகரன்

மலையக மக்கள் தற்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கை முறை இன்னும் பத்து அல்லது இருபது ஆண்டுகளில் முற்றாக அழிந்து போகக்கூடிய ஆபத்து இருந்து வருகிறது. இதனை மாற்றி அமைக்க தொழிற்சங்க மாயையில் இருந்து மலையக மக்கள் விடுபட வேண்டும், அரசியல் ரீதியில் ஒன்றுபட வேண்டும்.

மேற்கண்டவாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பெ. சந்திரசேகரன் கோரிக்கை விடுத்தார்.

நுவரெலியா, நானுஓயா தோட்டத் தலைவர்கள் மத்தியில் உரை நிகழ்த்துகையில் மேலும் அவர் கூறியதாவது:—

சிங்கள மக்கள் மத்தியில் என்றும் இல்லாதவாறு இன்று இனவாத அமைப்புக்கள் தமிழர்களுக்கு எதிரான கருத்துக்களைப் பரப்பி வருகின்றன. தமிழர்கள் என்றால் பயங்கரவாதிகள் என்றும் அழிக்கப்படவேண்டியவர்கள் என்றும் இந்த நாட்டின் சாபக்கேடுகள் என்றும் இனவாதிகள் சிங்கள மக்கள் மத்தியில் பிரசாரம் செய்து வருகின்றனர்.

வீரவிதான, சிஹல உறுமய, பூமிபுத்திர, ஜே.வி.பி போன்ற அமைப்புக்கள் இப்பிரசாரத்தில் முனைப்பாக ஈடுபட்டு வருகின்றன. இந்த பிரசாரத்துக்குச் சில ஊடகங்களும் துணை போகும் விதத்தில் இடமளிக்கின்றன.

ஆனால் தேசியக் கட்சிகளோ இதனைக் கண்டும் காணாமலும் இருப்பதன் மூலம் அவ்வாறான கருத்துகளுக்கு மறைமுகமாக ஆதரவு தருவது போல் நடந்து கொள்கின்றன.

இந்த நிலைமை தொடர்ந்தால் இன்று நாம் சுதந்திரமாக எமது பிரதேசம் என்ற உரிமையுடன் நடமாடுகின்ற நிலைமை இல்லாமல் போகலாம்.

எமது பெண்கள் தமது சொந்தப் பிரதேசத்திலேயே பொட்டு வைத்துக்கொண்டு நடமாட முடியாத நிலை ஏற்படலாம். கோவில் திருவிழாக்களை நடத்த முடியாத நிலை ஏற்படலாம்.

இவை எல்லாம் ஏற்படாமல் இருக்க வேண்டுமென்றால், மலையக மக்கள் அரசியல் உரிமைகள் பற்றிச் சிந்திக்கும் நிலைமையை நாம் உருவாக்க வேண்டும். இதற்கான ஒரு மக்கள் சக்தியாக நாம் உருவெடுக்க வேண்டும் என்பதற்காகவே மலையக அமைப்புக்கள் மத்தியிலே ஐக்கியத்தை வலியுறுத்துகின்றோம். இதன் முதற்கட்டமாக இ.தொ.காவுடன் இணைப்பை ஏற்படுத்தியுள்ளோம். இ.தொ.காவை கடுமையாக விமர்சித்த மலையக மக்கள் முன்னணி தற்போது அதனுடன் இணைப்பை ஏற்படுத்திக் கொண்டதால் சில தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களுக் கிடையே விஷமக் கருத்துக்களைப் பரப்பி வருகின்றன.

நாம் இன்றும் இ.தொ.கா வை ஒரு தனிக்கட்சியாகவே பார்க்கிறோம். அவர்களும் எம்மை ஒரு தனிக்கட்சியாகவே பார்க்கிறார்கள். நாங்கள் இணைப்பை ஏற்படுத்தி உள்ளமை சந்தாப் பணத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவோ அல்லது சலுகைகளைப் பெற்றுக்கொள்வதற்காகவோ அல்ல எமது செயற்பாடுகளை அவர்கள் விமர்சிக்கலாம்; அவர்களின் செயற்பாடுகளை நாங்கள் விமர்சிக்கலாம்.

ஆனால் நாங்கள் இருவரும் இணைந்து மக்களுக்குத் துரோகம் செய்வதாக மக்கள் உணர்ந்தால் அதனைத் தயங்காது விமர்சிக்கும் உரிமையும், தகுதியும் அவர்களுக்கு உண்டு. மலையக அரசியல் விடிவிற்கு நாங்கள் துரோகம் செய்வதாக இளைஞர் சமுதாயம் உணருமானால் நாம் தூக்கி எறியப்படுவோம்.

துன்பத்தில் மூழ்கிக்கிடக்கும் எமது சமுதாயத்தை மீட்க வேண்டும் என்ற வேட்கையில் நாம் ஐக்கியத்தை வலியுறுத்துகின்றோம்.

இப்படி அவர் கூறினார்.



''சம்பளத்தைப் பற்றியா கேட்கிறீங்க...? ஆயிரம் ரூபா தந்தால் வீட்டு வேலையெல்லாம் செய்வேன், இரண்டாயிரம் ரூபா தந்தால் பக்கத்துவீட்டுச் சங்கதிகளையும் சொல்லுவேன்!''

# அது ஒரு காலம்

ஆலமரத்தடியை உற்று நோக்கினேன். அது சூனியமாய் இருந்தது. என் வாழ்க்கை அத்தியாயத்தில் ஆலமரமும் ஒரு பாத்திரமாகி விட்டிருந்ததில் வியப்பொன்றுமில்லை.

என் வாழ்வில் மட்டுமா?

நந்தன், மாறன், தயா, குமரன், பாலன் இவர்கள் வாழ்விலும் அது ஒரு பாத்திரமாகி விட்டிருந்தது. நாங்கள் ஆலமரத்தடியில் கூடியிருந்து மணிக் கணக்காக கதையளந்த காலம் பசுமையானது. அந்த இடத்தை விட்டு நகரவே மனம் இடந்தராது.

'சுப்பரின்ர பெட்டை சாமத்தியம்' நந்தன் ஆரம்பிப்பான். அடிசக்கை! இனி சுப்பருக்கு சிக்கல், பொடியள் பெட்டையைக் கலைச்சுத்திரியப் போறாங்கள்'' பாலனின் கருத்துரை யதார்த்தம் கலந்து வெளிப்படும்.

இதைப்போல இன்னும் எத்தனை எத்தனை கதைகள் எங்களால் கதைக்கப்பட்டிருக்கின்றன.

பள்ளிக்கூட அதிபரின் பெம்பிளைச் சேட்டைகள். கள்ளடித்துவிட்டு வந்து பாடமெடுக்கும் வாத்திமாரின் பாடமெடுத்தல் பகிடிகள். பொன்னையா வாத்தியார் வேட்டி அவிழ்ந்தது தெரியாமல் பாடமெடுத்த கதைகள்... இப்படி இன்னும் பல கதைகள்

சென்னை வானொலியில் மாநிலச் செய்திகள் வாசித்து, தமிழில் செய்தியறிக்கை முடிந்து, வீடும் வயலும் முடிந்து, மண்ணின் மணம் முடிந்து. இப்படியே தொடர்ந்து பி.பி.சி தமிழோசைச் செய்திகள் முடியும்வரை எங்கள் கதைகள் சுவாரசியம் குறையாமல் தொடரும். நந்தன் முதலில் ஏதாவது கதைப்பான், அதற்கு பதிலாக தயா இன்னொரு கதையை ஆரம்பிப்பான், அதற்கு குமரன் இன்னொரு கதை சொல்வான். இப்படியே முடிவின்றித் தொடரும். இந்த அரட்டையில் இடையிடையே இலக்கியங்கள், நாவல்கள், சிறுகதைகள் அவ்வப்போது எட்டிப்பார்க்கும். இவைகளைப் பற்றி அதிகம் பேசுகிறவர்கள் மாறனும், பாலனும் தான். நான் உட்பட மீதிப்பேர் அவர்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டியவர்களாக இருந்தோம். ''அசோக மித்திரன் எழுதிய ''ஒற்றன்!'' வாசிச்சனியோ?'' பாலன் கேட்டான்.

''ஓமடாப்பா! ஒண்டும் விளங்குவதில்லை'' மாறன் சலித்துக் கொள்வான்.

''என்னடா என்ன ஒரு திறமான நாவலை விளங்கேல்ல எண்டுறாய்'' பாலன் ஆச்சரியப்படுவான்.

நாங்கள் அப்போது தான் அசோக மித்திரன் ''எண்டு ஒரு எழுத்தாளர் இருக்கிறார் என்பதை அறிந்தவர்களாய் இருப்போம்.''

அசோகமித்திரன் மட்டுமா? ''சுதந்திரதாகம்'' எழுதிய சி.சு. செல்லப்பா'' ''மானிடம் வெல்லும்'' எழுதிய ''பிரபஞ்சன்''. ''திருச்சிற்றம்பலம்'' எழுதிய ''ஜெகசிற்பியன்''. ''கல்லுக்குள் ஈரம்'' எழுதிய ''ரா.சு'' ''நல்லபெருமாள்''. ''ஆதாராசுருதி'' எழுதிய ''ரசவாதி''. ''குழந்தைகள் பெண்கள் ஆண்கள்'' எழுதிய ''சுந்தரராமசாமி'' இன்னும் இப்படி எத்தனை பேர்... அத்தனை பேரைப் பற்றியும் அவர்கள் பேசிக் கொள்வதைக் கேட்க சில நேரம் எங்களுக்கு வெட்கமாக இருக்கும். எங்களுக்கு தெரியாத எத்தனை எழுத்தாளர்களை மாறனும் பாலனும் தெரிந்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் எழுதிய நாவல் களைக் கூட எவ்வளவு நுணுக்கமாக வாசித்திருக்கிறார்கள் என்பதை நினைத்து ஆச்சரியப்பட்டுக் கொள்வோம். எங்களுக்கு தெரிந்திருந்ததெல்லாம் ''மிதிலா விலாஸ்'' எழுதிய லக்ஷ்மி, ''நைலோன் கயிறு'' எழுதிய சுஜாதா, ''இரும்புக் குதிரைகள்'' எழுதிய பாலகுமாரன். ''பாட்டிமார்களும் பேத்திமார்களும்'' எழுதிய ஜெயகாந்தன் போன்றோரைத் தான். இவ்விதம் நிறைய இலக்கியக்காரர் களை மாறனும் பாலனும் அறிமுகப்படுத்துவதற்கு காரணமாயிருந்த ஆலமரத்தடி என்னால் மட்டுமல்ல என்போன்றவர்களாலும் நேசிக்கப்படல் வேண்டும் என நான் எதிர்பார்த்தேன்.

ஆனால்...

— சுதாரஞ்சன்

என்னைத் தவிர எல்லோரும் ஆலமரத்தடியை விட்டு வெகுதூரம் விலகிப் போய் விட்டார்கள். இப்போது நந்தன் கனடா. மாறன், தயா இருவரும் சுவிஸ், பாலன் ஜேர்மனி, குமரன் இலண்டன் எனத் திசைக் கொருவராய் சிந்திக்கவே நேரமில்லாமல் அந்நிய தேசத்தில் இயந்திரங்களாய்....

நான் மட்டும் ஆலமரத்தடியை தினமும் மாலை வேளைகளில் வெறித்துப் பார்த்தவனாக பழைய நினைவுகளை மீட்டுப் பார்த்துக் கொண்டு பைத்தியக்காரன் போல....!

பழைய நினைவுகளில் இருந்து மீண்டவனாக ஆலமரத்தடியைப் பார்க்கிறேன். நான்கு இளைஞர்கள் சைக்கிள்களில் நின்று கதைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சூழ்நிலை மறந்து பேசிக் கொண்டிருப்பதனை பார்த்த மாத்திரத்திலேயே உணரமுடிகிறது.

திடீரென மிக அண்மையில் எங்கோ வேட்டுக்கள் தீர்க்கப்படும் சத்தம். இளைஞர் நால்வரும் சைக்கிள்களை எடுத்துக் கொண்டு விரைந்து செல்கின்றனர். நானும் என்னையறியாமல் வீட்டை நோக்கி விரைவாக நடக்கிறேன். கூடவே அந்தக் காலத்து ஆலமரத்தடி நினைவுகள் மீண்டும் மனத்திரையில், ''ம்... அதுவும் ஒருகாலம்'' என்ற வார்த்தை பெருமூச்சுடன் என்னிடமிருந்து வெளிப்படுகிறது.



**சுடர் ஒளி சிறுகதை**

## அகிம்சை என்னும் ஆயுதம்

சகோதரனே விழித்துக் கொள்!
உனது ஒற்றைக் கண் தூக்கம்
இனியும் வேண்டாம்.
விழித்துக் கொள்!
உருவமில்லாமல் உயிர் வாழும்
எமது ஸஹீதுகளின்
அடிச் சுவடுகளை ஞாபகப்படுத்து
அலுமாரிக்குள் அடுக்கிக் கிடக்கும்
அழுக்கு ஓலைகளைத்
தூசு தட்டிப்பார்....
அதன் கரடு முரடான
கருத்துக்களினால்
உன் ஈர விழிகளை
சுதாகரித்துக் கொள்.
மீண்டும் உருப்பெறச் சொல்லி
உன் உள்ளம் அழைக்கிறதா?
வேண்டாம் உன் மனசுக்கு
எடுத்துச் சொல்!
நீயும் அவர்களின்
வாரிசு என்பதை
அந்த உமரின் கைவாளை
உன் கரம் தரிசிக்க நினைக்கிறாய்
வேண்டாம்
அதைச் சற்று தள்ளிவை.
உனக்குப் பொருத்தமானது
அவர்களின் அகிம்சை என்னும்
ஆயுதம் தான்
பாலை வனத்தில் தாகம் வரும்
உன் பாதையில் முட்கள் முளைக்கும்
நீ உறங்கும் தலையணை கூட
உன்னிடம் விடுதலை கோரும்,
உன்னில் வீசும் வெப்பக்காற்று
உன் இரத்தத்தை உறிஞ்சும்,
உன் வீட்டுக் கன்றுக்குட்டி கூட
உன் மார்பை முட்டி
மோதிக் குதற வரும் என்றாலும்
உனக்குப் பொருத்தமானது
அவர்களின் அகிம்சை
என்னும் ஆயுதம் தான்!

— முகமட் அன்சார்

## சுமை தாங்கி

பூக்கள் தந்து, உன்
புத்தி மழுக்கினார்!
தங்கம் தந்து, உன்
தரம் குறைத்தார்!
பட்டும் பொட்டும் தந்து, உன்
பலம் அழித்தார்!
தெரியுமா உனக்கு?
சிரிக்கக் கூட
உரிமையில்லை!
அறிவாயா நீ?
உரத்துப் பேசவும்
உன்னால் முடியாது!
இன்னும் புரியவில்லையா?
நீ ஒரு சுமைதாங்கி
கர்ப்பம் தரிக்க மட்டுமே!

— ஸ்ரீ.சாந்தருபன்

## காதல்!

மனதுக்குள் சஞ்சரித்த
ஓராயிரம் நினைவுகளுக்குள்
அவளால் நெறிப்படுத்தப்பட்ட
அற்புத உணர்வு!
* * *
எந்தச் செயல்களுக்குள்ளும்
செயலற்றுப் போய்விட
எனக்குக் கிடைத்த
மறக்க இயலாத சாபம்!
* * *
இளமைக்கு கௌரவம்
என விதிப்பட்டு
நான்கு விழிகளுக்குள்
விதிக்கப்பட்ட
அவசரகாலச் சட்டம்!
* * *
வயதுக்கு வரைவிலக்கணம்
என விதி எழுதிட
நாமே நமக்கு விதித்த விதி!
* * *

—துஷாரா—

## இவை எல்லாம் பெண்ணே, உன்னாலே!

கற்றைக் குழல்வாரிக், கனகாம் பரஞ்சூடி
நெற்றிச் சிவப்புக்கு
நிறைவான பொட்டிட்டு
எட்டி நடந்தாயே—என்கிளியே
மனது எண்ணெய்ச்
சட்டிக்குள் விழுந்ததடி,
தகதகத்துக் கொதிக்குதடி!
கண்ணில் மைதீட்டிக் காலில் கொலுசேற்றி
வண்ண மயில்போல
வானிறத்துச் சேலைசுற்றி
பின்னல் நெளிந்தாடப் போனாயே
என் மனது
தன்னந் தனியாகத் தவிக்குதடி!
கண்ணில் சிரிப்பேந்தி,
காலில் செருப்பேந்தி
மண்ணில் வந்தவொரு
மன்மதனின் ரதியெனவே
முன்னே நடந்தாயடி, — முயலே,
நான் முற்றும் துறந்தேனடி!

கி. குருபரன்

## கருவறையில் ஓர் கானம்

பத்து மாதங்கள் கருவறையில்
பத்திரமாய் இருந்து விட்டு
இருள் சூழ்ந்த தேசமதில்
இப்போது நான் பிறவேன்
வேற்றுமை உணர்வுகளால்
வெந்து போன தேசமதில்
நேச மழை பொழிய வேண்டும்
நியாயங்கள் தழைக்க வேண்டும்
பழிவாங்கும் எண்ணங்கள்
பனிபோல் விலக வேண்டும்
பல காலப் பகை உணர்வு
மனங்களிலே மறைய வேண்டும்
போர்க்களங்கள் எல்லாமே
பகை மறந்து விளையாடும்
மைதானம் ஆக வேண்டும்
மனமனைத்தும் மகிழ வேண்டும்
எம் மதமும் சம்மதமாய்
எல்லோரும் ஓர் குலமாய்
குலவுகின்ற காலமதில்
கருவறையை விட்டு நானும்
கணப் பொழுதில் இவ்வுலகில்
காலடிகள் பதித்திடுவேன்
அதுவரையில் பத்திரமாய்
அம்மா உன் கருவறையில்
இன்னும் சில காலங்கள்
இன்பமாக இருக்கின்றேனே!

இமையூர் — கலா

## பிராயச்சித்தம்

கந்தகப் புகை நாற்றம்,
காதுடையும் வெடிச்சத்தம்
சொந்தமாய்(ப்) பழகிப் போய்,
சோர்வடையா ஒரு களத்தில்
இந்தா, பிடி என்று
இழுத்திழுத்து அடி கொடுத்த
அந்த ஒரு கணத்தில்
அழகான ஒரு பெடியன்
வந்திறங்கி வடிவாகத்
தனை உணர்ந்து கொள்ளுதற்குள்
அந்தோ பரிதாபம்!...
என்கையால்... அட நண்பா!
உன்னை நான் சந்தித்த
அந்தக் கணப் பொழுது
ஏனடா வேறிடமாய் இருந்திருக்கக் கூடாது?
கள்ளுக் கடை என்றால்
கட்டாயம் நானுனக்கு
அள்ளி அஞ்சாது
போத்தல் வார்த்திருப்பேன்.
விழுந்தாலும் தூக்கி
விட்டிருப்பேன் வாந்தி
எடுத்தாலும் கையில்
ஏந்தி எடுத்திருப்பேன்.
உன்னை நான் சந்தித்த
அந்தக் கணப் பொழுது
ஏனடா? வேறிடமாய்
இருந்திருக்கக் கூடாதா?
கால்ப் பந்தாட்ட மைதானம் என்றாலும்
கோல் போட்டா
நீ மன முடைய மாட்டி யென்றால்
பட்டும் படாமல்
பயிற்றுனரும் அறியாமல்
விட்டிருப்பின் ஒரு பந்தை வீரனே!
மனுசனை, மனுசன்
சந்தித்து உலகத்தில் அனுசரித்துப் போக
எத்தனையோ இடங்கிடக்க...
போர்க் களத்தில்
நாம் தான் சந்திக்கவேண்டு மென்று
ஆர் விதித்திருந்தானோ?
அறியேன் நான். சத்தியமா!
சுடாமல் விட்டிருப்பின்
சுந்தரனே நான் விட்டால்
படாரென்றெனக்குவெடி,
வைத்திருப்பாய், செத்திருப்பேன்
உன்னை நான் விட்டால்
உயிர் வாழ்க்கை எனக்கில்லை
என்ன நான் செய்ய
போர்க் களத்து நண்பா — 'சொல்'
உன்னை நான் சந்தித்த
அந்தக் கணப்பொழுது
ஏனடா? வேறிடமாய்
இருந்திருக்கக் கூடாதா....?

—பண்டிதர்



மனித வாழ்வில் ஏற்படும் இன்னல்களைத் தீர்த்துவைக்க கேரள மாந்திரீகத்தினால் முடியும் என்று சொல்வார்கள். இந்த நவீன விஞ்ஞான யுகத்தில் மேல்நாட்டவர் களுக்கும் கேரள மருந்து மாயத்தில் பெரிய நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. சௌரா கடற்கரைப் பிரதேசத்திலுள்ள ஆயுள்வேத சிகிச்சை நிலையங் களுக்கு வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் பெருமளவில் வருகிறார்கள் 'பிழிச்சல்' எனப்படும் ஆயுள்வேத சிகிச்சைகளை மேற்கொள் கிறார்கள். ஒரு வெள்ளைக் காரப் பெண்ணைக் கட்டிலில் படுக்கவைத்து அவருடைய நெற்றியில் சொட்டுச் சொட்டாக மூலிகை எண்ணெய்யைச் சிந்தவிடுகிறார் ஒரு பெண். தலைவலி நோயைக் குணப்படுத்தும் சிகிச்சை இது.

## மேல்நாட்டார் விரும்பும் கேரள மருந்து மாயம்



## 'வாகனத்தில் ஏற்றி செல்லுங்கள் பிளீஸ்!'

ஆபிரிக்க நாடுகளில் அடர்ந்த காடுகளில் சுதந்திரமாக வாழ்ந்து குதூகலிக்கும் வனவிலங்குகளின் அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டு வருகிறது. காடுகளை ஊடறுத்து நீண்ட நெடுஞ்சாலைகள் நிர்மாணிக்கப் படுகின்றன. மேல்நாட்டவர்கள் பாதுகாப்பான வாகனங்களைச் செலுத்தி வனவிலங்குகளைக் கண்டு மகிழ்வதற்கு வருகிறார்கள். சேற்றில் நெடு நேரம் புரண்டு மகிழ்ந்த காட்டெருமை ஒன்று வெயில் காய வீதிக்கு வந்தபோது ஒரு வாகனம் குறுக்கிடுகிறது. வாகனத்தை அவதானமாக நோக்கும் காட்டெருமை ''லிப்ட் ஒன்று தருகிறீர்களா, பிளீஸ்?'' என்று கேட்பது போல் தோன்றவில்லையா?

## வல்லவர் கங்குலிக்கு துடுப்பே பக்கபலம்!

இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் சௌரவ் கங்குலிக்கு அவருடைய கிரிக்கெட் துடுப்பே பக்கபலம் என்பது பல தடவைகள் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. நடிகை நக்மாவின் பிடிக்குள் சிக்கியபோதிலும் துடுப்பே அவருக்குப் பாதுகாப்பைக் கொடுக்கிறது. எலும்பு நோயினால் அவதியுறும் 10 வயது சிறுவன் ஒருவனைக் காப்பாற்றுவதற்கு கங்குலி முன்வந்தார். கையில் பணம் இல்லை. கிரிக்கெட் போட்டிகளில் அவர் வெற்றி பெறுவதற்கு உதவிய நான்கு துடுப்புகளை ஏலத் தில் விற்று அதன் மூலம் அந்தச் சிறுவ னின் மருத்துவச் சிகிச்சைக்குச் செலவிடத் தீர்மானித் திருக்கிறார் கங்குலி. ஒரு நோயாளிச் சிறுவனுக்கு உயிர்தரப்போகிறது விளையாட்டு.



## தொட்டில் குழந்தையாக விட்டுச் சென்ற அம்மா!

பெற்ற குழந்தையைக் குப்பையில் வீசும் கொடுமை நீங்கவேண்டும் என்பதற்காக தமிழகத்தில் 'தொட்டில் குழந்தை' திட்டம் நடைமுறைக்கு வந்தது. ஒரு காலத்தில் குழந்தையைப் பராமரிக்க முடியாதவர்கள் அதற்கென நிறுவப்பட்டுள்ள அநாதை இல்லங்களில் குழந்தையை ஒப்படைக்கலாம். எவரையும் சந்திக்க வேண்டியதில்லை. வாசலில் வைக்கப்பட்டுள்ள தொட்டிலில் குழந்தையைப் படுக்க வைத்துவிட்டுப் போக வேண்டியதுதான்.

இந்தத் தொட்டில் குழந்தைத் திட்டம் தமிழகத்தில் இப்போது நடைமுறையில் இருக்கிறதோ தெரியவில்லை. ஆனால் தென்னாபிரிக்காவிலுள்ள ஜொஹானஸ்பேர்க் நகரில் ஒரு மிருகவைத்திய நிலையம் ஆதரவற்ற மிருகங்களின் அநாதை நிலையமாகப் பணியாற்றுகிறது. ஒரு நான்கு மாதச் சிறுத்தைக் குட்டி தலையில் பலத்த காயங்களுடன் இந்த மிருக வைத்திய நிலைய வாசலில் துடித்துக்கொண்டிருப்பதை வைத்தியர்கள் கண்டனர். தாய் சிறுத்தையே தனது குட்டியை அங்கு கொண்டு வந்து சேர்த்துவிட்டுச் சென்றிருப்பது தெரியவந்தது.

நன்கு குணமடைந்துவிட்ட சிறுத்தைக் குட்டி மிருக வைத்தியரின் வீட்டுக்குள் சர்வ சாதாரணமாக வலம் வருகிறது. ஆனால் வைத்தியரின் செல்ல நாய்க்குத் தான் அதன் மீது பொறாமை.



## ஒளிந்திருக்கும் முகம் எது?



ஜூன் 03, சுடர்ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகை லைலாவினுடையது. சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு.

1. தமிழரசி தங்கம், மஸ்கெலியா.
2. கே. அக்கீத், செட்டிகுளம்.
3. உதய கோமளா, ஆள்கரனோயா.

சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுகள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

கடந்த வாரம் (10.06.2001) மசாலாமிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்திற்குரிய நடிகர் யார்? சரியான விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகள் பெயர், விவரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.

இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது?



சென்னை அழகு ராணியாகத் தெரிவு செய்யப்பட்டு பின்னர் மணம் கமழும் மஞ்சள் போல் ஜொலித்த நடிகை. தெலுங்கில் கவர்ச்சி ராணி.

இந்த முகத்திற்குரிய நடிகையைக் கண்டுபிடித்து அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர்ஒளி'
36/2, பிரெட்ரிக்கா வீதி
கொழும்பு – 06.



மண்வாசனையில் ஊறித் திளைத்த கலைஞர்கள், தங்கள் திறமையை எவ்விதத்திலும் வெளிக்காட்டியே தீருவார்கள். கலைத்திறன் கொண்ட சிற்பிகள் உலோகப் பொருள்களில் தான் சிற்பங்களை வடிப்பார்கள் என்று கருதிவிடக்கூடாது. மண்ணிலும் சிலைகளைச் செய்யும் திறமை அவர்களுக்கு இருக்கிறது. நெதர்லாந்தில் ஷிவேனிஜின் கடற்கரைச் சுற்றுலா மையத்தில் ஆண்டுதோறும் மணல் சிற்பக் கலை விழா நடைபெறுவது உண்டு. சிற்பி தோமஸ் கோமட் முற்றிலும் மண்ணிலேயே உயிர்த்துடிப்புள்ள இந்தச் சிலைகளை வடித்து அனைவரையும் கவர்ந்து விட்டார்.

## மண்வாசனை இருந்தால் கலைத்திறன் வெளிப்படும்

# சிறுவர் உலகத்தில் சொர்க்க போகம்!

பேராசிரியர் சி.சிவசேகரம், பிரேமிளா படைப்பில் உருவான ''பாட்டும் கூத்தும்'' நூல் வெளியீடும் அரங்க ஆற்றுகையும் என்ற நிகழ்ச்சியை தேசியகலை இலக்கியப் பேரவை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் அண்மையில் திறம்பட நடத்தியது.

வைகறை ஒன்றின் வரவை வையத்துக்கு சேவல்கள் செப்புவது வழமை. புலரப் போகும் இயல் இசை நாடகத் தமிழின்ப மாலைப் பொழுதொன்றின் வரவை வாழ்த்தும் விதத்தில் பால்மணம் மாறாத கிருஷாந்தக் குயிலொன்று தமிழ்ப் பாவினைப் பொழிகின்றது. அதற்குக் கடலோரம் தண்டவாளத் தம்புராக்களை மீட்டியபடி ரயில்கள் இசை இன்பம் சேர்க்கின்றன. அவ்வேளை நிகழ்வின் ஆரம்ப மணி ஒலிக்கின்றது.

சற்றே திரும்பிப் பார்த்த போது அப்பப்பா அரங்கம் நிறைந்த சனக் கூட்டம். குழந்தைச் செல்வங்கள் படைத்தளிக்கும் கலை விருந்தல்லவா? சுவைக்க விரும்பாதோரும் உண்டோ?

தலைமை உரையினை நிகழ்த்திய திரு.வ.இராசையா சிறுவர் இலக்கியப் படைப்புக்களின் வரலாற்றை விளக்கினார். இன்று சிறுவர் இலக்கியங்களுக்குப் பஞ்சம் நிலவுகிறது என்ற ஆதங்கத்தையும் வெளியிட்டார்.

இன்றைய சிறுவர்களே நாளைய உலகின் நாயகர்கள். நாட்டினைத் தாங்கப் போகும் தூண்கள். ஆகையால் அவர்களுக்கான அத்திபாரம் நல்ல முறையில் அமைக்கப் படவேண்டும். ஒரே மேடையில் ஒரே நிகழ்வின் போது நூல் வெளியீடும், அதன் காட்சி வடிவங்களும் இடம்பெறுவது இன்றைய இந்த நிகழ்வின் சிறப்பு என்றார் திரு.அனு.வை.நாகராஜன். தனது உடல் நிலை உபாதையையும் பொருட்படுத்தாது அமர்ந்தபடியே பல அரிய கருத்துக்களை அவர் வழங்கினார்.

திரு.சோ.தேவராஜா இரத்தினச் சுருக்கமாக தனது வெளியீட்டுரையினை நிகழ்த்தினார்.

நூல் வெளியீடு மற்றும் நாடக அரங்கேற்றச் செலவு கள் என்ற பணச் சுமையினைப் பகிர்ந்து கொண்டோர்,வாசற் படி ஏறு முன்னரே வாசல் தேடி விரைந்து வந்து நிதி உதவி வழங்கியோர் நாமங்களை அவர் அர்ச்சித்தார். ''அட நாம் பணப் பங்களிப்பு செய்ய வில்லையே என வருத்தப்படாதீர் கள். வீட்டுக்கொரு உண்டியல் நாளை உங்களை நாடிவரும்'' என்றும் அவர் நாசூக்காகக் கூறினார்.

சிறுவர் உலகம் அற்புதமானது. அது இன்பங்கள் மட்டுமே உள்ள இன்ப லோகம். இந்த விடயத்தைப் பற்றிப் பேசிக் கொண்டே இருக்கலாம். இது எனது நூல் வெளி யீடு என்பதால் நான் அதிகம் பேசாது விட்டுச் செல்கிறேன் என வேடிக்கையாகப் பேசிச் சென்றார். ஏற்புரை நிகழ்த்திய நூலாசிரியர் சி.சிவசேகரம்.

மாலை வரோதயனின் நன்றியுரையோடு அரங்க நிகழ்வுகளுக்காக அரங்கு கலவரப்பட்டுக் கொண்டிருந்தது.

சாரத்தை மடித்து கட்டிய ஏழெட்டு வயசு இளந்தாரிமார்கள்—

சிவப்பு வர்ண மைகளால் சொண்டுகள் கொவ்வைப்பழங்களாக மாற, அங்கங்களில் எல்லாம் தங்கங்கள் ஜொலிக்க நண்டுக் குஞ்சுகள் மாதிரி குருகுருத்துக் கொண்டு திரிந்த அக்காக்கள்—

ஆட்களை மறைத்துவிடும் அளவுடைய பெரிய சேலை களை ஒரு மாதிரி மாட்டிக் கொண்டு நரைத்துப்போன தலைகளுடன் வந்த சின்னச்சின்ன அம்மாக்கள்—

முறுக்கு மீசைக்கார அப்பாக்கள், பாட்டி, தாத்தா என்றும்—

யானை, பூனைகள், எலிகள், குரங்குகள் என தேன் கூட்டுக் குளவிகள் போல் அரங்குக்கு அயற் பக்கம் முட்டி மோதி பார்வையாளர் அனைவரின் புலன்களையும் தம் வசப் படுத்திவிட்டு அரங்கேறுவதற்கு எல்லோரும் ஆரவாரப் பட்டுக்கொண்டிருந்தனர்.

ஆகா! சிறுவர் உலகம் எவ்வளவு அற்புதமானது.

பொருத்தமான பின்னணி இசையுடன் கொழும்புத் தமிழ்ச் சங்கம் தயாரித்து வழங்கிய ''மலைகளை அகற்றிய மூடக் கிழவன்'', ''பரமார்த்த குருவும் சீடர்களும்'', ''கலவரம்'', ''அயலார் தீர்ப்பு'' போன்ற நான்கு நாடகங்களும்—

திருமறைக்கலாமன்றம் தயாரித்து வழங்கிய ''கெகுளேராசன் வழக்குத் தீர்த்த கதை'' என்ற நாடகமும் பெரு விருந்தாக அமைந்தன.

''மலைகளை அகற்றிய மூடக் கிழவன்'' என்ற நாடகத்தில் ''உது சரிவராது, உது சரிவராது.....'' என்று சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த கிழவனின் நடிப்பு மலைமகள், நதிமகள் என்று வந்த தேவதைகளின் அருளால் மலைகள் மறைந்த விதம் இவை பார்த்தோர் நெஞ்சைவிட்டு அகல மாட்டா. சிறுவர் சிறப்பாகப் படைத்தளித்த கலை விருந்தினை மிடறுவரை உண்டு களித்து ஏப்பமிட்டவாறு அரங்கு கலைகிறது.

– கே.சிவகுமார்

# தேன் தொகுப்பு என்னும் நூலுக்கு நயவுரை

வண்டு மலருக்கு மலர் தாவி நறுந்தேனைச் சேகரித்து எமக்குத் தருகிறது. அதைப் போன்று தம்பு துரைராசா தாம் ரசித்துப் படித்துச் சுவைத்தவற்றைத் தொகுத்து ஒரு நூலாகத் தந்துள்ளார். இது எல்லோராலும் செய்யக் கூடிய எளிதான காரியமல்ல என்று திருமதி வசந்தா வைத்தியநாதன் கூறினார்.

தம்பு துரைராசா எழுதிய ''மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்'' நூல் நயம் காணல் நிகழ்வு கடந்த முதலாம் திகதி கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. திருமதி வசந்தா வைத்தியநாதன் நூல் நயவுரை நிகழ்த்துகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

எப்படி வாழ வேண்டும்? ஆரோக்கியம், மாமியார்—மருமகள் பனிப்போர், சமயக் குறிப்புக்கள் போன்ற 121 தலைப்புக்களில் பயனுள்ள பல விடயங்கள் நூலிலே தொகுத்துத் தரப்பட்டுள்ளன என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இன்றைய பெண்களின் போக்கையும் விமர்சித்தார். பெண்கள் மேல்நாட்டு நாகரிகங்களைக் கடைப்பிடிக்கின் றனர். காலச் சூழலுக்கேற்ப அவர்கள் உடைகளை அணிவ தில்லை. குதியுயர்ந்த செருப்புக்களை அணிந்து செல்கி றார்கள். இன்று பெண்கள் வேலைக்குச் சென்று உழைக்கும் வருமானத்தை விட அவர்களின் செலவு அதிகமாகவே உள்ளது. இதனால் தானோ என்னவோ பெண்கள் வேலைக் குப் போகக் கூடாது என்று முன்னோர்கள் கூறினார்கள் என்றார். ஆயினும் பெண்கள் வேலைக்குப் போகக் கூடாது என்ற கருத்தில் தமக்கு உடன் பாடில்லை என்பதையும் திருமதி வசந்தா வைத்தியநாதன் கூறத் தவறவில்லை.

இந் நிகழ்விற்குத் தலைமை வகித்த கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சோ.தேவராஜா தனது தலைமையுரையில் ''இன்று புத்தகப் பண்பாடு அரிதாகி வருகிறது. மக்கள் காசு கொடுத்து புத்தகம் வாங்கப் பின்நிற்கிறார்கள்'' என்றார். தமிழ்மொழியில் கல்வி கற்பதைப் பலரும் நிறுத்தப் பார்க்கி றார்களே என்று தமது ஆதங்கத்தையும் அவர் தெரிவித்தார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட பிள்ளைக்கவி வ.சிவராசசிங்கம் சிறப்புரை ஆற்றினார். ஆன்மிக வாழ்வு சிறப்பாக அமைய வேண்டுமானால் அதற்கு உலகியல் வாழ்வு செம்மையான அடித்தளமாக அமைய வேண்டும் என்றார் அவர்.

– ஈ. கே.மயூரன்

## கலையமுதம்



# லண்டனில் யாழ் இந்துக்கல்லூரியின் 'கலையரசி' நிகழ்வு



உபவேந்தர்
பொ. பாலசுந்தரம்பிள்ளை

யாழ் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினரால் வருடாந்தம் நடத்தப்படும் 'கலையரசி' நிகழ்ச்சி மே 12 ஆம் திகதி இங்கிலாந்தின் வல்த்தம்ஸ்ரோ பொறஸ்ட் அசம்பிளி மண்டபத்தில் இனிதே நடந்தேறியது.

பிரான்ஸ், கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து இந்நிகழ்ச்சியில் பங்கு கொள்வதற்காக வந்திருந்த யாழ் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்கள் குத்துவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர். நிகழ்ச்சிகள் ஆரம்பமாவதற்கு முன்னர், யுத்தத்தினால் இறந்து போனவர்களுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

வரவேற்புரையைத் தொடர்ந்து, திருமதி செய்மணி ஸ்ரீதரனின் வீணைக் கச்சேரியும், அதனைத் தொடர்ந்து 'கலைமகள் துதி' விநாயகர் அஞ்சலி, புஷ்பாஞ்சலி, தாளலய நாட்டியம் போன்ற நடன நிகழ்வுகளும் இடம் பெற்றன.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றுகையில் ''புலம் பெயர்ந்து சென்று வாழ்வோர், யுத்த பூமியில் வேதனைகளுடன் வாழும் நலிவடைந்த எமது சகோதரர்களுக்கு உதவ முன்வர வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.



# நூல் வெளியீட்டு விழாவிலும் ஆஞ்சநேயர் விவகாரம்!

திருக்கேதீசுவர திருப்பணி அவையின் தலைவரும் சைவ சித்தாந்த செம்மலுமான மூதறிஞர் நமசிவாயம் அவர்களின் ''சைவ சித்தாந்தம் கூறும் தத்துவங்களும் தத்துவ விளக்கங்களும் – ஒரு விஞ்ஞான நோக்கு'' என்னும் நூல் வெளியீட்டு விழா சமீபத்தில் கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

ஆண்களும் பெண்களுமாகத் தமிழ் அறிஞர்களும் தமிழ் அபிமானிகளும் பெரும் எண்ணிக்கையில் விழாவில் கலந்து கொண்டனர்.

திருவாவடுதுறை ஆதீன இளைய சன்னிதானம் சீர்மிகு காசி விஸ்வநாத தேசிக சுவாமிகள் சைவ சித்தாந்தச் சிறப்புக்களை மிக விரிவாக விளக்கினார்.

மூதறிஞர் நமசிவாயத்தின் நூலினுடைய பெருமை பற்றிப் பேசுகையில் காலத்தின் தேவைகளை நிறைவு செய்யும் முறையில் விஞ்ஞானத்தைக் கொண்டு மெய்ஞானத்தை விளக்குகின்ற பாங்கு கற்றோரையும் மற்றோரையும் ஒருங்கே கவர்ந்து இழுக்கிறது என்றார்.

ஆஞ்சநேயர் வழிபாடு பற்றியும் அவர் கருத்து வெளியிட்டார். சிவநெறி தழுவிநிற்கும் தமிழர்கள் நாவலர் வழி வந்தவர்கள். அவர்கள் சிறுதெய்வ வழிபாட்டுக்கு இடம் கொடுக்கக்கூடாது.

''நான் இன்று (07—06—2001) காலியிலுள்ள சிவன் கோயிலுக்கு வழிபாட்டுக்காகச் சென்றேன் ஆஞ்சநேயரின் (அனுமானின்) பெரிய படம் ஒன்று கோயிலில் தொங்க விடப் பட்டிருந்ததைக் கண்டேன். மிக்க கவலையுற்றேன்'' என்று கூறினார். ''சிவனை முழுமுதற் கடவுளாக வழிபடும் சைவத்தில் வைணவ மதத்தில் சிறப்பிடம் பெற்றுள்ள ஆஞ்சநேயர் வழிபாடு எப்படி இடம் பெற்றது? எனக்குப் புரியவில்லை'' என்றார் அவர்.

அப்பர், மாணிக்கவாசகர் ஆகியோரின் பல பாடல்களை அடிகளார் மேற்கோள்காட்டி மாதொரு பாகனையே முழுமுதற் கடவுளாக எம் முன்னோர் வழிப்பட்டனர் என்பதை வலியுறுத்திக் கூறினார்.

வைணவ மதத்தினர் தமது மதக் கொள்கையில் மிக்க இறுக்கமாக இருக்கின்றனர். வைணவக் கோயில்களில் சிவ சின்னங்களுக்கு இடமேயில்லை. இப்படியான சூழ்நிலையில் பரந்த நோக்கு என்ற பெயரிலும்— சமய சமரசம் என்ற பெயரிலும் சைவ சமயத்தை உருக்குலைப்பது சைவத்தை உயிர் மூச்சாகக் கொண்டு அதற்காகவே தன் வாழ்வை அர்ப்பணித்த நாவலரையே மதியாத செயலாகும் என்றும் அடிகளார் கூறினார்.

இவ்விழாவில் நூலாசிரியர் நமசிவாயத்தின் திருக்கேதீசுவரப் பணியை வியந்து கம்பவாரிதி இ.ஜெயராஜ் பாராட்டினார். சைவத்தின் மீது நமசிவாயத்துக்கு உள்ள இறுக்கமான கொள்கைப்பற்றையும் எடுத்துக்கூறி அவரை வாழ்த்தினார்.

பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் முனைவர் பத்மநாதன் உரை நிகழ்த்துகையில் சங்ககாலம் தொடங்கி இது காலவரை தமிழகம் சமய வரலாற்றில் கண்ட மாறுதல்களை விளக்கினார். அவரும் திரு. நமசிவாயத்தின் நூல் சிறப்புக்களை எடுத்துக்கூறி மனம் திறந்து பாராட்டும் வாழ்த்தும் தெரிவித்தார்.

– கனக்ஸ்

# ஐந்துகோடி ரூபா செலவில் கரப்பந்தாட்டத் தலைமையகம்

இலங்கைக் கரப்பந்தாட்டச் சம்மேளனத்திற்கான புதிய தலைமையகம் 5 கோடி ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது.

நீர்கொழும்பிலுள்ள கதிரான என்னுமிடத்தில் இத்தலைமையகம் நிர்மாணிக்கப்படும்.

இவ்வாறு இலங்கை கரப்பந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவரான விமான சேவைகள், விமான நிலைய அபிவிருத்தி அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.


ஜெயராஜ்

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் இக்கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டப்படும். ஒரு வருடத்திற்குள் கட்டட நிர்மாண வேலைகள் பூர்த்தியடையும். இதற்குத் தேவையான நிதி சேகரிக்கப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் ஜெயராஜ் கூறினார்.

5 ஏக்கர் காணியில் இக்கட்டடத் தொகுதி அமைக்கப்படவுள்ளது. 30 வீரர்களும் 30 வீராங்கனைகளும் தங்கியிருக்கக் கூடியவாறு 60 பேருக்கான தங்குமிட வசதிகள், கரப்பந்தாட்ட பயிற்சி நிலையம், உடற்பயிற்சிக்கூடம், அலுவலகம், கேட்போர் கூடம், நீச்சல் தடாகம் ஆகியவற்றை இத் தலைமையகக் கட்டடம் கொண்டிருக்கும்.

கரப்பந்தாட்ட இல்லம் (வொலிபோல் ஹவுஸ்) என இதற்குப் பெயரிடப்படவுள்ளது. இதன் திறப்பு விழாவுக்கு சர்வதேச கரப்பந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் அல்லது முக்கிய அதிகாரியொருவரை பிரதம விருந்தினராக அழைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கையின் தேசிய விளையாட்டான கரப்பந்தாட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஒரு கோடி ரூபா கொண்ட நிதியமொன்று ஏற்படுத்தப்படவுள்ளது. இந்நிதியத்திலிருந்து கிடைக்கும் லாபம் கரப்பந்தாட்ட அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும்.

இந்நிதியத்தை பரிபாலனம் செய்வதற்கு சபையொன்றும் அமைக்கப்படும்.

சில வருடங்களின் பின்னர் தான் கரப்பந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் பதவியில் இல்லாவிட்டாலும்கூட மேற்படி நிதி கரப்பந்தாட்ட அபிவிருத்திக்காக மட்டுமே செலவிடப்படக் கூடியவாறு சட்டமியற்ற உத்தேசித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பயிற்றுநர்களுக்கும் நடுவர்களுக்கும் முறையான பயிற்சிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு வெளிநாட்டுப் பயிற்றுநர் ஒருவர் அழைக்கப்படவுள்ளார்.

இலங்கை அணி சர்வதேச அனுபவங்களைப் பெறுவதற்காக வெளிநாட்டுச் சுற்றுப் போட்டிகளில் கூடுதலாகப் பங்குபற்றுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது எனவும் கரப்பந்தாட்டச் சம்மேளனத் தலைவர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே கூறினார்.

# தடகள நட்சத்திரத்தின் திருமண வாழ்வில் முறிவு




அதிவேக ஓட்ட வீராங்கனை மேரியன் ஜோன்ஸ் தனது கணவர் சி.ஜே ஹண்டரை விவாகரத்துச் செய்யப் போவதாக அறிவித்துள்ளார்.

சிட்னி ஒலிம்பிக் போட்டிகளில் 5 பதக்கங்களை வென்றவர் மேரியன் ஜோன்ஸ்.

இவரது கணவர் சி.ஜே. ஹண்டர் 1999இல் குண்டெறிதலில் உலகச் சாம்பியனாகத் தெரிவானவர்.

32 வயதான ஹண்டர் சில வருடங்களுக்கு முன் தடகளப் பயிற்றுநராக இருந்தபோது மேரியன் ஜோன்ஸைச் சந்தித்தார். அப்போது மேரியன் கூடைப் பந்தாட்ட வீராங்கனையாக இருந்தார்.

ஹண்டர் தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்து உட்கொண்டதாக கடந்த ஒலிம்பிக் போட்டிகளின் போது அறிவிக்கப்பட்டது. கடந்த ஜூலை மாதம் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் மூலம் இது கண்டு பிடிக்கப்பட்டது.

காயம் காரணமாக கடந்த ஒலிம்பிக் போட்டியில் ஹண்டர் பங்குபற்றவில்லை. எனினும் மேரியனுக்குத் துணையாக அவர் சிட்னிக்குச் சென்றிருந்தார்.

ஹண்டர் மீதான குற்றச்சாட்டை மறுத்து சிட்னியில் ஒரு ஊடகவியலாளர் மாநாடு நடைபெற்றது. அதில் மேரியன் ஜோன்ஸும் கலந்துகொண்டு தன் கணவர் குற்றமற்றவர் என வலியுறுத்தினார்.

ஆனால் அமெரிக்கத் தடகள சம்மேளனம் ஹண்டருக்கு இருவருடத் தடைவிதித்தது. அவர் தன் மீதான தடையை எதிர்த்து போராடவில்லை. மாறாக குண்டெறிதலில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

அண்மைக் காலத்தில் விளையாட்டுலகின் மிகப்பிரபலமான தம்பதிகளாக இவர்கள் விளங்கினர். 1999இல் ஸ்பெயினில் நடைபெற்ற 200 மீற்றர் அரையிறுதியில் காயம் காரணமாக மேரியன் களத்திலிருந்து அகல நேரிட்டது. அப்போது தேம்பியழுத மேரியனை ஹண்டர் ஆறுதல்படுத்தியது மறக்க முடியாத ஒரு சம்பவமாகும்.

எனினும் தனது கணவர் ஹண்டரை விட்டுப் பிரிந்துள்ளதாக மேரியன் ஜோன்ஸ் கடந்த 6ஆம் திகதியன்று அறிவித்தார். விரைவில் விவாகரத்துச் செய்யவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

''எமக்கிடையிலான சீர்படுத்தமுடியாத முரண்பாடுகள் எமது திருமண வாழ்வை மிகவும் சிக்கலாக்கியது. பிரிந்து செல்வதே எமது எதிர்காலத்திற்கான சிறந்த முடிவு என நாம் உறுதியாக நம்புகிறோம்.

கடந்த சில வருடங்களாக தடகள அரங்கிலும் வெளியிலும் பரஸ்பரம் நாம் உதவியாக இருந்தோம். அக்காலத்தில் நினைவில் நிற்கக் கூடிய பல அனுபவங்களையும் பெற்றோம். அவருக்கு எனது நல் வாழ்த்துக்கள்'' என அறிக்கையொன்றின் மூலம் மேரியன் ஜோன்ஸ் கூறியுள்ளார்.

# விளையாட்டுச் செய்திகள்!

-ஆர். சேதுராமன்

## சர்ச்சைக்குரிய வீராங்கனையின் சுயசரிதை நூல்


அவுஸ்திரேலியாவின் முன்னாள் நீச்சல் வீராங்கனை டோவ்ன் பிரேஸர் அண்மையில் தனது சுயசரிதை நூலை வெளியிட்டார்.

''டோவ்ன்: வாழ்வின் ஒரு நரகம்'' எனும் தலைப்பிலான இந் நூலின் வெளியீட்டு விழா சிட்னி நகரில் நடைபெற்றது.

பிற பெண்களுடன் தனக்கு இருந்த தொடர்புபற்றி இந்நூல் வெளியீட்டு விழாவின் போது அவர் கூறினார். ஆயினும் அந்தத் தொடர்பைத் தாம் மதிக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

கெரி வேர் என்பவரை திருமணம் செய்து குறுகியகாலம் அவரோடு வாழ்ந்தவர் டோவ்ன் பிரேஸர்.

1956-1964 வரை தொடர்ச்சியாக மூன்று ஒலிம்பிக் போட்டிகளில் அவர் எட்டுப் பதக்கங்களை வென்றார். நான்கு தங்கப் பதக்கங்களும் நான்கு வெள்ளிப்பதக்கங்களும் இவற்றுள் அடங்கும்.


சுயசரிதை நூலுடன் சிட்னியிலுள்ள நீச்சல் தடாகத்தின் முன்னால் காணப்படுகிறார் டோவ்ன் பிரேஸர். நூலின் அட்டையில் பிரேஸரின் இளமைக்காலத் தோற்றத்தைக் காணலாம்.

போட்டிகளில் பங்குபற்றும் காலத்திலேயே சர்ச்சைக்குரியவராகத் திகழ்ந்தவர் அவர்.

1964 இல் டோக்கியோவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியின் நிறைவு வைபவங்களின் போது அவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

ஒலிம்பிக் கொடியொன்றைத் திருடியமையே கைதுக்குக் காரணம். நினைவுப் பொருளாக வைத்துக் கொள்வதற்காக அதைத் திருடியதாக பிரேஸர் கூறியிருந்தார்.

இதையடுத்து அவுஸ்திரேலிய நீச்சல் சங்கம் அவருக்கு 10 வருடக்காலத் தடை விதித்தது.

இதே ஒலிம்பிக் போட்டியின் போது அவுஸ்திரேலிய ஹொக்கி வீரர்களுடன் அவர் மது அருந்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

சிறிதளவு பியர் மட்டுமே அருந்தியதாக பிரேஸர் கூறினாலும் அவுஸ்திரேலியப் பத்திரிகைகளின் கண்டனத்திற்கு இலக்கானார் பிரேஸர்.

1964 ஒலிம்பிக்கின் ஆரம்ப வைபவங்களின்போது அணிவகுப்பில் பங்குபற்றுவதைத் தவிர்க்குமாறு பிரேஸருக்குக் கட்டளையிடப்பட்டது.

அடுத்த நாள் பிரேஸர் போட்டிகளில் பங்குபற்ற வேண்டியிருந்ததே இதற்குக் காரணம். ஆனால் அக் கட்டளையை அவர் ஏற்க மறுத்து விட்டார்.

அது மட்டுமல்லாது, உத்தியோகபூர்வ நீச்சல் உடையை அணியவும் அவர் மறுத்தார். தனக்குப் பொருத்தமான அளவில் அந்த உடை இல்லை என அவர் கூறினார். அதனால் ஆரம்பச் சுற்றுப்போட்டியொன்றில் வேறொரு உடையுடனேயே அவர் பங்குபற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## டேவிஸ் கிண்ணம் விற்பனைக்கு

அவுஸ்திரேலியாவின் பிரபல முன்னாள் டென்னிஸ் வீரர்களில் ஒருவர் மேர்வின் ரோஸ்.

1952 இல் டேவிஸ் கிண்ணப் போட்டியில் சாம்பியனானவர் இவர் .

தற்போது அக்கிண்ணத்தை விற்பனை செய்யப்போவதாகக் கூறுகிறார். திருடர்கள் அதைத் திருடி விடுவார்கள் என்று அஞ்சுவதே இதற்குக் காரணமாம்.

1950களில் பிரஞ்ச் ஓபன், அவுஸ்திரேலிய ஓபன் உட்பட 7 'கிராண்ட் ஸ்லாம்' போட்டிகளில் ரோஸ் வெற்றியீட்டினார். இவருக்குத் தற்போது 71 வயதாகிறது.

''எனது வெற்றிக் கிண்ணத்தை வங்கியொன்றின் பாதுகாப்புப் பெட்டகத்தில் வைத்திருக்கிறேன். ஆனால் வாழ்நாள் முழுவதும் அவ்வாறு விட்டு வைக்க முடியாது'' என்று கூறுகிறார் ரோஸ்.

# சமாதானம் இல்லையேல் ஒலிம்பிக் நடத்த அனுமதியில்லை

## இஸ்ரேலுக்கு ஐ.ஓ.சி தலைவர் எச்சரிக்கை

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்திற்கும் இடையில் சமாதான உடன்பாடு ஏற்படாத வரை ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கு ஏற்ற நாடாக இஸ்ரேல் கருதப்பட மாட்டாது. இவ்வாறு சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தலைவர் அன்ரானியோ சமரஞ் கூறியுள்ளார்.

கடந்த 4ஆம் திகதி சமரஞ் இஸ்ரேலுக்கு விஜயம் செய்தார். அப்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அண்மையில் இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் நடைபெற்ற தற்கொலை குண்டு வெடிப்பில் 20 பேர் பலியாகினர். இந்நிலையிலேயே சமரஞ்சின் விஜயமும் இடம் பெற்றது.


சமரஞ்

காஸா பிரதேசத்துக்கே அவர் முதலில் செல்லத் திட்டமிட்டிருந்தார். எனினும் டெல் அவிவ் நகரில் தரையிறங்குமாறு இஸ்ரேல் அவரை வற்புறுத்தியது.

இஸ்ரேலுக்குச் சென்றவுடன் அந்நாட்டு ஒலிம்பிக் குழுவினரை சமரஞ் சந்தித்தார். பின்னர் காஸாவுக்கு விஜயம் செய்தார். அங்கு அவர் பலஸ்தீன ஒலிம்பிக் குழுவினரைச் சந்தித்தார். எனினும் பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத்தை சந்திப்பதற்கு அவருக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை.

அண்மையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பையடுத்து அரபாத் மேற்குக் கரையிலிருந்து காஸாவுக்கு வருவதை இஸ்ரேல் தடுத்தது.

இதற்காக காஸா விமான நிலையத்தையும் இஸ்ரேல் மூடியிருந்தது. இதுவே அரபாத் சமரஞ்சை சந்திக்க முடியாமைக்குக் காரணம்.

இந்நிலையிலேயே ''சண்டையிடும் இருதரப்பும் பதற்றத்தைத் தணித்தால் மாத்திரமே 2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கு ஏற்ற நாடாக இஸ்ரேல் கருதப்படும்'' என சமரஞ் கூறினார்.

இஸ்ரேலின் தலை நகரான டெல் அவிவ்வில் 2010ஆம் ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கு இஸ்ரேல் விரும்புகிறது.

# ஆசிய கிரிக்கெட் சபை மாநாடு லண்டனில்

ஆசிய கிரிக்கெட் சபையின் மாநாடு ஜூன் 23 ஆம் திகதி லண்டனில் நடைபெறவுள்ளது.

ஜூன் 15 ஆம் திகதி சர்வதேச கிரிக்கெட் பேரவையின் மாநாடு லோர்ட்ஸில் நடைபெறவுள்ளது. இதைத் தொடர்ந்து ஆசிய கிரிக்கெட் சபையின் மாநாடு நடைபெறவுள்ளது.

பூட்டான், பஹ்ரெய்ன், சவூதி அரேபியா, அஸர்பைஜான் ஆகிய நாடுகள் ஆசிய கிரிக்கெட் பேரவையின் அங்கத்துவம் பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளன. அது குறித்து இம் மாநாட்டில் ஆராயப்படவுள்ளது.

புதிய நிர்வாகிகள் தெரிவும் இம் மாநாட்டின் போது நடைபெறும். இதில் தெரிவு செய்யப்படும் நிர்வாகிகள் 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி தொடக்கம் இரண்டு வருட காலத்திற்கு பதவி வகிப்பர்.

ஆசிய கிரிக்கெட் சபையின் நிர்வாகப் பதவிகள் சுழற்சி முறையிலேயே வழங்கப்பட்டு வருகின்றன. இதன்படி தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய முக்கிய பதவிகள் இம்முறை பங்களாதேஷுக்கு வழங்கப்படவுள்ளன.

தற்போது பாகிஸ்தான் ஆசிய கிரிக்கெட் சபைக்குத் தலைமை தாங்குகிறது.

சபையின் புதிய யாப்பும் வரவு செலவுத் திட்டமும் 23ஆம் திகதி நடைபெறும் மாநாட்டின் போது உறுப்பினர்களின் அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்படவுள்ளது.

இதேவேளை எதிர்வரும் 16 ஆம் திகதி ஆசிய கிரிக்கெட் மன்றத்தின் (ஏ.சி.எஃப்) மாநாடும் லண்டனில் நடைபெறவுள்ளது. இந்தியாவைச் சேர்ந்த ஜக்மோகன் டால்மியா இதற்குத் தலைமை தாங்கவுள்ளார்.

# தட்டுகிறார் யாழ் ஆயர் திறக்கப்படுமா பாதை?

**வ**ன்னிப் பெருநிலப் பரப்புக்கும் குடாநாட்டுக்கும் இடையே பொதுமக்களின் போக்குவரத்து வசதிகளைக் கருத்தில் கொண்டு கேரதீவு — சங்குப்பிட்டி தரைவழிப் பாதையைத் திறப்பதற்கு முயற்சி எடுக்குமாறு தமிழீழ விடுதலைப்புலிகளிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார் யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம்.

அண்மையில் புதுக்குடியிருப்புக்குச் சென்றிருந்த ஆயர் தமது இந்தக் கோரிக்கை அடங்கிய கடிதம் ஒன்றை அங்கு வைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரனுக்கு அனுப்பியுள்ளார்.

தரைவழித் தொடர்புகள் துண்டிக்கப் பட்டிருக்கும் குடாநாட்டுக்குத் தரைவழிப்பாதை ஒன்றைத் திறக்குமாறு யாழ் ஆயர் ஏற்கனவே பல தடவைகள் அரசிடமும், புலிகளிடமும் கோரியிருக்கிறார்.

ஆயர் கடைசியாகப் புலிகளிடம் விடுத்த கோரிக்கையில்:—

கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேலாக வன்னிப் பெருநிலப்பரப்புடன் தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலையில் குடாநாடு இருக்கிறது. வன்னியில் வாழும் எம் உடன்பிறப்புக்களோடு எவ்வித உறவும் அற்றவர்களாக — அவர்களை மறந்து வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளோம்.

இப்போது தென்மராட்சியையும் இழந்தவர்களாகி, குடாநாட்டின் ஒரு சிறு பகுதிக்குள்ளேயே அனைவரும் வாழ வேண்டிய இக்கட்டான சூழ்நிலை. இது எமது துன்பங்களை இன்னும் அதிகரித்துள்ளது.இந்த நிலையில்

வன்னிவாழ் மக்களுடனான எமது உறவுகளை மீண்டும் ஏற்படுத்தவும் சிதைந்துபோன எமது பொருளாதாரத்தை மீண்டும் மேம்படுத்தவும் மிக அவசியமான தரைவழிப் பாதையைத் திறந்து அமைத்துத் தரும் படி தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

குறிப்பாக கேரதீவு — சங்குப்பிட்டிப் பாதையை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மற்றும் ஐ.நா. அமைப்புக்கள் ஆகியவற்றின் உதவியுடன் மீண்டும் போக்குவரத்துக்குத் திறந்து வைப்பதற்கு முயற்சி எடுங்கள்— என்றும் கோரியிருக்கிறார்.

அரசுக்கும் — விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சு முயற்சிகளில் முட்டுக்கட்டை ஏற்பட்டு மீண்டும் இருதரப்பினரிடையேயும் யுத்தம் வெடிக்கக் கூடிய சூழ்நிலை உருவாகி வரும் தருணத்தில் ஆயரின் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் விடுதலைப் புலிகளிடம் மட்டும் ஒரு தரப்பாக விடுக்கப்பட்டிருக்கும் பாதைத் திறப்புக் கோரிக்கையைப் புலிகள் ஏற்றுக் கொள்வார்களா? என்பது சந்தேகமே.

புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் வன்னிப் பிரதேசத்துக்கு வவுனியா வழியாக உள்ள பாதைத் தொடர்பிலேயே பலவித கட்டுப்பாடுகளையும், கெடுபிடிகளையும் அதிகரித்து வரும் அரசுப் படைகள் புலிகளின் பிரதேசத்துக்குப் புதிதாக ஒரு பாதையைத் திறக்க இணங்குமா?

வன்னிப் பகுதி மீதான முற்றுகையை சிறிதளவும் தளர்த்த முன்வராத அரசு அரசியல் மற்றும் இராணுவ ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த குடாநாட்டுடன் புலிகளின் பிரதேசம் தொடர்பு படுவதை ஏற்றுக் கொள்ளுமா?




குடாநாடு மீது மீண்டும் படையெடுப்பை நடத்த பூநகரிப் பகுதியில் புலிகள் தமது போராளிகளைக் குவித்துவருவதாகப் புலனாய்வு அறிக்கைகள் என்ற பெயரில் பல தகவல்களைப் பாதுகாப்புத் தரப்பினர் அடிக்கடி வெளியிட்டு வருகின்றனர்.

போர் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகக் கருதப்படும் பூநகரி ஊடாகத் தரைப் பாதையைத் திறக்க ஒரு தரப்பு இணங்கினாலும்கூட மறுதரப்பு அதனை ஏற்க முன்வருமா என்பது சந்தேகமே. பொது மக்களுக்கான போக்குவரத்தை மேற் கொள்ளப் பாதை ஒன்றைத் திறப்பதாயின் அதற்கு சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் முதலில் இணக்கம் தெரிவிக்க வேண்டும் என்று சர்வதேச தொண்டு நிறுவனங்கள் எதிர்பார்க்கின்றன.

கேரதீவு — சங்குப்பிட்டி பாதையைத் திறக்குமாறு புலிகளிடம் கோரியது போன்று அரசுத் தரப்பிடமும் ஆயர் கோர வேண்டும். அப்போதுதான் இது விடயத்தில் இரு தரப்பு நிலைப்பாடும் தெரியவரும்.

குடாநாட்டின் நுழைவாயில் பகுதியான ஆனையிறவைப் புலிகள் தங்கள் கைகளில் வைத்துள்ளனர். ஆனையிறவை எப்படி யாவது மீண்டும் கைப்பற்றியே தீருவோம் என்று அரசுத் தலைவர்களே கூறி வருகின்றனர். அதற்கான பெரும் முயற்சியில் அரசுப்படைகள் ஏற்கனவே ஈடுபட்டும் உள்ளன.

பெரும் தோல்வியில் முடிவடைந்த 'அக்கினிச் சுவாலை' நடவடிக்கை ஆனையிறவை நோக்கியே ஆரம்பிக்கப்பட்டது.

ஆனையிறவுத்தளம் அரசுக்கும், அரசுப் படைகளுக்கும் 'கௌரவப் பிரச்சினையாக' இருப்பதால் அந்த வழி ஊடாகப் போக்குவரத்துப் பாதை ஒன்றைத் திறப்பது என்பது இப்போதைக்குச் சாத்தியமாகப் போவதில்லை. இதனை உணர்ந்து கொண்டுதான் யாழ். ஆயர் கேரதீவு சங்குப்பிட்டி பாதையைத் திறக்குமாறு கேட்டிருக்கிறார். இதே கோரிக்கையை அரசிடமும் விடுக்க வேண்டும். ஆயரின் கோரிக்கைக்கு வலுச்சேர்க்கும் வகையில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் , குடா நாட்டில் உள்ள மனித நேய அமைப்புகளும் குரல் எழுப்பவேண்டும்.

## விமான சேவை

குடாநாட்டில் உள்ள இந்து யாத்திரிகர்களின் வசதிகருதி பலாலிக்கும் இந்தியாவுக்கும் இடையே நேரடி விமான சேவை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வடபிரதேச இந்துப் பேரவையினர் வேண்டுகோள் விடுத்திருப்பதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளியாகி உள்ளது.

தென்னிந்தியாவில் உள்ள யாத்திரைத் தலங்களுக்குக் குடாநாட்டில் இருந்து யாத்திரிகர்கள் சென்று வர வசதி செய்யப் படுவது நல்லதுதான். ஆனால் குடா நாட்டுக்குள் வசிக்கும் இந்துக்கள் தங்கள் சகோதரர்களிடமும் தங்கள் மண்ணில் உள்ள பல இந்துக் கோயில்களுக்கும் செல்ல முடியாதவாறு தடுக்கப் பட்டிருக்கின்றனர்.

இந்துப் பேரவையினர் முதலில் இதனை உணர்ந்து கொள்ள வேண்டும். இந்தியாவுக்கு நேரடி விமான சேவை இப்போது அவசியமா? அல்லது வன்னிப் பகுதிக்கான ஒரு தரைவழிப் பாதை அவசியமா?

சொந்த மண்ணில் உள்ள இந்துக்களின் பிரச்சினைகள், மத உரிமைகளுக்காகக் குரல் எழுப்ப வேண்டியதே இந்து பேரவை போன்ற அமைப்புகளின் முதற் கடமையாகும். இதனை அவர்கள் முதலில் செய்யட்டும். குடாநாட்டுக்குத் தரைப்பாதை ஒன்றைத் திறக்கும் கோரிக்கைக்கு ஆதரவாக இந்து அமைப்புகளும் குரல் எழுப்பட்டும்.

## இறைச்சிக்கு மாடுகள்

தீவுப்பகுதி தொடர்பான மற்றொரு தகவல் இது.

குடாநாட்டு மக்களின் இறைச்சித் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான கால்நடைகள் தற்போது தீவுப்பகுதியிலேயே இருக்கின்றன.

வன்னிப் பகுதியில் இருந்து இறைச்சிக்கான கால்நடைகளை எடுத்து வருவது முற்றாகத் தடைப்பட்டுப்போய் நீண்டகாலமாகிவிட்டது. இறைச்சிக்கான கால்நடைகள் அதிக எண்ணிக்கையில் வளர்க்கப்பட்ட தென்மராட்சிப் பிரதேசமும் யுத்த பூமியாகிவிட்டது.

தற்போது தீவுப்பகுதியில் — குறிப்பாக நெடுந்தீவில் — உள்ள மாடுகள்தான் குடாநாட்டு மக்களின் இறைச்சித் தேவைகளில் பெரும் பங்கைப் பூர்த்தி செய்கின்றன. ஆனால் தற்போது அங்கும் கால்நடைகள் அருகி வருகின்றன.

தீவுப்பகுதியில் இருந்து மாடுகளை இறைச்சிக்காகக் கொண்டு செல்வதாயின் அங்குள்ள கடற்படையினரிடம் அனுமதி பெறவேண்டும். இதைவிட அங்கு உள்ளூர் நிர்வாகத்தில் செல்வாக்குச் செலுத்துவோரின் அனுமதியும் அவசியம்.

அண்மைக்காலமாக நெடுந்தீவில் இருந்து இறைச்சிக்காக மாடுகளை ஏனைய பகுதிகளுக்குக் கொண்டு செல்வோர் மாடு ஒன்றுக்கு தலா ஆயிரம் ரூபாவைச் செலுத்தவேண்டி இருப்பதாகக் கூறுகின்றனர்.

இந்தப் பணத்தின் பெரும்பகுதி தீவுப்பகுதியின் உள்ளூர் நிர்வாகத்தை தனது கையில் வைத்திருக்கும் தமிழ்க்கட்சி ஒன்றின் முக்கிய உறுப்பினர் ஒருவருக்கே போய்ச்சேர்வதாகத் தகவல்.

மாடுகளுக்காகத் தாங்கள் கொடுக்கும் பணம் வரியா, கப்பமா என்று தெரியாமல் குழம்பிப் போயுள்ளனர் இறைச்சி வியாபாரிகள்.

இதேவேளை —

நெடுந்தீவில் மாடுகளின் எண்ணிக்கை அருகி வருவதை அடுத்து அங்கு மாடு திருடப்படுவது அதிகரித்திருக்கிறது. திருடப்பட்ட மாடுகள் இறைச்சிக்காக அங்கிருந்து தீவுகளின் ஏனைய இடங்களுக்குக் கொண்டுசெல்லப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் தற்போது இறைச்சிக்காக அங்கிருந்து மாடுகளைக் கொண்டு செல்லும் வியாபாரிகள் அவற்றைப் படகில் ஏற்றுவதற்கு முன்பாக பொதுமக்களின் பார்வைக்கு விடுகின்றனர்.

திருடப்பட்ட மாடுகள் அவற்றில் உள்ளனவா என்பதைப் பொதுமக்கள் பார்த்துத் தெரிந்துகொள்ள வசதியாக இந்த ஏற்பாடு.

மாடுகளைப் பார்வையிட வருமாறு ஒலிபெருக்கி மூலம் மக்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது.

— வலிகாமத்தான்

# பித்தன் பதில்கள்

பி.மல்லிகா, வெள்ளவத்தை
கே : பித்தனே...! நோர்வேயின் விசேட தூதுவர் சொல்ஹெய்ம் தனது முயற்சியில் வெற்றிபெறுவாரா?
ப : பார்த்தசாரதிக்கு ஏற்பட்ட கதிதான் சொல்ஹெய்முக்கும்! பாவம் ஆழம் தெரியாது காலை வைத்துவிட்டார்.

ரா. சாலினி, கொட்டாஞ்சேனை.
கே : பித்தனே பி.சுசீலா தமிழில் இதுவரை எத்தனை பாடல்கள் பாடியிருப்பார்?
ப : 15ஆயிரம் பாடல்கள்

சுவர்ணலதா, வத்தளை
கே : அடிக்கடி வீட்டில் திருட்டு நடக்குது என்ன செய்ய? நாய் வளர்க்கலாமா?
ப : கவனம் அங்கே ஒரு வீட்டில் நாயையும் சேர்த்துத் திருடிக் கொண்டு போய் விட்டார்களாம்!.



ஜெயம், வவுனியா.
கே : கலைஞர் கருணாநிதியின் அறுபதாண்டு அரசியல் அனுபவம் அதலபாதாள வீழ்ச்சி கண்டதற்கு முக்கிய காரணம்...?
ப : சாதிக்கட்சிகளை அணைத்துக் கொண்டதுதான்.

என்.சரஸ்வதி, திருகோணமலை.
கே : பித்தனே! பால்மா, சமையல் காஸ் விலைகளைக் குறைக்குமாறு விசேட அமைச்சரவைக் குழு சிபார்சு செய்திருக்கிறதே!
ப : இவற்றின் விலைகளை கண்ணை மூடிக் கொண்டு உயர்த்தினார்கள். இப்பொழுது சிறிது குறைத்திருக்கிறார்கள். அவ்வளவுதான்.

எஸ்.மு.ஜீவன், கல்கிசை
கே : நடிகை ரம்பாவுக்கு நடை அழகா? இடை அழகா?
ப : இன்னொரு அழகை மறந்துவிட்டீர் போல...!



கே.அக்கீத், செட்டிக்குளம்.
கே : டியர் பித்தா...! எமது நாட்டில் சமாதானம் எப்பொழுது பிறக்கும்...?
ப : சமாதானம் எங்கே பிறக்குது? அது பறக்குது...!

சந்திரபோஸ், வவுனியா.
கே : பிரான்ஸிலும் பொங்கு தமிழ் நிகழ்வுகள் இடம்பெறப் போகின்றனவாமே. இது எதனைக் காட்டுகிறது?
ப : தமிழன் புலம்பெயர்ந்து சென்றாலும் உணர்வு குன்றவில்லை என்பதைத்தான்.


கே : பித்தனே...! பிரிட்டிஷ் தேர்தலில் ரொனி பிளேயர் வெற்றி பெற்றுவிட்டாராம் புலம்பெயர்ந்து சென்ற ஈழ அகதிகளுக்கு ஏதாவது விமோசனம் கிடைக்குமா?
ப : ஈழ அகதிகள் தாம் செல்லும் நாடுகளில் எப்படி நடந்துகொள்கிறார்கள் என்பதிலேயே அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கிறது.

ஆர்.வாஹிட், கல்முனை
கே : கிழக்குப் பகுதிக்கு புலிகளின் தளபதிகளில் ஒருவரான கருணா வந்திருப்பது உண்மையா?
ப : சரிதான் போங்கள். கிழக்கிலுள்ள படையினருக்கு தங்களது படைத் தளபதியின் பெயரே மறந்து போய் விட்டதாம்.

ம.அதிஷ்டா, கொழும்பு - 10.
கே : ஹரே ராமா ஹரே கிருஷ்ணா இயக்கத்தில் சேர்ந்து சாமியாராகிவிட இருந்த ரஜனிகாந்தை கமல்தான் தடுத்து ஆட்கொண்டாராம்! இது உண்மையா பித்தனே?
ப : இருக்கலாம். நல்லவேளை ரஜனி சாமியாராகியிருந்தால் பாட்ஷா, முத்து, படையப்பா போன்ற படங்களைத் தவறவிட்டிருப்போம்.

பாரதிதாசன், மன்னார்.
கே : பாரதியார் இன்றைய 'புரட்சி'ப் பெண்களைப் பார்த்தால் என்ன பாடுவார்?
ப : நல்லதோர் 'டெனீம்' வாங்கியே அதை நலம் கெட மகளிர் நீர் போடலாமோ? என்று பாடியிருப்பார்.

க. சிவக்குமார், வவுனியா
கே : ஓயாமல் 'சிகரட்டை' ஊதித் தள்ளுபவர்களை என்னென்று கூப்பிடலாம் பித்தா...!
ப : குங்குலியக் கலயநாயனார் என்று கூப்பிட்டால் தப்பில்லை.



செ. துஷிகா, வெள்ளவத்தை.
கே : நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேறுமா?
ப : சென்ற தடவை ரணில் வெளிநாடு போய் வர கட்சிக்குள் பிளவு. இந்தத் தடவை வெளிநாடு சென்று திரும்ப ஆட்சிக்குள் பிளவா? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

முகம்மது அன்ஸார், மாலிகாவத்தை
கே : பித்தனே...! இந்தியாவில் வாஜ்பாய் அரசையும் இலங்கையில் சந்திரிகா அரசையும் ஒப்பிட முடியுமா?
ப : இரண்டு அரசுகளுமே தற்பொழுது ஆட்டம் கண்டு வருகின்றன.

# உள்ளூர் கெட்டிக்காரர்கள் வெளிநாடுகளில் மக்காமட்டம்!

திடீரென்று பெய்த மழையால் அன்று தேரடியில் மண் குளிர்ந்திருந்தது. பெரியவர்கள் முன்னரே வந்திருக்க, லோகன் மட்டும் தனியாக வந்தான்.

''என்ன, துலா மட்டும் வருகுது, துலாக் கல்லைக் காணேல்லை'' 'கடிக்' கேள்வியை வீசினாள் சின்னாச்சி.

துலாவும், அதன் பிற்பகுதியில் கட்டப்பட்ட கல்லும்போல் லோகனின் பின்னால்வரும் டானியலைக் காணாததால் எழுந்த கேள்வி அது என்று புரிந்து கொண்ட பெரியவர்கள் மெல்லச் சிரித்தார்கள்.

''டானியலின் மாமா ஒருவர் வெளிநாட்டாலை வந்திருக்கிறார். அதுதான் அவரோடு போயிருக்கிறான். இப்பவந்திடுவான்'' என்றபடியே அமர்ந்தான் லோகன். அவன் இருக்கவும், வேர்க்க விறுவிறுக்க டானியல் வரவும் சரியாக இருந்தது.

''என்னதம்பி லேட்டாகும் எண்டு நினைச்சம், உடனை வந்திட்டீர்'' கேட்டார் விநாசியர்.

''வெளிநாட்டுக் கேள்வி ஒண்டு இருக்கு, அதைக் கேக்காட்டி மண்டை வெடிக்கும் போல இருந்தது. அதுதான் மாமாவை வீட்டை விட்டிட்டு ஓடி வந்தனான்'' மூச்சிரைக்கச் சொன்னான் டானியல்.

''ஓ ......அப்ப நல்ல விஷயத்தோடைதான் வந்திருக்கிறீர்'' உற்சாகமாகக் கேட்டார் மாஸ்டர்.

''ஆனால் அது சந்தோஷம் தரும் விஷயமில்லை'' என்ற பீடிகையுடன் அரட்டையை ஆரம்பித்தான் டானியல்.

''இலங்கையில் பரீட்சைகளில் முதலிடம் பெறும் மாணவர்கள் வெளிநாட்டில் படிப்பைத் தொடரக் கஷ்டப்படுகினமாம். ஆனால் இங்கு சாதாரண மாணவர்களாக இருப்பவர்கள் அங்கு கெட்டித்தனமாக இருக்கினமாம். இதனை வெள்ளைக்காரப் பேராசிரியர் ஒருவர் மாமாவிடம் கூறி அதற்குக் காரணம் கேட்டாராம். மாமா என்னிடம் கேட்கிறார் என்ன பதில் சொல்ல?''

''இதில் இன்னொரு விஷயமும் இருக்கு இங்கே. தங்கக் கம்பிகளாக ஒழுங்காய்ப் படிக்கிற பெடியள் வெளிநாட்டுக்குப் போனா கெட்டுச் சீரழியுதுகள். அதிலும் சிலர் மன நோயாளிகளாகத் திரும்பி வந்திருக்கினம். ஆனால் இங்கு சுதந்திரமாக இருந்த பெடியள் வெளிநாடு போய் உருப்படுகுதுகள். இந்த மர்மம் எனக்கும் தான் விளங்கஇல்லை'' தான் அவதானித்ததைச் சொன்னார் விநாசியர்.

கல்வி சம்பந்தமான விஷயம் என்பதால் மாஸ்டரின் பதிலை மற்றவர்கள் எதிர்பார்த்தனர். அதை உணர்ந்ததால் மாஸ்டரும் பேச ஆரம்பித்தார்.

''டானியலும், விநாசியரும் சொன்னது எப்போதும் நடக்கிறதில்லை. ஆனாலும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இது உண்மையாகத்தான் இருக்கு. ஆனால் இதுக்கு மாணவர்களில் மட்டும் பிழை சொல்ல ஏலாது. அரசும், பெற்றோரும் தான் இதுக்குப் பொறுப்பெடுக்க வேண்டும்.

மாஸ்டரின் கருத்து அனைவருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

''என்ன மாஸ்டர், மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுறியள்'' ஆச்சரியம் தாங்காமல் வாய்விட்டுக் கேட்டார் விநாசியர். வியப்புகளுக்கு விடையாக புன்சிரிப்பைத் தந்த மாஸ்டர் ''அரசின்ரை பாட முறைகளும், பெற்றோரின் மனப்போக்கும் தான் இதற்குக் காரணம்'' என்று விளக்கமளித்தார்.

''இது வயிறு முட்டத் தின்றுவிட்டு, பிறகு சத்தி எடுக்கிற மாதிரியெல்லே. பரீட்சையும் எப்படி நடக்குது? பிள்ளைகளை கள்ளா மாதிரிக் கருதி, அவைக்கு முன்னும் பின்னும் ஆள்களை சுற்ற வைச்சு, பார்த்து எழுதாமல் கண்காணித்து மாணவரை பரீட்சை என்றாலே வேள்விக்கு கொண்டு போன கிடாய் மாதிரி ஆக்கிப் போடுகினம்''

''அப்ப வெளிநாடுகளிலை இப்படி இல்லையோ மாஸ்டர்''

''இல்லைத்தம்பி, இங்கே 6 கேள்விகளைக் கொடுத்து 3 மணித்தியாலங்களிலை பதில் எழுதச் சொல்லுவினம், அதுக்குள்ளை, பிள்ளையள் பார்த்து எழுதுதா என்று 'செக்கிங்' வேற, ஆனால் வெளிநாட்டிலை எப்படி வேண்டுமானாலும் எழுது. ஆனால் கொஞ்ச நேரத்துக்குள்ளை எழுது' என்று சொல்லுவினம் அப்ப பிள்ளைகளுக்கு வீணான டென்ஷன் இருக்காது''

''அப்ப மாஸ்டர் கொப்பியடிக்க விடுவினமோ?' ஏக்கத்துடன் கேட்டான் டானியல்.

''அப்பிடியில்லை, அங்கு கொடுக்கப்படுகிற நேரம் பார்த்து எழுதக் காணாது. தெரிஞ்சதை எழுதத்தான் போதும். அதனாலை பார்த்து, கொப்பியடிக்க வேணும் எண்டு சிந்தனையே அவர்களுக்கு வராது.

''அதோட பாடங்கள் அந்தந்த வயசுக்கு ஏற்ற மாதிரித்தான் அமைஞ்சிருக்கும். ஆனால் இங்கு பாடத்திட்டங்கள், வினாத்தாள்களைத் தயாரிக்கிறவை தங்கடை மேதாவித்தனத்தைக் காட்ட வேணும் என்று நினைக்கினமே தவிர, குழந்தையளின்ரை மன நிலையைப் பற்றி கவலைப்படுறதில்லை. சொல்லப் போனா மாணவர்களின் 'சைக்கோலஜி பற்றி பெரியவைக்குத்தான் பாடம் நடத்த வேணும்''

''அப்ப மாஸ்டர், எங்கடை பாட முறை தவறு என்று சொல்லுறியள்''

''பாடம் சொல்லிக் கொடுக்கும் முறை தவறு என்று சொல்லுகினம். பாடப் பிரிவுகளில் இருந்து பாடசாலைகள் வரை நாங்கள் முதலிடம், இரண்டாமிடம் என்று தரம்பிரிச்சு வைச்சிருக்கிறது அதை விடப்பெரிய தட்டு, பத்து வருடங்கள் போராடி படிச்சுவாற மாணவன் உயர்தர வகுப்புக்கு போகாட்டி மரியாதையில்லை, அதிலும் விஞ்ஞானம், கணிதப் பிரிவுகள் மற்றவற்றை விட உயர்ந்தவை. சில பாடசாலைகள் உயர்ந்தவை. இப்படி எல்லாத்திலையும் தரம் பிரிச்சு மாணவர்களிடம் தாழ்வு மனப்பான்மை ஏற்படக் காரணமாக நாங்களே இருக்கிறோம்''.


''பெற்றோரும் காரணம் என்று முதல் சொன்னீர்கள்'' ஞாபகமூட்டினார் விநாசியர்.

''பெற்றோர் விடும் முதல் பிழை தங்கடை ஆசைகளை பிள்ளைகள் மீது திணிப்பது. இதனால் ஒரு பிள்ளையிடம் இருக்கும் தனித்திறமை வெளிவராமல் போகிறது.''

''தாங்கள் படிக்கிற காலத்திலை எல்லாப் பரீட்சைகளிலும் கோட்டை விட்டிருப்பினம். ஆனால் தங்கடை பிள்ளைகள் மட்டும் எழுதும் பரீட்சைகள் எல்லாத்திலையும் பாஸ்பண்ண வேணடும் எண்டுதான் எல்லாப் பெற்றோரும் கம்பெடுக்கினம்'' யதார்த்தத்தைச் சொன்னாள் சின்னாச்சி.

''அதுவும் இதிலை தாய்மாரின் பங்குதான் பிள்ளைகளை வதைக்குது. மற்றப் பிள்ளையளை விடத் தன் பிள்ளை கெட்டிக்காரர் என்று காட்டுவதற்காக, குழந்தைகளின் சக்தியை மீறி, மெதுவாகச் சொல்லிக்கொடுக்க வேண்டியதெல்லாவற்றையும், தேவாரத்தில் இருந்து ஆங்கில பாடல்கள் வரை திணிக்கிறது, பெரிய கொடுமை. நாளடைவில அந்தப்பிள்ளைக்குப் படிப்பிலை வெறுப்பு வர இதுவே காரணமாக இருக்கும். அதனால்தான் சின்ன வயசிலை கெட்டிக்காரர் என்று பெயர் வாங்கினாலும் பின்னாளில் படிப்பைக் குழப்பும்நிலை ஏற்படுகுது''

''தாய்மாரின் கூத்து பெரிய கூத்து. வீட்டுக்கு விருந்தாளிகள் வரும் போது, அவையுடன் வரும் குழந்தைகளிடம தமது பொம்மைகளைக்காட்டி பிள்ளை விளையாடிக் கொண்டிருக்கும். அந்த நேரத்திலை, தாய்க்காரி தன் பெருமையைக் காட்ட, விளையாடிக் கொண்டிருக்கிற பிள்ளையை இழுத்து வந்து நிறுத்தி, ஆத்திசூடி சொல்லு, அது சொல்லு, இது சொல்லு என்று வதைக்கிற பழக்கத்தை முதல் நிற்பாட்ட வேணும்'' வீட்டில் மகளிடம் பேரன்படும் பாட்டை எண்ணிச் சொன்னார் விநாசியர்.



## தேரடி அரட்டை

அவரைத் தொடர்ந்து ஆரம்பித்தான் டானியல்.

''பிள்ளையளுக்கு படிப்பிலைதானாக ஆர்வத்தைக் கொண்டு வரவேணும். பிள்ளையள் டொக்டரா வரவேணும், எஞ்சினியரா வரவேணும் என்றுதான் எங்கடை பெற்றோர் சொல்லுவினமே தவிர பிள்ளையளின் விருப்பு வெறுப்பு, கஷ்ட நஷ்டங்களைப் பொறுமையாகக் கேட்டு அந்தப் பிள்ளையிடம் இருக்கும் திறமையை ஊக்குவிச்சு, அந்த லைனிலை வளர்க்கிற எண்ணமே நிறையப் பெற்றோருக்கு கிடையாது''.

டானியல் முடிக்க லோகன் தொடங்கினான்.

''சாப்பாடு நித்திரையைப் பற்றிக் கவலைப்படாமல் படி, படி என்று செக்குமாடு மாதிரிப் பிள்ளையளைப் படிப்பைச் சுற்றியே விரட்டுகினம். ஆனால் பிள்ளையளுக்கு ஓய்வு நேரம் தேவை. அதில் கலைஈடுபாடோ அல்லது அது மாதிரி வேறு பொழுது போக்குகளோ தேவை என்று பெற்றோர் நினைப்பதில்லை. இதனால், 'பிள்ளைகள் படிப்பு, அதை விட்டால் சினிமா என்ற நிலையில் கெட்டுக் குட்டிச் சுவராகப் போகுதுகள்''.

அடுத்து சின்னாச்சியின் முறை வந்தது.

''பிள்ளைகளுக்குத் தாய் தகப்பனிடம் தங்கடை கஷ்ட நஷ்டங்களைச் சொல்லலாம என்ற நம்பிக்கை வரவேணும். பிள்ளைகளுக்கு தன்னம்பிக்கையைப் பெற்றோர்தான் வளர்க்க வேணும். ஆனால் இங்கு பிள்ளைகளின் தன்னம்பிக்கையை சிதைக்கிறதே பெற்றோர்கள்தான்.

''அக்கம் பக்கத்துக் குழந்தைகளோடு ஒப்பிட்டு, அந்தப் பிள்ளை அது எழுதுது இது சொல்லுது என்று சொல்லிச் சொல்லித் தங்கடை பிள்ளைகளின் மனதில் தாழ்வு மனப்பான்மையை தங்களையறியாமலேயே சில பெற்றோர் உருவாக்கினம்.

''இதை விடக் கொடுமை பரீட்சைகளில் பாஸ் பண்ணாவிட்டால் அந்தப் பிள்ளையை ஏசி, அதோட அதன் வாழ்க்கை முடிஞ்சு போச்சு என்று நினைக்க வைப்பினம்.

''5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் இருந்து மேல் படிப்பு வரை இதுதான் நிலைமை. பரீட்சையில் பாஸ் பண்ணாத பிள்ளைகள் சிலர் தற்கொலை வரை போகுதுகள் என்றால் இது தானே காரணம்.

''பெற்றோர் தோல்விகளைத் தாங்கும் சக்தியைப் பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டும். பரீட்சைகளைத்தாண்டி வாழ்க்கை இருக்கு என்ற நம்பிக்கையைத் தரவேணும்.

''பக்கத்து வீட்டு அன்ரி மாதிரி நீ ஏன் கெட்டிக்காரியில்லை என்று பிள்ளை கேட்கத் தொடங்கினா கன வீடுகளிலை தாய்மாருக்குச் சிக்கல் தான்'' கடித்தான் லோகன்.

தேரடியில் சிரிப்பலைகள் பரவின.

நீண்ட நேரங்கள் மற்றவர்கள் கூறியவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த மாஸ்டர் தொண்டையைச் செருமிக் கொண்டு பேசத் தொடங்கினார்.

''நீங்கள் சொன்னதெல்லாம் உண்மைதான் வெளிநாடுகளில் எங்கடை பிள்ளையள் நல்லா வாறதும் அழிஞ்சு போறதும் சின்ன வயசிலை தாய் தகப்பன் வளர்க்கிற முறைகள் தான் காரணம்.

''படிப்பைத்தவிர வேறொன்றும் தெரியாமல் வளர்க்கப்படும் பிள்ளைகள் இங்கு கெட்டிக்காரராகத்தான் இருப்பினம். ஆனால் வெளிநாட்டிலைத் தனியாக சுதந்திரமாக வாழத் தொடங்கியதும், இங்கு நிறைவேற்ற முடியாதவற்றையும் அங்கு கொஞ்ச நாளில் பழகிவிடுவினம். இங்கு படிப்பைத்தவிர வேறொன்றும் தெரியாமல் இருந்த பிள்ளை, அங்கு படிப்பைத் தவிர மற்றெல்லாவற்றையும் தெரிந்து கொள்ளும். இது அளவுக்கு மீறிப்போய் மனநிலை பாதிக்கப்பட்டு இங்கு திருப்பி அனுப்பப் படுவினம். இல்லாவிட்டால் அங்கேயே எதிர் பார்ப்புகள் பொய்யாகி, தோல்விகளைத் தாங்கும் பக்குவம் இல்லாமல் வாடி வதங்குவினம்.

''ஆனால இங்கு சுதந்திரமாக வளர்க்கப்பட்டவன் தான் விரும்பிய பாடத்தை விருப்பத்துடன் படிக்க முன்னேறி விடுகிறான்.

''அவனை இங்கு வாட்டிய தரம் பிரித்தல்கள் அங்கு இல்லை. அதோட இங்கு ஊர் அடிபட்டதால், புது இடத்திலை தனக்கு தேவையானதை தானே துணிவாகத் தேடிக் கொள்கிறான்.

''இதனால்தான் இங்கு படிப்பிலை கெட்டிக்காரராக இருக்கிறவை, வெளிநாட்டிலை தடம் மாறுகினம்''

கூறி முடித்த மாஸ்டர் எழுந்து விநாசியருடன் நடந்தார். தேரடி கலைந்தது.

— ஏகலைவன்

# கடற்படைக்கு பாதுகாப்பு: அகதிகளுக்கோ அவலச்சல்!

திருகோணமலை அலஸ்தோட்ட அகதி முகாம் மக்களை இடம்மாற்ற மேற்கொள்ளப்படும் நடவடிக்கைக்கு பெரும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

இந்த அகதி முகாமை மூடிவிட்டு அகதிகளை குச்சவெளிக்கு அனுப்புவதற்கு படைத்தரப்பு நடவடிக்கை எடுத்து வருகிறது.

தம்பலகாமத்தில் சமீபத்தில் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டு சுமார் 17 படையினர் வரை கொல்லப்பட்டனர்.

அதன் பின்னர் இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் கண்ணிவெடி ஒன்றைப் புதைக்க முயன்ற புலி உறுப்பினர்கள் என சந்தேகிக்கப்படும் இருவர் அந்தக் கண்ணிவெடி தற்செயலாக வெடித்ததினால் கொல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த இரு சம்பவங்களுமே அலஸ்தோட்ட அகதி முகாம் மீது படையினரின் கழுகுப் பார்வை திரும்புவதற்குக் காரணமாக அமைந்தன.

இந்தச் சம்பவங்களுக்குக் காரணமான புலி உறுப்பினர்கள் அலஸ்தோட்ட அகதி முகாமில் இருந்தே வந்தனர் என்று படையினர் சந்தேகிக்கின்றனர்.

இவற்றுடன் திருகோணமலைக் கடற்படைத் தளத்தின் மீது விடுக்கப்பட்டிருக்கும் அச்சுறுத்தல்களையும் சமாளிக்க வேண்டிய அவசரம் படையினருக்கு இருந்து வருவதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவங்களை அடுத்தே திருமலை நகருக்கு வடக்காக உள்ள அலஸ்தோட்டம் பகுதியில் கடற்படையினர் தமது நடவடிக்கைகளை விரிவுபடுத்தி வருகின்றனர். இதன் ஒரு கட்டமே அலஸ்தோட்ட முகாம் அகதிகளை இடம் மாற்றும் முயற்சி ஆகும்.

அலஸ்தோட்டப் பகுதியில் படையினரின் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் கூட்டுப்படைத் தலைமைத் தளபதி ஜெனரல் ரோஹான் தலுவத்தையின் அறிவுறுத்தலின் பேரிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பொழுது கிடைக்கும் தகவல்களின்படி அவர் அங்குள்ள அகதி முகாமை அப்புறப்படுத்தி அதனை குச்சவெளிக்கு இடம்மாற்றப் படையினருக்கு உத்தரவிட்டிருப்பதாக உயர் இராணுவத்தரப்பிலிருந்து தெரியவருகிறது.

அலஸ்தோட்டம் திருகோணமலை மூன்றாம் கட்டையில் அமைந்துள்ளது. அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் இதனை நிர்வகித்து வருகிறது.

திரியாய், இறக்கண்டி, நிலாவெளி, இலுப்பக்குளம், சாம்பல்தீவு, அலஸ்தோட்டம், பன்குளம், கன்னியா, உப்புவெளி, குச்சவெளி, புல்மோட்டை, தம்புறுப்பிட்டி, மூதூர், சம்பூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 470 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் இரண்டாயிரம் பேர் கடந்த ஒரு தசாப்த காலமாக இங்கு வசித்து வருகின்றனர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் அகதிகளாக இந்தியா சென்று பின்னர் 1990ஆம் ஆண்டில் இலங்கை திரும்பி இந்த முகாமில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த அகதிகளின் மற்றொரு பரிதாப நிலை என்னவென்றால் அலஸ்தோட்டத்தைச் சேர்ந்த மக்கள் பலரும் தமது வாழ்விடங்களை இழந்து இந்த முகாமில் தஞ்சமடைந்திருப்பதுதான்.

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டோர் படையினரின் கெடுபிடிகள் காரணமாக அச்சத்தினால் தமது சொந்த வாழ்விடங்களை விட்டு வெளியேறியோர் பாதுகாப்பு முகாம்களைச் சூழவுள்ள பகுதிகளில் இருந்து வெளியேற்றப்பட்டோர் ஆகியோரே இங்கு பெரும் அளவில் தங்கி உள்ளனர்.

இந்த அகதிகளை குச்சவெளிக்கு இடம்மாற்றுமாறு, அரச அதிகாரிகளை படைத்தரப்பு கேட்டுக்கொண்டதையடுத்து இங்குள்ள அகதிகள் தமது எதிர்ப்பைக் காட்டி வருகின்றனர்.

கடந்த 4ஆம் திகதி இந்த முகாமைச் சேர்ந்த சுமார் 350 பேர் ஈ.பி.டி.பி. அலுவலகத்துக்குச் சென்று பொறுப்பாளர் ந. புஷ்பராஜாவிடம் இது குறித்து முறையிட்டனர். தமக்கு நியாயம் வேண்டும் என்று கோரினர்.

அவர் இது குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அறிவித்ததை அடுத்து டக்ளஸ் தேவானந்தா பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தைக்கு கடிதம் எழுதி உள்ளார்.

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு — கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தைக்கு எழுதிய கடிதத்தில், அலஸ்தோட்ட முகாம் அகதிகளை இடம்மாற்றும் நடவடிக்கையைக் கைவிடும் படியும் அவர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்லக்கூடிய சூழ்நிலை உருவாகும் வரை தற்பொழுது உள்ள முகாமிலேயே அவர்கள் தங்கியிருப்பதற்கு அனுமதிக்கப்படவேண்டும் என்றும் கோரி உள்ளார்.

பாதுகாப்புப் படையினரின் செயற்பாடுகள் சாதாரண பொதுமக்களை துன்பத்துக்கு உள்ளாக்குவது மனவருத்தத்தை ஏற்படுத்துவதாகவும் படையினரின் செயற்பாடுகளால் பொதுமக்கள் துன்பத்துக்கு உள்ளாவது மனவருத்தத்தை ஏற்படுத்துகிறது என்றும் அவர் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டி உள்ளார்.

எது எப்படி இருந்தாலும் அலஸ்தோட்ட அகதி முகாம் மக்களின் துயர வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும்.

எங்கெல்லாம் பாதுகாப்புப் பயப்படுத்தப் படுகிறதோ அங்கெல்லாம் இருக்கும் தமிழர்களை வெளியேற்றும் படை அதிகாரிகள் ஒரு சிலரின் ஆலோசனைகள் தமிழர்கள் அனைவருமே பயங்கரவாதிகள் என்று ஏற்கனவே பேரினவாதிகள் மத்தியில் நிலவி வரும் எண்ணக்கருவை மேலும் பலப்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை.

அத்துடன் இவ்வாறான நெருக்கடிகளால் இளைஞர் யுவதிகளும் குழந்தைகளும் நாளை என்ன செய்வார்கள் என்பது சொல்லித்தான் தெரியவேண்டியதில்லை.

— எஸ். எஸ். ஆர்.




## வாக்குப் போட்டால் கம்பியூட்டர்

கல்விக்கு உயிர் கொடுத்தோர் சாவதில்லை. எதிரியே யாயினும் கல்வியை நேசிப்பவனுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும் என்பார்கள். ஆனால் பொறுப்பான பதவியில் உள்ள தமிழ்ப் பிரதிநிதி ஒருவரின் செயற்பாடுகள் இதற்கு நேர்மாறாக இருக்கின்றனவாம்.

அச்சுவேலிக்கு அப்பால் உள்ள இடைக்காட்டில் இருக்கும் ஒரு கல்விச்சாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்கம் அண்மையில் அந்தப்பிரதிநிதியை யாழ்ப்பாணத்தில் சந்தித்ததாம்.

பாடசாலை அபிவிருத்திக்கு உதவி பெறும் வகையில் பல கோரிக்கைகளை அந்தச்சங்கம் முன் வைத்தது. கம்பியூட்டர் வசதி செய்து தரவேண்டும் என்பதும் கோரிக்கைகளில் ஒன்று.

''நல்ல கோரிக்கைகள்தான், ஆனால் இடைக்காட்டில் இருந்து எமக்கு வாக்குகள் கிடைக்கவில்லையே. யாருக்கு வாக்குப் போட்டீர்களோ அவர்களிடம் சென்று கம்பியூட்டர் கேட்கலாமே'' என்றாராம் பொறுப்பாளர் பதவி வகிக்கும் அந்தத் தமிழ்ப் பிரதிநிதி. ஆசிரியர் சங்கத்தினர் அதிர்ந்து போனார்கள்.

வடக்கை அபிவிருத்தி செய்வதில் கவனம் செலுத்தி வருவதாகக்கூறும் அந்தத் தமிழ்ப் பிரதிநிதியின் வண்டவாளம் பற்றி இப்போது வடக்கு எங்கும் பலமாகப் பேச்சு அடிபடுகிறது.

## நகரத் தந்தைக்கு வாழ்த்து

அதிகாரமுள்ள மங்களமான அமைச்சர் வீடுகளையும் கடைகளையும் உடைக்கும் திருப்பணியில் ஈடுபட்டிருப்பதை எப்படி எதிர்க்கலாம் என்று ஆராய கடந்த வாரம் இரண்டு சந்திப்புகள் இடம் பெற்றன.

கொழும்பு நகரத் தந்தையின் இல்லத்தில் நடைபெற்ற இச்சந்திப்பின் போது நகரத் தந்தையின் முயற்சிக்கு பொரல்லைப் பக்க அதிகார மன்ற உறுப்பினரும், கம் உதாவ திட்டங்களுக்கு சீமெந்து வழங்கிப் புகழ் பெற்ற ஒரு உறுப்பினரும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்களாம்.

கண்மூடித்தனமாக கடைகளையும், வீடுகளையும் உடைக்கும்போது அதை நல்ல காரியம் என்று பொரல்லைப் பக்க முஸ்லிம் அரசியல்வாதி மங்களமானவரின் செயலுக்கு சான்றுப் பத்திரம் வாசித்தாராம். முன்னாள் சீமெந்து விநியோகஸ்தரோ, மக்கள் அணி திரட்டுவதை முட்டாள் தனம் என்றாராம்.

மூன்றெழுத்து சிவப்புக் கட்சியும் மற்றும் சில கட்சிகளும் வீதிப் போராட்டத்துக்கும், மக்களை அணி திரட்டவும் வலியுறுத்திய போது நகரத்தந்தை எதிர்ப்புகளை எல்லாம் பொருட்படுத்தாமல் மேற்படி கட்சியின் திட்டத்துக்கு இணக்கம் தெரிவிக்க முன்வந்தாராம். அதைப்பலரும் பாராட்டினார்கள்.

## ஒரு தாய் மக்கள் நாம் என்போம்

மேற்கு மாகாணத்தில் அரசியல் அநாதைகளாக்கப்பட்ட தமிழ் மக்களுக்கென ஒரு தனியான முன்னணியை மனோகரமானவர் உருவாக்கிய பின்பு அவரது தொழிலாளர் கட்சிக்கும், மாமனிதரின் கட்சிக்கும் இடையில் புரிந்துணர்வு அடிப்படையிலான பிணைப்பு ஏற்பட்டதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

மேற்படி இரண்டு கட்சிகளிலுமுள்ள முக்கியஸ்தர்கள் மத்தியில் இப்படிப் பேசப்படுகிறது.

மனோகரமானவரின் முன்னணியில் வடக்கு – கிழக்குடன் தொடர்புடைய கொழும்பு வர்த்தகப் பிரமுகர்களும், இந்து வாலிபர்களும் உள்ளடங்கியிருக்கின்றனர். இவர்கள் இந்தப் பிணைப்பைப் பெரிதும் விரும்புகின்றனர்.

இரண்டு கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் சில சுற்றுப் பேச்சுவார்த்தைகள் காதும் காதும் வைத்தாற் போல நடந்து முடிந்திருக்கின்றன. ஏற்கனவே நடந்து முடிந்த பேச்சுவார்த்தைகள் வெற்றி என்று தெரிவிக்கப்படுகிறது. விரைவில் உத்தியோகபூர்வமாக முடிவு எடுத்து ஊடகங்களுக்கும் அறிவிக்கப்படுமாம்.

அரசியல் அம்பலத்தாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை உறுதிப்படுத்த இருதரப்பு முக்கிய புள்ளிகளிடம் கேட்ட போது அம்பலத்தாரின் காதிலும் சில விடயங்களைப் போட்டு வைத்தார்கள்.

மாமனிதரின் கட்சி ஈழத்தமிழருக்கான கட்சி; மனோகரமானவரின் கட்சி, மலையகத் தமிழர்களின் கட்சி. மனோகரமானவரின் மேல் மாகாணத்துக்கான மக்கள் முன்னணி மேல் மாகாணத்தில் உள்ள சகல தமிழ் மக்களுக்குமான கட்சி.

இந்த மேல் மாகாணத்து தமிழ் மக்களுக்கான கட்சியோடு மாமனிதரின் கட்சியும் மலையகத் தமிழருக்கான கட்சியும் இணைந்து செயற்பட உள்ளன. மேல் மாகாணத்துடன் தொடர்புபட்ட சகல பிரச்சினைகளிலும் இம்மூன்று கட்சிகளும் கூட்டாகச் சேர்ந்து தீர்வு காண முயலும். எனினும் மாமனிதரின் கட்சியும் மனோகரமானவரின் மலையகத்துக்கான கட்சியும் வழமை போலவே தத்தமது தனித்தன்மையைப் பேணிப் பாதுகாத்து வரும்.

இப்படித்தான் அவர்கள் அரசியல் அம்பலத்தாரின் காதில் போட்டு வைத்தார்கள். நல்லது நடக்க அட்வான்ஸாக வாழ்த்துக்கள்.

## புது உத்வேகம்

இரண்டெழுத்துத் தமிழ் அமைப்பொன்றின் தடையை நீக்கச் செய்வதற்குத் தமிழ்க் கட்சிகள் அமைப்பு மாறுபட்ட வகையில் நடவடிக்கை எடுக்க உள்ளதாம். சபாஷ்!

முன்பு போல் உள்ளூரில் உள்ள தூதுவர்களை மட்டும் சந்திப்பதால் பயனில்லை என்பதால் அதற்கு மேல் சர்வதேச மட்டத்தில் முக்கியஸ்தர்களைச் சந்தித்துப் பேச நடவடிக்கை எடுக்கப்படுகிறதாம்.

அமெரிக்க காங்கிரஸ் முக்கியஸ்தர்கள், பிரிட்டிஷ், இந்தியப் பிரதமர்கள், ஜெயலலிதா... என்று இந்த முக்கியஸ்தர்கள் பட்டியல் நீள்கிறது.

''இரண்டெழுத்து தமிழ் அமைப்பின் தடையை ஏன் நீக்க வேண்டும் என்பது குறித்து கடிதம், தொலை மடல், தொலை பேசி வாயிலாக விளக்குவோம். சம்பந்தப்பட்டவர்களைக் கூடிய வரை நேரடியாகச் சந்தித்துப் பேசி நடவடிக்கை எடுக்கவும் இப்போது திட்டமிடப்பட்டிருக்கிறது'' என்கிறார்கள் சில முக்கியஸ்தர்கள்.

இந்த தமிழ்க்கட்சி அமைப்பில் போதிய அக்கறை காட்டாமல் ஒதுங்கி இருந்த சில தமிழ்க் கட்சித் தலைவர்கள் கடந்த கூட்டத்தில் கலந்து கொண்டமைக்கு பெரும் வரவேற்பு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதே நேரம் ஒரு தமிழ்க்கட்சித் தலைவரினால் இரண்டெழுத்து தமிழ் அமைப்பு பற்றி எழுப்பப்பட்ட கேள்விகள், அவர்கள் வேறு கட்சி சார்பாகப் பேசுகிறார்களோ என்ற சந்தேகத்தையும் கிளப்பி உள்ளதாம்.

தடை செய்யப்பட்ட நிலையில் இரண்டெழுத்துத் தமிழ்க் கட்சி அமைப்பு ஏன் சமாதானம் பேசக்கூடாது? முன்பு அவர்கள் நிபந்தனை விதிக்கவில்லை. இப்போது நிபந்தனை விதித்திருக்கிறார்கள். இதற்கு நாம் என்ன பதிலளிக்கப் போகிறோம்? என்று அவர் கேள்விகளை எழுப்ப அவற்றிற்குத் தகுந்த பதில் கொடுக்கப்பட்டதாம்.

கூட்டமைப்பை மாதம்தவறாமல் கூட்டவும், கூட்டங்களைக் கூட்டும் பொறுப்பை ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு கட்சியிடம் ஒப்படைக்கவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதாம்.

# வவுனியா தரணியகுளம் வீடமைப்புத் திட்டம்

# குறைபாடுகளுக்கு தாம் பொறுப்பல்ல என்கிறார் பிரதி நில அளவையாளர் நாயகம்

வவுனியா தரணியகுளம் வீடமைப்புத் திட்ட வீடுகளில் உள்ள குறைபாடுகளுக்கு நில அளவையாளர் திணைக்களம் எந்த விதத்திலும் பொறுப்பு அல்ல.

இப்படி வடகிழக்கு மாகாண பிரதி நில அளவையாளர் நாயகம் க.தவலிங்கம் 'சுடர் ஒளி'க்குக் கடிதம் எழுதியிருக்கிறார்.

மேற்படி வீடமைப்புத்திட்ட வீடுகளில் உள்ள குறைபாடுகள் கடந்த மே 20ஆம் திகதி 'சுடர் ஒளி'யில் ''அழகான வீடமைப்புத் திட்டம், குறைகளோ ஏராளம், ஏராளம்'' என்ற தலைப்பில் பிரசுரிக்கப்பட்டிருந்த கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன.

''நீங்கள் கட்டிய வீடுகளில் நீர் உட்புகுகிறதாமே!'' என்று வீடமைப்பு அதிகார சபை கட்டுமாணப்பணிகளுக்குப் பொறுப்பான ஓர் அதிகாரியிடம் 'சுடர் ஒளி' நிருபர் கேட்டார்.

அதற்கு அந்த அதிகாரி, ''எமக்கு நில அளவைத் திணைக்களத்தினர் தந்த வரைபடத்தின் படிதான் கட்டுமாணப்பணியை மேற்கொண்டோம்'' என்று பதில் அளித்தார்.

இப்படிக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்தது. படம் வரைந்து கொடுத்த நில அளவைத் திணைக்களம் குறைபாட்டுக்குப் பொறுப்பு அல்ல என்கிறார் பிரதி நில அளவையாளர் நாயகம் தவலிங்கம்.

''குறிப்பிட்ட வீடமைப்புத் திட்டத்தை அமைப்பதற்குரிய இடத்தைத் தெரிவு செய்தவர்கள் அரச அதிபர், பிரதேச செயலாளர் மற்றும் காணி உத்தியோகஸ்தர் ஆகியோரே.

இவர்கள் இடத்தைத் தெரிவு செய்து ஒவ்வொரு காணியையும் குறிப்பிட்ட விஸ்தீரணத்தில் மீளக்குடியமர்த்துவதற்காக சிறு காணித் துண்டுகளாகப் பிரித்துத் தரும்படி அக்காணி அமைந்துள்ள இடத்தின் பிரதேச செயலாளர் நில அளவைத் திணைக்களத்தைக் கோரினார். அதற்கிணங்க கிராமசேவை உத்தியோகஸ்தர், காணி ஆணையாளர் திணைக்கள உத்தியோகஸ்தர் ஆகியோரின் உதவியுடன் எமது திணைக்கள நில அளவையாளர்கள் காடாக இருந்த குறிப்பிட்ட இடத்தை அளந்து வீடமைப்பு, பாதைகள், பொதுத் தேவைகள், பாடசாலை போன்ற அமைப்புக்களுக்கு ஏற்றவாறு சிறுதுண்டுகளாகப் பிரிப்பதற்கான (Blocking out diagram) படம் கீறி (சுவடுவரை தயாரித்து) தந்தார்கள். அது குறிப்பிட்ட பிரதேச செயலாளரிடம் கொடுக்கப்பட்டது.

அந்தப் படத்தை (Blocking out diagram) வீடமைப்புத் திட்டக்குழுவும் மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்துத் திணைக்களங்களும் சரியென ஏற்றுக்கொண்டன. அதன் படத்திற்கமைய நிலத்தில் சிறு காணித் துண்டுகளாகப் பிரித்து கனி அடித்து, சம்பந்தப்பட்ட எல்லாத் திணைக்களங்களுக்கும் எல்லை காட்டப்பட்டது. அத்துடன் எமது திணைக்களப் பணி முடிவடைகிறது.

மேலும் அது கட்டடம் அமைக்கக்கூடிய இடமா, எவ்வளவு உயரத்தில் அத்திபாரம் போடப்படவேண்டும், வடிகால் அமைக்க வேண்டிய முறை என்பவற்றை சம்பந்தப்பட்ட திணைக்களங்களே முடிவு செய்தல் வேண்டும்.

எனவே கட்டடம் நீரில் மூழ்கியிருந்தால் குறிப்பிட்ட காணி வீடு கட்டக்கூடியதா, அல்லது வேறு தேவைக்கு உகந்ததா என்பதை நிர்ணயிக்கவேண்டியது சம்பந்தப்பட்ட திணைக்களங்களே.

அத்துடன் குறிப்பிட்ட காணியினுள் உள்ள நீரை எவ்வாறு வடிகால் அமைத்து வெளியேற்றுவது என்பது எமது பணி அல்ல என்பதை தங்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்''

இப்படி வடக்கு – கிழக்கு மாகாண பிரதி நில அளவையாளர் நாயகம் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

# பண்டாரவளையில் கொமர்ஷல் வங்கி

இலங்கையில் பெரிய கம்பியூட்டர் வலையமைப்புடன் கூடிய வங்கியாக விளங்கும் கொமர்ஷல் வங்கி அண்மையில் அதன் 84ஆவது கிளையை பண்டாரவளையில் திறந்து வைத்தது.

'கொம்நெட்' ஊடாக ஏனைய 83 வங்கிகளுடன் புதிய வங்கிக் கிளை இணைக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன் பண்டாரவளையில் நிறுவப்பட்டுள்ள புதிய கிளை 'கட் தானியங்கி டெல்லர் இயந்திரம்' 'கொம்டெல் டெலி பேங்கிங்' முதலான வசதிகளைக் கொண்டு 24 மணி நேரமும் இயங்கும் கிளை ஆகும்.

நகரில் வாழும் மக்களுக்கு துரித சேவைகளை வழங்கும் வங்கியொன்றை பண்டாரவளை பெற்றுள்ளதாக வங்கித் திறப்பு விழாவில் பேசிய கொமர்ஷல் வங்கியின் நிர்வாக இயக்குநர் அமிதாகுணரத்ன தெரிவித்தார்.

''உயர் இலாபமும், தொழில்நுட்ப முன்னேற்றமும் கொண்ட வங்கி என்ற வகையில் பண்டாரவளை மக்களின் வங்கித் தேவைகளை எம்மால் பூர்த்தி செய்ய முடியும்'' என்றும் அவர் சொன்னார்.

பண்டாரவளைக் கிளையின் முகாமையாளர் திருச் செல்வநாதன் பேசுகையில்

பண்டாரவளைக் கிளையில் கடமையாற்ற உயர்பயிற்சி பெற்ற திறமையான அலுவலர்கள் நியமிக்கப்பட்டு இருப்பதால் சிறந்த சேவை வழங்கக் கூடிய உத்தரவாதத்தை என்னால் வழங்க முடியும்'' என்றார்.



கொமர்ஷல் வங்கியின் 84ஆவது கிளை திறப்பு விழாவின் போது வங்கியின் நிர்வாக இயக்குநர் அமிதா குணரத்ன குத்துவிளக்கேற்றும் காட்சி.


புதிய இடத்திற்கு மாறியுள்ளோம்

379-1/5, Galle Road இல் இயங்கிய எங்களது கம்ப்யூட்டர் கல்வி நிறுவனம் தற்போது புதிய சூழலில் புதிய இடத்திற்கு மாறியுள்ளோம் என்பதை மாணவர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்

புதிய விலாசம்
மேலதிக விவரங்களுக்கு

British Institute of Computer Tecnology
No:10, 36th Lane, Wellawatta. Tel: 553557 (Opposite Mangala Trade Centre)

# லைலா வென்றார் ஸ்டைலா!

மகளிர் குத்துச் சண்டைப் போட்டியில் மீண்டும் வெற்றிவாகை சூடியுள்ளார் லைலா அலி. ஜெக்கி ஃபிறேஸியர் எனும் வீராங்கனையை தோற்கடித்துள்ளார் லைலா.

இப்போட்டி கடந்த 8ஆம் திகதியன்று நியூயோர்க்கில் நடைபெற்றது.

மகளிர் குத்துச் சண்டையில் இணையற்ற வீராங்கனையாகக் கருதப்படுபவர் லைலா அலி. எனினும் ஜெக்கி ஃபிறேஸியருடனான போட்டி பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்டது. காரணம் ஜெக்கி முன்னாள் குத்துச் சண்டை சாம்பியன் ஜோ ஃபிறேஸியரின் மகள் என்பதே.

முஹமது அலி, ஜோ ஃபிரேஸியர் ஆகியோருக்கிடையில் 3 குத்துச் சண்டைப் போட்டிகள் நடைபெற்றுள்ளன.

1971இல் ஃபிறேஸியர் முஹமது அலியை தோற்கடித்தார். 1974இலும் 1975இலும் நடைபெற்ற போட்டிகளில் முஹம்மது அலி வெற்றியீட்டினார்.

எனவே அலி — ஃபிறேஸியர் குடும்பங்களுக்கிடையிலான நான்காவது மோதலாக லைலா அலி — ஜெக்கி ஃபிறேஸியர் போட்டி கருதப்பட்டது.

சர்வதேச குத்துச்சண்டைப் போட்டியில் முக்கிய இடம்பெற்ற முதலாவது மகளிர் குத்துச்சண்டைப் போட்டி இதுவாகும்.

இப்போட்டியில் தாம் வெற்றி பெறுவது உறுதி என 23 வயதான லைலா ஏற்கனவே சூளுரைத்திருந்தார்.




''ஜெக்கிக்கு ஒழுங்காக குத்துச் சண்டையிடத் தெரியாது. அவருக்கு நான் கற்றுக்கொடுக்கப் போகிறேன்'' என்று லைலா கூறியிருந்தார்.

ஜெக்கி ஃபிறேஸியரும் விடவில்லை. ''என்னை அவர் குறைத்து மதிப்பிடுகிறார். ஆனால் இதுவரை இல்லாத அளவுக்கு அவரைத் துவம்சம் செய்யப் போகிறேன்'' என ஜெக்கி கூறினார். ஆனால் அதைச் செயற்படுத்த ஜெக்கியால் முடியவில்லை.

முஹம்மது அலியின் ஒன்பது பிள்ளைகளில் ஏழாமவர் லைலா. 1999 ஒக்டோபரில் முதன் முதலாக தொழில்சார் குத்துச்சண்டைக் களத்தில் லைலா பிரவேசித்தார். கவர்ச்சியான முகமும் கம்பீரமான உடலமைப்பும் கொண்ட லைலாவுக்குத் தகுந்த போட்டியாளர் களைத் தேடுவது சிரமமானது எனக் கூறப்படுகிறது.

ஜெக்கி ஃபிறேஸியருடனான போட்டி லைலாவின் 10ஆவது போட்டியாகும். அனைத்திலும் லைலாவே வெற்றி பெற்றுள்ளார்.

ஜெக்கி ஃபிரேஸியர் தனது தந்தையின் 11 பிள்ளைகளில் ஒருவர். 39 வயதான ஜெக்கி 3 பிள்ளைகளின் தாயார். அவர் ஒரு சட்டத்தரணியுமாவார்.

17 மாதங்களுக்கு முன் குத்துச்சண்டைக் களத்தில் பிரவேசித்தார் ஜெக்கி. 7 போட்டிகளில் பங்கு பற்றி அனைத்திலும் நொக்அவுட் மூலம் வெற்றிபெற்றார். ஆனால் எட்டாவது போட்டியில் லைலாவிடம் தோற்றுவிட்டார்.












## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30 — 10 — 1945 | 06 — 05 — 2001 |



### அமரர் கனகையா நந்தகுமார்

(நிர்வாக முகாமையாளர், 'உதயன்' பணிமனை, யாழ்ப்பாணம்)

*எம் அருமை அப்பாவே!*
*எம் அருமை சோதரனே!*
*திடீர் மரணம் வந்ததேனோ?*
*திடீர் பிரிவு வாட்டுதையா*
*ஆறுமோ எம் துயரம்?*
*ஆறாது எம் காலம் வரை.*
*எம் இறைவன் கூட இருந்து!*
*உமக்கு சாந்தி தர வேண்டுகிறோம்.*

எமது குடும்பத் தலைவரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட அனைவருக்கும், குறிப்பாக 'உதயன்' நிர்வாக இயக்குநர் மற்றும் உதயன் ஸ்தாபன ஆசிரியர், பணியாளர்கள் அனைவருக்கும், பரி.யோவான் கல்லூரி அதிபர், கல்லூரிச் சமூகத்தினருக்கும், பல வழிகளிலும் உடன் நின்று உதவிபுரிந்த யாழ். மாவட்ட நாடாளுமன்றப் பிரதிநிதி திரு.தி.மகேஸ்வரன் அவர்களுக்கும், கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவையினருக்கும், யாழ். றோட்டறிக் கழகத்தினருக்கும், விளையாட்டுத்துறை சார்ந்த நிறுவனங்கள் — அமைப்புக்களைச் சேர்ந்தோருக்கும், நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தினருக்கும், இரங்கலுரை நிகழ்த்திய அனைவருக்கும், தொலைபேசி ஊடாகவும், கடிதம் மூலமாகவும், தந்தி மூலமும், பத்திரிகை வாயிலாகவும், பிரசுரங்கள் மூலமாகவும் மற்றும் மலர் மாலைகள், மலர் வளையங்கள் சாத்தியும், அஞ்சலிகளையும், அனுதாபங்களையும் தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அயலவர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*37, முதலியார் வீதி,*
*நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம்.*

*— குடும்பத்தினர்*






இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை பெரக்கும்பா பிளேஸ் 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர்பிரைசஸ் ஸ்தாபனத்தினால் 2001 ஜூன் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படு